விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: பதினெட்டு

Valampurii

சங்கு 11 வள்ளுவர் ஆண்டு 2041 வைகாசி 07 வெள்ளிக்கிழமை (21.05.2010) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 153

ராம்கோ

MADRAS CEMENTS LTD


RAMCO CEMENT

RAMCO

ஆசியாக் கண்டத்தில் முதலாந்தர தொழிற்சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது ராம்கோ சிமெந்து

# யுத்தக் குற்றச்சாட்டை மறைத்து சமாதானத்தை வெல்ல முடியுமா?

## கேள்வி எழுப்புகிறார் ஹிலாரி கிளின்டன்



(வாஷிங்டன்)

யுத்த காலத்தில் எத்தனை ஆயிரம் பொதுமக்கள் கொல்லப்பட்டனர் என்பதை மறைத்து, தீர்வுத் திட்டம் ஒன்றை முன்வைக்க இலங்கை அரசால் முடியலாம். ஆனால் அதன் மூலம் இலங்கை அரசாங்கத்தினால் சமாதானத்தை வெற்றி கொள்ள முடியுமா? என அமெரிக்க வெளியுறவுத்துறை செயலர் ஹிலாரி கிளின்டன் கேள்வி எழுப்பியுள்ளார்.

(18 ஆம் பக்கம் பார்க்க)

## கூட்டமைப்பு எம்.பிக்கள் இன்று வன்னிக்கு விஜயம்

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் வன்னிப் பகுதிக்கான விஜயம் ஒன்றை இன்று மேற்கொள்ளவுள்ளதாகக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன் தெரிவித்துள்ளார்.

தமது 4 நாள் விஜயத்தின் முதற்கட்டமாக வவுனியா நலன்புரிக் கிராமங்களுக்குச் சென்று இடம்பெயர்ந்த மக்களைச் சந்திக்கவுள்ளனர். இதன்போது கூட்டமைப்பின் 14 நாடாளுமன்றஉறுப்பினர்களும்கலந்துகொள்ளவுள்ளனர். அதேவேளை இன்றிலிருந்து 4 நாள்களுக்கான பயணத்தை மேற்கொள்ளத் திட்டமிட்டுள்ளனர். (ச-9)

## யாழ்.இணைப்புக் குழுவின் தலைவர்களாக அமைச்சர் டக்ளஸ் மற்றும் ஆளுநர் நியமனம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட இணைப்புக் குழுவின் இணைத் தலைவர்களாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மற்றும் வட மாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி ஆகியோர் ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டுள்ளனர்.

ஜனாதிபதியினால் முன்னெடுக்கப்படும் மகிந்த சிந்தனையின் கீழ் எதிர்கால நோக்கு எனும் திட்டத்திற்கமைய அரசாங்க மற்றும் அரச சார்பற்ற அமைப்புகளினால் முன்னெடுக்கப்படும் அனைத்துச் செயற்றிட்டங்களையும் அமுலாக்குதல், வழிநடத்துதல் மற்றும் கண்காணிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளும் இணைப்புக் குழுவின் இணைத் தலைவர்களாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா,

(18 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்ப்பாண மாநகர சபை மேயரின் செயலரைக் கைது செய்ய உத்தரவு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாநகர சபை மேயர் யோகேஸ்வரி பற்குணராசாவை இன்று நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு யாழ்ப்பாண நீதிமன்ற நீதவான் நேற்று உத்தரவிட்டுள்ளார்.

அத்துடன் மேயரின் செயலாளரான அவரின் கணவர் பற்குணராசாவை இன்று பகல் 12 மணிக்குள் கைது செய்து நீதிமன்றில் ஆஜர் செய்யுமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

மாநகர துணை மேயர் றீகன், சாவகச்சேரி நீதவானை அச்சுறுத்தியதாகக் குற்றஞ் சுமத்தப்பட்டுக் கைது செய்யப்பட்டிருந்த வேளையில் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்ட பணிப் பகிஷ்கரிப்பு விளம்பரம் தொடர்பிலேயே இந்த உத்தரவு

(18 ஆம் பக்கம் பார்க்க)

# சனல்-4 தொலைக்காட்சி வெளியிட்ட வீடியோக் காட்சிகள் பொய்யானது!

## ஹெகலியவும் பொன்சேகாவும் மறுப்பு

(கொழும்பு)

சனல்-4 தொலைக்காட்சி அண்மையில் வெளியிட்ட வீடியோக் காட்சி குறித்து அலட்டிக் கொள்ளப் போவதில்லை என ஊடகத்துறை அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெலவும் இராணுவம் போர்க் குற்றம் எதனையும் புரியவில்லை என முன்னாள் இராணுவத் தளபதியும் நாடாளுமன்ற உறுப்பினருமான ஜெனரல் சரத் பொன்சேகாவும் தெரிவித்துள்ளனர்.

சனல்-4 தொலைக்காட்சியில் அண்மையில் ஒளிபரப்பப்பட்ட வீடியோக் காட்சி குறித்து அரசாங்கம் அலட்டிக் கொள்ளப் போவதில்லை எனத் தகவல் ஊடகத்துறை அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

தகவல் திணைக்களத்தில் நேற்றுக் காலை நடைபெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அமைச்சர் இவ்வாறு கூறினார்.

சனல்-4 புதிய தகவல் குறித்து அரசாங்கத்தின் நிலைப்பாடு என்னவென்று ஊடகவியலாளர் ஒருவர் கேட்ட கேள்விக்குப் பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

(18 ஆம் பக்கம் பார்க்க)

## உள்ளே...

கொழும்பு கல்வி வலய பாடசாலைகளில் க.பொ.த. உயர்தரப்பரீட்சை எழுதும் மாணவர்களுக்கு கொழும்பு வணிகவள நிலையம் நடத்திய முன்னோடிப் பரீட்சை

பொது ஆங்கிலம்-II

பாட மாதிரி வினாத்தாள்

# விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரன் மே மாதம் 19 ஆம் திகதியே உயிரிழந்தார்

## மே 18 அல்ல என்கிறார் சரத் பொன்சேகா



(கொழும்பு)

விடுதலைப்புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் கடந்த வருடம் மே மாதம் 19ஆம் திகதியே கொல்லப்பட்டதாகவும் 18ஆம் திகதி அல்லவெனவும் முன்னாள் இராணுவத் தளபதியும் நாடாளுமன்ற உறுப்பினருமான ஜெனரல் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ விடுதலைப் புலிகளின் தலைவர் கொல்லப்பட்டதாக கடந்த வருடம் மே மாதம் 18ஆம் திகதி நாடாளுமன்றத்தில் அறிவித்திருந்தார். எனினும் இந்த அறிவிப்பின் பின்னரே கடந்த மே மாதம் 19 ஆம் திகதியே பிரபாகரன் கொல்லப்பட்டதாகவும் ஜெனரல் பொன்சேகா கூறியுள்ளார்.

விடுதலைப்புலிகளுக்கு எதிராக போரை முன்நின்று நடத்திய சரத் பொன்சேகா இலங்கை இராணுவத்தினரால் சிறை வைக்கப்பட்டுள்ள நிலையில், நாடாளுமன்றத்தில் நேற்று ஆங்கில ஊடகமொன்றிடம் இதனைக் கூறியுள்ளார்.

இதேவேளை ஜனநாயக தேசிய முன்னணியின் விசேட செய்தியாளர் மாநாடு நாடாளுமன்றக் கட்டிடத் தொகுதியில் நேற்று நடைபெற்றது.

(18 ஆம் பக்கம் பார்க்க)

## களனிப் பல்கலைக்கழக வெளிவாரிப் பரீட்சை ஒத்திவைப்பு

(கொழும்பு)

நாட்டில் தற்போது ஏற்பட்டிருக்கும் சீரற்ற காலநிலைகாரணமாக எதிர்வரும் 22,23 ஆம் திகதிகளில் நடைபெறவிருந்த களனிப் பல்கலைக்கழக வெளிவாரி கலைமாணி (பொது) பட்ட இரண்டாம் பரீட்சையைத் தவிர்ந்த ஏனைய அனைத்துப் பரீட்சைகளும் கால வரையறையின்றி ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக பரீட்சை ஆணையாளர் நாயகம் அநுர எதிரிசிங்க அறிவித்துள்ளார்.

இப் பரீட்சைகள் நடைபெறும் திகதி மற்றும் கால அட்டவணை உரிய பரீட்சார்த்திகள் மற்றும் பரீட்சை மண்டப செயற்குழுவினருக்கும் எழுத்து மூலம் அறிவிக்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார். (ச)

## விடுதலைப் புலிச் சந்தேக நபருக்கு 10 வருடக் கடூழிய சிறைத்தண்டனை

(கொழும்பு)

கொழும்பு நகரில் சேதத்தை ஏற்படுத்தும் நோக்கில் வெடி பொருள்களை கொண்டுவந்ததாக சுமத்தப்பட்ட குற்றச்சாட்டை ஏற்றுக் கொண்ட விடுதலைப்புலி சந்தேக நபர் ஒருவருக்கு கொழும்பு மேல் நீதிமன்றம் 10 வருட கடூழிய சிறைத்தண்டனை விதித்துள்ளது.

பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் சட்டமா அதிபர் முன்வைத்த இரண்டு குற்றச் சாட்டுக்களை சந்தேக நபர் ஏற்றுக்கொண்டுள்ளார்.

இதனையடுத்து மேல் நீதிமன்ற நீதிபதி சுனில் ராஜபக்ஷ இந்த உத்தரவை பிறப்பித்துள்ளார்.

முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த மருத்துவர் லிங்கம் பத்மநாதன் என்ற சந்தேக நபருக்கே இந்த கடூழிய சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

2008 செப்ரம்பர் மாதம் 27ஆம் திகதி அல்லது அதற்கண்மைய தினமொன்றில் ரி.என்.ரி. மற்றும் சி 4 ரக வெடிமருந்துகளை கொண்டு சென்றார் என்ற குற்றச்சாட்டில் சந்தேக நபர் பாதுகாப்புத் தரப்பினரால் கைது செய்யப்பட்டார். (ச-5)

## விபத்துச் சம்பவத்தில் குடும்பஸ்தர் காயம்

(யாழ்ப்பாணம்)

கிளிநொச்சியிலிருந்து யாழ்ப்பாணம் வந்துகொண்டிருந்த மோட்டார் சைக்கிளும் இராணுவ பிக்கப் வாகனமும் மோதிக்கொண்டதில் குடும்பஸ்தர் ஒருவர் காயமடைந்தார்.

இச் சம்பவம் நேற்று முன்தினம் இரவு பளைப் பகுதியில் இடம் பெற்றுள்ளது. இதில் அரியாலையைச் சேர்ந்த எஸ்.பி.ரஞ்சித் (வயது 46) என்பவரே காயமடைந்தவரா வார்.

காயமடைந்த இவர் பளை மற்றும் சாவ கச்சேரி வைத்தியசாலைகளில் அனுமதிக் கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். சேதமடைந்த இரைது மோட்டார்சைக்கிளை கொடிகாமம் பொலிஸார் எடுத்துச் சென்றனர். (எ-30)

## அடுத்து வருகிறது 'பந்து' காலநிலை மையம் தீர்மானம்

(கொழும்பு)

வட இந்து சமுத்திரத்தில் அடுத்து ஏற்படும் புயலுக்கு பந்து என பெயரிடப்பட்டுள்ளது. உலக காலநிலை மையம் இதனைத் தீர்மானித்திருக்கிறது.

அடுத்தடுத்து வரும் புயலுக்கான பெயர்களை உலகநாடுகள் பரிந்துரைக்க அதனை மேற்படி மையம் தீர்மானிப்பது நடைமுறையில் இடம் பெற்றுவரும் செயற்பாடாகும்.

தற்போது ஆந்திரா, சென்னை மற்றும் இலங்கையின் வடக்குப் பகுதிகளில் பெரும் பாதிப்பை ஏற்படும் லைலா புயலுக்குப் பாகிஸ்தானே பெயர் சூட்டியது.

வட இந்து சமுத்திரத்தில் அமைந்துள்ள பங்களாதேஷ், இந்தியா, மாலைதீவு, மியன்மார், ஓமான், பாகிஸ்தான், இலங்கை, தாய்லாந்து போன்ற நாடுகள் இதுவரை 64 பெயர்களை குறிப்பிட்டுள்ளது.

இந் நாடுகளே காலத்துக்குக் காலம் அடுத்துவரும் புயலுக்கான பெயர்களை சிபார்சு செய்கின்றன.

கடைசியாக வீசிய ஆறுபுயல்களின் பெயர்கள் இவைதான் நிஷா (பங்களாதேஷ்), பிஜி (இந்தியா), அய்லா (மாலைதீவு), பைன் (மியன்மார்), வார்ட் (ஓமான்) தற்போதுள்ளது லைலா. இனி வரப்போவது பந்து. 1970 வதுகளில் ஜெனிவாவிலுள்ள உலககாலநிலை மையம், பசுபிக் சமுத்திர நாடுகளிடம் புயல் பெயர் தொடர்பான பட்டியலைக் கோரியிருந்தமை குறிப்பிடத்தக்கது. 2000ஆம் ஆண்டிலேயே இந்து சமுத்திர நாடுகளிடம் இதற்கான கோரிக்கை விடுக்கப்பட்டது. (ச-5)

## விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

**பொறியியல் உதவியாளர்**

நீர்ப்பாசன திணைக்களத்தின் இலங்கை பொறியியல் உதவியாளர் சேவையின் வகுப்பு II தரம் II இற்கான பொறியியல் உதவியாளர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பதாரி க.பொ.த (சா/த) பரீட்சையில் இரு அமர்விற்கு மேற்படாதவாறு தமிழ், கணிதம், ஆங்கிலம், விஞ்ஞானம் ஆகிய பாடங்களில் திறமை சித்தியுடன் க.பொ.த (உயர்தர) பரீட்சையில் பௌதிகவியல், தூய கணிதம் உட்பட 4 பாடங்களில் ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

விண்ணப்பங்கள்யாவும் நீர்ப்பாசன பணிப்பாளர் நாயகம், நீர்ப்பாசன திணைக்களம், இல. 230 பௌத்தலோக மாவத்தை கொழும்பு-7 என்ற முகவரிக்கு எதிர்வரும் யூன் மாதம் 10ஆம் திகதிக்கு முன்னர் பதிவுத் தபாலில் அனுப்பிவைக்கப்படவேண்டும்.

**இலங்கை நிர்வாக சேவையின் விசேட தரத்திற்கு தரமுயர்த்தல்**

இலங்கை நிர்வாக சேவையின் வகுப்பு I இல் உள்ள அலுவலர்களை விசேட தரத்திற்கு தரம் உயர்த்துவதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளது. விண்ணப்பதாரிகள் இலங்கை நிர்வாக சேவையின் தரம் I இல் ஐந்து வருட திருப்திகரமான சேவைகாலத்தை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

விண்ணப்பங்களை அரசாங்க நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளர்கள் மற்றும் திணைக்களத்தலைவர்கள் ஊடாக அரசாங்க நிர்வாக அமைச்சின் செயலாளருக்கு எதிர்வரும் யூன் மாதம் 30ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பிவைக் கப்படல் வேண்டும். விண்ணப்பப்படிவங்களை www.pubad.gov.lk எனும் இணையத்தளத்தின் ஊடாக பெற்றுக்கொள்ள முடியும்.

இவ் விண்ணப்பம் கோரல்கள் தொடர்பான மேலதிக விபரங்களை இன்று முதல் வலம்புரி காரியாலயத்திலோ அல்லது இன்று வெளியாகும் வர்த்தமானிப்பத்திரிகையிலோ பார்வையிடமுடியும். (ச-30)

## போட்டிப் பரீட்சைக்குத் தோற்றாத 15பேர் நேர்முகத்தேர்வுக்கு அழைப்பு

### கூட்டுறவு பரிசோதகர் நியமனத்தில் குளறுபடி

(யாழ்ப்பாணம்)

போட்டிப் பரீட்சைக்கு தோற்றாத 15 பேர் கூட்டுறவு பரிசோதகர் நியமனத்துக்கான நேர் முகத் தேர்வில் தோற்றியுள்ளதாக குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது.

வடமாகாணத்தில் கூட்டுறவு பரிசோதகர் நியமனத்துக்கான போட்டிப்பரீட்சை கடந்த வருடம் இடம் பெற்று நேர்முகத் தேர்வு இவ் வருடம் நடைபெற்றது.

எனினும் போட்டிப்பரீட்சைக்கு தோற்றாத 10 முஸ்லிம் மற்றும் 5 சிங்கள இளைஞர் யுவதிகள் விசேடமாக அழைக்கப்பட்டு இவர்களுக்கு நேர்முகத் தேர்வு நடைபெற்றுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

இச் செயற்பாடு வடக்கு மாகாணத்தில் உள்ள முஸ்லிம் அமைச்சர் ஒருவரினால் மேற்கொள்ளப்பட்டதாகவும் கூறப்பட்டுள்ளது.

இதனால் போட்டிப்பரீட்சைக்கு தோற்றி நேர்முகத் தேர்வுக்கு அழைக்கப்பட்டவர்களுக்கு அடுத்த நிலைகளிலுள்ள பரீட்சார்த்திகள் பாதிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டது.

இதேவேளை கூட்டுறவு பரிசோதகர்களாக தெரிவு செய்யப்பட்டவர்களுக்கான நியமனக் கடிதங்கள் தபால்களில் அனுப்பப்பட்ட நிலையில் இந் நியமனம் ஆளுனரால் இடைநிறுத்தப்பட்டு பின்னர் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

முதல் வழங்கப்பட்ட நியமனத்தில் ஒரு முஸ்லிம் கூட்டுறவு பரிசோதகர் நியமிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-5)

## இருபது-20 கிரிக்கெட் போட்டி

(கரவெட்டி)

பருத்தித்துறை மாலு சந்தி விளையாட்டு கழகத்தின் விளையாட்டு விழாவில், விளையாட்டு கழகங்களுக்கிடையிலான இருபது-20 மென்பந்து கிரிக்கெட் போட்டி நாளை நடைபெறவுள்ளது.

முதலாவது போட்டியில் காலை 8.00 மணிக்கு கரவெட்டி நவசக்தி விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து கரவெட்டி திருவள்ளுவர் விளையாட்டு கழகமும், பிற்பகல் 3 மணிக்கு குரும்பசிட்டி உதயசூரியன் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து கரவெட்டி ஐங்கரா விளையாட்டுக் கழகம் மோதவுள்ளது. (ச-9,24)

## பிரபாகரன் இருக்கிறாரா? இல்லையா? தமிழர்கள் சுயமாகப் புரிதல் வேண்டும்!

### அரியநேத்திரன் எம்.பி.இப்படி விளக்கம்

தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தின் தலைவர் வே.பிரபாகரன் இருக்கிறாரா? இல்லையா? என்பதை தமிழ் மக்கள் அவர்களாகவே விளங்கிக் கொள்ள வேண்டும் என்று தமிழ் தேசிய கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட எம்.பி.பா.அரியநேத்திரன் தெரிவித்தார்.

புலிகள் இயக்கத் தலைவரின் மரணம் குறித்து மாறுபட்ட கருத்துக்கள் சூடுபிடித்துள்ள நிலையிலேயே அவர் அவ்வாறு தெரிவித்தார். அவர் இது குறித்து தெரிவித்தவை வருமாறு,

புலித் தலைவர் கடந்த வருடம் மார்ச் 17ஆம் திகதி கொல்லப்பட்டாரென அரசு முதலில் அறிவித்தது. ஆனால் 18ஆம் திகதி தான் புலித்தலைவர் கொல்லப்பட்டா ரென ஜனாதிபதி நாடாளுமன்றத்தில் அறிவித்தார். ஆனால் யுத்த முனையில் நின்றவரான முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா 19ஆம் திகதி தான் பிரபாகரன் கொல்லப்பட்டார் என்றார்.

எதிர்காலத்தில் வேறு தரப்பினர் கூட வேறு திகதிகளைச் சொல்லக்கூடும். எனவே பிரபாகரன் கொல்லப்பட்டிருக்கிறாரா? உயிருடன் உள்ளாரா? என்பதைத் தமிழ் மக்கள் சுய மாகவே புரிந்து கொள்ள வேண்டும். (எ-1)

## மின்சாரம் இல்லாததால் மக்கள் பாதிப்பு

(கரவெட்டி)

கரவெட்டி கிழக்கு பத்திரகாளி அம்மன் கோயில் சுற்றாடல் பகுதியில் கடந்த மூன்று நாட்களாக மின்சாரம் இல்லாததால் அப் பகுதியிலுள்ள மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இப் பகுதிக்கு விரைவில் மின்சாரத்தை பெற்றுக்கொடுக்க உரிய நடவடிக்கை எடுக்குமாறு அப்பகுதி மக்கள் பல தடவைகள் கேட்டுக் கொண்ட போதிலும், எவரும் நடவடிக்கை எடுக்கவில்லை என மக்கள் குற்றம் சாட்டியுள்ளனர். (ச-3)

## கிணற்றில் விழுந்த பாலகன் மரணம்

(யாழ்ப்பாணம்)

வீட்டில் கிணற்றில் தவறுதலாக விழுந்த பாலகன் பரிதாபமாக மரணமடைந்துள்ளார். நேற்று மதியம் இடம் பெற்ற இச்சம்பவத்தின் போது நாவாந்துறையைச் சேர்ந்த கொன்சல்வே புதியவன் (வயது 3) என்ற பாலகனே உயிரிழந்தவராவார்.

குறித்த பாலகன் வளவுக்குள் விளையாடிய போது தரைமட்டமுடைய கிணற்றுக்குள் தவறிவிழுந்து மரணமானதாக தெரிவிக்கப்பட்டது.

சடலம் பிரேத பரிசோதனையின் பொருட்டு யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டது. (ச-30)

## மாகாண நிலை தமிழ் மொழித்தின ஆற்றுகைப் போட்டிகள் வேம்படியில்

(யாழ்ப்பாணம்)

மாகாண நிலை தமிழ்த்தினப் போட்டியின் ஆற்றுகைப் போட்டிகள் எதிர்வரும் 29 மற்றும் 30ஆம் திகதிகளில் யாழ். வேம்படி மகளிர் உயர் தரப் பாடசாலையில் நடைபெறவுள்ளன.

29ஆம் திகதி முற்பகல் தனி நிகழ்ச்சிகள், நாட்டுக் கூத்துப் போட்டிகளும் பிற்பகல் இசைக் (குழு), நடனம் (குழு) என்பனவும் இடம்பெறும். 30 ஆம் திகதி முற்பகல் நாடகம், வில்லுப்பாட்டு, நாட்டார் பாடல், முஸ்லிம் நிகழ்ச்சி, தமிழறிவு வினாவிடை, சிங்கள மாணவருக்கான தமிழ் வாசிப்பு, சிங்கள மாணவர்களுக்கான பேச்சு, விவாதம் ஆகியன வும் பிற்பகல் 2 மணிக்கு சான்றிதழ் வழங்கும் வைபவமும் இடம்பெறும்

எனவே நிகழ்ச்சிகளுக்கான பதிவுகள் 28 ஆம் 29ஆம் திகதிகளில் பிற்பகல் 3 மணிக்கு வேம்படி மகளிர் உயர்தர பாடசாலையில் மேற்கொள்ளப்படவுள்ளதாகவும், நிகழ்ச்சிகளில் முதலாம் இடத்தைப் பெற்ற போட்டியாளரை குறித்த கால நேர அட்டவணைப்படி அனுப்பி வைக்குமாறு மாவட்ட மட்ட தமிழ் மொழித்தினக்குழுத் தலைவர் வ.செல்வராசா அறிவித்துள்ளார். (ச-3)


## வேலை ஆட்கள் தேவை

யாழ். நகரில் இயங்கும் பிரபல்யமான புடவை வியாபார நிலையத்திற்கு அனுபவமுள்ள ஆண், பெண் இருபாலாரும் தேவை. மேலும் அனுபவமுள்ள கணக்காளரும் (ஆண்) தேவை.

யாழ். மாநகர எல்லைக்குள் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

உடன் தொடர்பு கொள்ளவும்

0777488093

(1539)

# இன்று ஒரு தகவல்

## மாயை

ஒருத்தரிடம் பேசிக் கொண்டிருந்தேன்.

அவர் சொன்னார்.

''இந்த உலகத்தை 'மாயை' என்று மகான்களெல்லாம் சொல்கிறார்களே அதை நான் நம்பமாட்டேன்'' என்றார்.

" என்னங்க இது... இப்படி சொல்றீங்களே?" என்றேன்.

''என்ன சேர் பின்னே? இந்த உலகத்தில் எவ்வளவு காரியங்கள் நடந்து கொண்டிருக்கு? எல்லாத்தையும் நாம கண்கூடாக பார்த்துக் கொண்டிருக்கிறோம். அப்படி இருக்கும் போது இதைப் போய் மாயை என்று சொன்னால் எப்படி?'' என்றார்.

"மாயை" என்றால் ஏதோ அடியோடு இல்லாத ஒன்று என்று அவர் நினைக்கிறார். அதனால அப்படிச் சொல்கிறார்.

"மாயை" என்பது அடியோடு இல்லாத ஒன்று இல்லை.

இப்ப முயல் கொம்பு , குதிரைக் கொம்பு என்று சொல்கிறோம். அப்படி ஒரு பொருள் அடியோடு இல்லை. ஆனால்...

மாயை என்பது அப்படியில்லை. மாயை என்பது இருக்கிறதாக நினைக்கிற வரைக்கும் இருக்கிறதாகத் தோன்றும்.

"கானல் நீர்" மாதிரி என்று வைத்துக் கொள்ளுங்களேன். கானல் நீர் கண்ணுக்குத் தெரிகிறது. அதாவது தூரத்தில் தண்ணீர் இருக்கிற மாதிரி தெரியும். ஆனால் உண்மையில் அங்கு தண்ணீர் இல்லை. அங்கே தெரியும் தண்ணீரைக் குடித்து நாம தாகம் தீர்த்துக் கொள்ள முடியாது.

கானல் நீர் உண்மையான தண்ணீர் இல்லை என்று தெரிந்தவர்களுக்குக் கூட கானல் நீர் தெரியத்தான் செய்கிறது. அங்கே தண்ணீர் இல்லையென்பது நமக்கு நன்றாகத் தெரியும். இருந்தாலும் கூட தண்ணி இருக்கிறதாகவே தான் தோன்றும்.

அது தான் மாயை! இந்த உலகை மாயம் என்று உணர்ந்த ஞானிகளுக்குக் கூட இந்த லோகம் தெரியத்தான் செய்கிறது.

ஒரு கயிறு கீழே கிடக்கிறது. இருட்டு நேரத்தில் அதைப் பாம்பென்று தவறாக நினைத்து விடுகிறோம்.

அப்ப என்ன ஆகிறது? நிஜமான பாம்பு உண்டாக்கும் அத்தனை பயத்தையும் பதற்றத்தையும் அது நம்மிடம் உண்டாக்கி விடுகிறது.

அதே மாதிரி...

உலகம் உண்மையிலேயே நிரந்தர சத்தியமாக இல்லையென்றால் கூட ,அதை நாம் சத்தியம் என்று நினைக்கிற வரைக்கும் அது மாதிரியே எல்லாக் காரியமும் நடக்கிறது.

நாம் கனவு காண்கிறோம். கனவு காணும் வரைக்கும் அந்தக் கனவு நிஜமாகத்தான் இருக்கும். விழித்துக் கொண்ட பின் அது '' ஒன்றுமில்லை'' என்று ஆகிவிடும். நாம் அஞ்ஞானத்தில் தூங்கிக் கொண்டிருக்கும் வரைக்கும் உலகம் மெய்யாக இருக்கும். நாம் ஞான நிலையில் விழித்துக் கொண்ட பின் அது மறைந்தே போய்விடும்.

அதுசரி!

ஞானிகளுக்கு இந்த உலகம் இனிப்பாகவும் நமக்கு கசப்பாகவும் தெரிகிறதே அது எப்படி?

சர்க்கரையை உபயோகப்படுத்தி பாகற்காய் போன்ற ஒரு பொம்மை செய்து வைத்திருக்கிறோம் என்று வைத்துக் கொள்ளுங்கள். அதாவது சர்க்கரைப் பொம்மை பாகற்காய் மாதிரி இருக்கிறது.

விடயம் தெரியாத குழந்தை அதை பாகற்காய் என்று நினைத்துக் கொண்டு ஓடிப்போய் விடும்.

விடயம் தெரிந்தவனுக்கு அது சர்க்கரை என்பது தெரியும்! அது மாதிரித்தான் ஞானிகளுக்கு இவ்வுலகம் இனிப்பு. நமக்கு கசப்பு.

இவற்றையெல்லாம் காமகோடி பீடாதிபதி பரமாச்சாரியார் சொல்கிறார். அதனால இந்த உலகத்தில் நாம் எப்படி வாழ வேண்டும் என்று கேட்டால் தாமரை இலையில் தண்ணீர் போல வாழ வேண்டும் என்கிறார்கள் பெரியவர்கள்.

ஒட்டாமல் வாழ்கிற வாழ்வு அது! தாமரை இலை, தணிணீரில் தான் இருக்கும். இருந்தாலும் தண்ணீர் இதில் ஒட்டாது. ஒரு துளி அதன் மேல் விழுந்தாலும் அது நிற்காது.

இந்தக்காலப் பிள்ளைகள் அதற்கு விளக்கம் கொடுக்கிறார்கள்.

கொஞ்சநாளைக்குமுன் ஒருசின்னப்பொண்ணு என்னிடம்வந்து,"இன்று ஒரு தகவலில் என்னென்னமோ சொல்றீங்களே..." தாமரை இலையில தண்ணீர் நிக்காது! ஏன் தெரியுமா சேர்?" என்று கேட்டது.

"நீயே சொல்லம்மா!" என்றேன்.

" தாமரை இலையில தண்ணி நிக்காது. ஏன்னா அதுக்குக் கால் கிடையாது" என்றது.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# தேசிய பல்கலைக்கழகங்களின் தரம் மேலும் உயர்த்தப்படும்

## உயர் கல்வியமைச்சர் எஸ். பி.திஸாநாயக்க

(கொழும்பு)

இலங்கையை ஆசியாவின் கல்வியின் கேந்திர நிலையமாக மாற்றுவதே தமது இலக்காகும் என்று உயர்கல்வி அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

தேசிய பல்கலைக்கழகங்களின் தரம் மேலும் உயர்த்தப்படவுள்ளதோடு சர்வதேச பல்கலைக்கழக கட்டடைப்பு ஏற்படுத்தப்படும் எனவும் சர்வதேச பல்கலைக்கழகங்களினூடாக இலங்கையின் பல்கலைக்கழகங்களின் கட்டமைப்புக்கு எதுவித பாதிப்பும் ஏற்படாது என்றும் அமைச்சர் கூறினார்.

தேசிய செய்தி சேவைக்கு நேற்று வழங்கிய செவ்வியிலே அமைச்சர் இதனை தெரிவித்தார்.

தனியார் பல்கலைக்கழகங்கள் ஆசியாவில் மத்திய தர வகுப்பினரின் பிள்ளைகள் இலக்காகக் கொண்டு ஏற்படுத்தப்பட்டுள்ளன எனவும் இதன் மூலம் நாட்டிற்கு சிறந்த வருமானத்தை பெற்றுக் கொள்ள முடியும் என்றும் எதிர்காலத்தில் பல்கலைக்கழக விரிவுரையாளர்களினது சம்பளம் அதிகரிக்கப்படும் என்றும் அமைச்சர் கூறினார். (6-4)

# சான்றிதழ் வழங்கும் நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

இலங்கை செஞ்சிலுவை சங்க சண்டிலிப்பாய் பிரிவினால் நடத்தப்பட்ட கணனிப் பயிற்சி நெறிக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு நாளை சனிக்கிழமை காலை 9 மணிமுதல் 10 மணிவரை பிரிவுக்காரியாலயத்தில் சண்டிலிப்பாய் பிரிவு தலைவர் ந.இலங்கேஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினராக இலங்கை செஞ்சிலுவை சங்க யாழ் கிளைத் தலைவர் பேராசிரியர் வி.க. கணேசலிங்கம் கலந்து சிறப்பிப்பதுடன் கௌரவ விருந்தினராக இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளை செயலாளர் கு.பாலகிருஷ்ணன் கலந்து கொள்ளவுள்ளார். (4)

# மீண்டும் மோட்டார் சைக்கிள் பதிவுகள்

(பருத்தித்துறை)

பருத்தித்துறை - யாழ்ப்பாணம் பிரதான வீதியில் வல்லைப் பகுதியில் மீண்டும் மோட்டார் சைக்கிள் பதிவுகள் நடைபெற்று வருகிறது.

அப்பகுதியில் உள்ள சோதனைச் சாவடி ஒன்றில் வைத்து பருத்தித்துறையில் இருந்து யாழ் நோக்கி வரும் சகல மோட்டார் சைக்கிள்களும் படையினரால் பதியப்படுகிறது.

அப்பதிவின் போது பெயர், அடையாள அட்டை இலக்கம், மோட்டார் சைக்கிள் இலக்கம், மோட்டார் சைக்கிளில் செல்பவர்களின் எண்ணிக்கை பதியப்படுகிறது. (6-10)

# இராசி பலன்

*21.05.2010*
*(வைகாசி 7 ,வெள்ளிக்கிழமை)*
*அட்டமி பிற்பகல் 4.41 மணிவரை*
*மகம் மாலை 6.25 மணிவரை*
*இராகுகாலம் 10.22 - 11.52 மணிவரை*
*சுபநேரம் 5.52 - 7.22 மணிவரை*
*அட்டமி - நவமி*


| | |
|---|---|
| மேடம் | காரிய இடையூறு, மனஸ் தாபம், தனவிரயம், வியாபார சிந்தை. |
| இடபம் | பயந்த சுபாவம், தெய்வ தரிசனம், உஷ்ண வியாதி, முயற்சி தாமதம். |
| மிதுனம் | இனிய சம்பவம், அந்நியர் சந்திப்பு, பிரயாண நன்மை, முயற்சி கைகூடும். |
| கடகம் | கௌரவக் குறைவு, பெரியோர் உதவி, தனவிரயம், தொழில் நன்மை. |
| சிங்கம் | தெய்வசிந்தை, புதிய திருப்பம், போசன சுகம், உறவினர் வருகை. |
| கன்னி | காரிய அலைச்சல், பித்த ரோகம், தந்தை வழி உறவு, தெய்வ சிந்தை. |
| துலாம் | எடுத்த காரியம், கை கூடும், பொருள் சேர்க்கை, கீர்த்தி, தெய்வ தரிசனம். |
| விருச்சிகம் | சுபநிகழ்வு, கடின உழைப்பு, தெய்வ தரிசனம், காரிய நன்மை. |
| தனுசு | சரீரப் பிரயாசை, கட்டுப்பாடு, அச்சமான நிலை, பயணம். |
| மகரம் | எதிர்பாராத அச்சம், போசன சுகம், ஆரோக்கியக் குறைவு, தெய்வ சிந்தை. |
| கும்பம் | காரிய அனுகூலம், தெய்வ சிந்தை, விருந்துபசாரம், குடும்ப மகிழ்ச்சி. |
| மீனம் | பணவருவாய், சத்துரு ஜெயம், திடீர்பயணம், தொழில் நன்மை. |

வளவன்

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் | சாவகச்சேரி |
|---|---|---|---|
| 1 Kg | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 100 | 110 | 100 |
| உருளைக்கிழங்கு | 60 | 70 | 80 |
| பச்சைமிளகாய் | 80 | 90 | 95 |
| தக்காளி | 80 | 90 | 110 |
| மரவள்ளிக்கிழங்கு | 30 | 40 | 45 |
| கோவா | 80 | 90 | 80 |
| கரட் | 120 | 140 | 120 |
| பூசணி | 30 | 40 | 35 |
| புடோல் | 50 | 60 | 65 |
| வாழைக்காய் | 30 | 40 | 50 |
| சின்ன வெங்காயம் | 90 | 100 | 90 |
| பெரிய வெங்காயம் | 50 | 60 | 65 |
| பாகற்காய் | 80 | 90 | 120 |
| வெண்டிக்காய் | 50 | 60 | 60 |
| கரணைக் கிழங்கு | 40 | 50 | 45 |
| பயிற்றங்காய் | 90 | 100 | 80 |
| லீக்ஸ் | 120 | 140 | 100 |
| பீற்றூட் | 50 | 60 | 75 |
| கறிமிளகாய் | 120 | 140 | 120 |
| முருங்கைக்காய் | 180 | 200 | 220 |
| போஞ்சி | 100 | 120 | 130 |
| கத்தரிதம்புள்ள | 80 | 90 | 60 |
| கீரை - 1 பிடி | 30 | 35 | 30 |
| தேசிக்காய் | 50 | 60 | 70 |
| தேங்காய் (ஒன்று) | 30 | 35 | 35 |

# யாழ். கல்வி வலய அதிபர்களின் மலையகக் கல்வித் தரிசனம் 03



தலதா மாளிகையின் முகப்புத் தோற்றம்

அதிபர்களின் மலையகக் கல்விச் சுற்றுலாவுக்கு முன்பான திட்டமிடல், ஒழுங்கு படுத்தல் என்பன யாழ்ப்பாண வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ. வேதநாயகம் அவர்களின் தலைமையில் நடந்தபோதெல்லாம் நேரமுகாமைத்துவம் வலியுறுத்தப் பட்டது.

அதிபர்களின் சுற்றுலாப் பயணம் பூரண பயனைத் தர வேண்டுமாயின் திட்டமிடல் அவசியம் என்பதோடு ஒவ்வொரு கணப்பொழுதும் பயனுடையதாக அமைய வேண்டும் என்ற யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளரின் அறிவுரையை அதிபர்கள் மறக்கவில்லை என்பதைச் சுற்றுலாவில் செலவிட்ட நேரக் கட்டமைப்பு சான்று பகர்ந்தது.



தலதா மாளிகையில்...

இதற்கமைவாகக் குறிஞ்சிக்குமரன் கோவிலிலிருந்து பஸ் கண்டி தலதா மாளிகையை நோக்கிச் சென்றது.

பௌத்தர்களின் புனித தலமான தலதாமாளிகை மின்குமிழ்களின் ஒளிப் பாய்ச்சலில் தகதகவென பொற்கதிர்களை வீச, புனிதத் தலத்தின் வளாகம் பச்சைக் கம்பளத்தின் விரிப்பில் ஆன்மீக எழுச்சியை வாரிக் கொட்டியது.

தலதா மாளிகை வளாகத்தின் நுழை வாயிலில் இந்த நாட்டின் முதற் பிரதமர் டி.எஸ். சேனநாயக்கவின் உருவச் சிலை.

அடேங்கப்பா! இந்த நாட்டின் முதல் தலைவருக்குச் சிங்கள தேசம் வழங்கிய கௌரவம் கண்டு பொறாமை கொள்ளாமல் இருக்க முடியாது.

ஈழத்தில் சைவமும், தமிழும் வளர்த்த ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரின் சிலையை நல்லூர் வளாகத்திலிருந்து புரட்டியெடுத்து நாவலர் மண்டபத்தின் மறைப்பில் வைத்த எங்கள் மன நிலையை நினைத்த போது சிங்களவர்களிடம் இருக்கக் கூடிய தங்கள் இனம் சார்ந்த பற்றுறுதியை நினைக்காமல் இருப்பது இயலாததே.

தலதா மாளிகையின் வளாகத்தில் முகிழ்ப்படைந்த தாமரை மொட்டுக்கள். அவை அடுக்கி வைக்கப்பட்டிருந்த அழகு நிலை. இதுவன்றோ கவின்நிலை என்று உணர வைத்தது.

எங்கள் வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் அவர்கள் பாடசாலையைக் கவின்நிலையில் வைத்திருங்கள் என அடிக்கடி கூறுவதில் இருக்கக் கூடிய அர்த்தத்தைத் தாமரை மலர்கள் எடுத்தியம்ப, தலதா மாளிகையின் நுழைவாயிலை அண்மித்தோம்.

பாதணிகளைப் பாதுகாக்கும் அலுவலகம். அதிலும் உள்நாட்டவர், வெளிநாட்டவர் என்ற பிரிப்பு. இந்தப் பிரிப்பெல்லாம் பாதணிகளின் பெறுமதிக்கோ, பாதங்களின் பெறுமதிக்கோ அல்ல.

வெளிநாட்டவர்களிடம் கூடிய கட்டணம் பெறுவதற்கான ஒரு திட்டந்தான் என்பதைப் புரிந்து கொள்ள முடிந்தது.

இருந்தும் எங்களில் சில அதிபர்களுக்கு வெளிநாட்டவர்களின் பிரிவில் தங்கள் பாதணிகளை வைக்க வேண்டும் என்பதில் விருப்பம் போல அங்கேயே தங்களின் பாதணிகளைக் கழற்றிக் கொடுத்து விட்டனர்.

வெளிநாட்டவர்கள் மட்டும் என்ற பிரிவில் பாதணிகளை ஒப்படைத்த போது, அங்கு பணியில் இருந்தவர்களும் அதனை ஏற்றுக் கொண்டமை குறிப்பிட்ட அதிபர்களுக்குப் பெருமையைத் தந்தது.

எங்களைப் பார்த்தவுடன் அவர்கள் வெளிநாட்டவர்கள் என்று நினைத்து விட்டார்கள் என்பதுதான் அவர்களின் பெருமைக்குக் காரணம்.

இருந்தும் கட்டணத் தொகை அதிகம் என்ற செய்தி மன வருத்தத்தைத் தரவே செய்தது.

தலதா மாளிகைக்குள் நுழைவதாயின், படையினரின் பரிசோதனைக் குட்பட வேண்டும்.

அந்தச் சோதனைகளை முடித்துக் கொண்டு எண்கோண மண்டபத்தின் கீழ்த் தளத்தினூடாகப் புனித தலத்திற்குச் சென்றோம்.

எங்கும் அமைதி, தியானம், சுவரோவியங்கள், சந்திரவட்டக் கற்கள்.

கீழ்த்தளத்திலிருந்து மேற் தளத்திற்குச் சென்றால் மூலஸ்தானம். அங்குதான் கௌரவ புத்தபிரானின் புனித தந்தம் வைக்கப்பட்டுள்ளது.



தலதா மாளிகையில் உள்ள சுவரோவியங்களில் ஒன்று

மூலஸ்தானத்தின் மேற் கூரை, தங்கத் தகடுகளால் வேயப்பட்டுள்ளன. நாங்கள் வழிபாட்டுக்குச் சென்ற நேரம் இரவுப் பொழுதாகையால், புத்த பிரானின் புனித தந்தத்தை வழிபடும் வாய்ப்பு இல்லை.

எனினும் அதிர்ஷ்டவசமாக அந் நேரம் முக்கிய அமைச்சர் ஒருவர் தலதா மளிகைக்கு வந்திருந்தார். அவருக்காகப் புனித தந்தம் வைக்கப்பட்டிருந்த மூலஸ்தானத்தின் திருக் கதவுகள் திறக்கப்பட்டிருந்தன.

தலதா மாளிகையின் பணியாளர்கள் தரிசனத்தை வேகப்படுத்துமாறு சைகை செய்ய, நாங்களும் அவசரமாக வழிபட்டுக் கொண்டோம்.


வழிபாட்டுக்குப் பின் எண்கோண மண்டபத்தைப் பார்வையிட்டோம். இந்த நாட்டின் தலைவர்கள் நாட்டு மக்களுக்கு ஆற்றும் முக்கிய உரைகளை எண்கோண மண்டபத்திலிருந்தே ஆற்றுவர்.

காலஞ்சென்ற முன்னாள் ஜனாதிபதி ஆர்.பிரேமதாச எண்கோண மண்டபத்திலிருந்து உரையாற்றும் மரபை அதிதமாகப் பின்பற்றினார் எனக் கூறுவார்கள்.

இருந்தும் தற்போது இந் நடைமுறை இல்லை என்றே கூறலாம். எண்கோண மண்டபத்தில் பழைய ஏடுகளை ஆவணப்படுத்தி வைத்திருக்கும் காட்சி மிகவும் அற்புதம்.

சிங்கள மக்கள் தங்கள் இன, மத வரலாறுகளை ஆவணப்படுத்துவதில் எந்தளவு தூரம் அக்கறை செலுத்துக் கின்றார்கள் என்பதற்கு இஃது நல்ல தோர் உதாரணம்.

அதே மண்டபத்தில் பௌத்த மத நூலான திரிபிடகமும் வழிபடு பொருளாக வைக்கப்பட்டுள்ளது. இதற்கப்பால் தலதா மாளிகையின் நூலகம் அருங்காட்சியகம் போல பணிபுரிகின்றது.



தலதா மாளிகை எண்கோண மண்டபம்

நூலகத்தின் உட்பிரகாரத்தில் கௌதம புத்தபிரான் பரிநிர்வாண நிலையை அடைந்த காட்சிகள் சித்திரிக்கப்பட்டிருந்தன.எங்கும், எதிலும் வர்ண ஓவியங்கள். பௌத்த சின்னங்கள், அடையாளங்கள், நீரோடைகள் என எல்லாமும் தலதா மாளிகையின் பெருமைக்கும் அழகிற்கும் அணி சேர்க்க,

தரிசனத்தை நிறைவுபடுத்தி அங்கிருந்து வெளியேறினோம்.

விதுரன்

(திங்கள் வளரும்)

## சீரற்ற காலநிலையால் பாடசாலைகளுக்கு விடுமுறை

(கொழும்பு)

சீரற்ற காலநிலை காரணமாக அம்பலாங்கொடை கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளுக்கு விடுமுறை வழங்கப்பட்டுள்ளது. ஆசிரியர்களும் கல்வி அதிகாரிகளும் வழங்கிய தகவல்களைக் கருத்திற்கொண்டு இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டதாக மாகாண முதலமைச்சர் ஷான் விஜேலால் டி சில்வா கூறினார்.

இதற்கமைய அம்பலாங்கொடை கல்வி வலயப் பாடசாலைகளுக்கு விடுமுறை வழங்கப்பட்டுள்ளது.

இதேவேளை அனர்த்த நிலைமை காரணமாக ஏதேனும் பாடசாலையொன்றை மூடவேண்டிய தேவை ஏற்பட்டால் அதற்கான அதிகாரம் பிரதேசக் கல்வி அதிகாரிகளுக்கு வழங்கப்பட்டுள்ளதாக மேல் மாகாண முதலமைச்சர் பிரசன்ன ரணதுங்க கூறினார்.

மேல் மாகாணத்தில் மூன்று மாவட்டங்களிலும் சில பாடசாலைகள் ஏற்கனவே மூடப்பட்டுள்ளன. (6)

## யாழ்ப்பாணத்தில் தமிழ்த் திரைப்பட விழா

யாழ் மக்களின் மனநிலையில் ஒரு புத்துணர்வை ஏற்படுத்தும் நோக்கில் ஒரு வாரத்துக்கான திரைப்பட விழாவொன்றை யாழ்ப்பாணத்தில் விரைவில் நடத்த அரசாங்கம் ஏற்பாடு செய்துள்ளது. யாழ் கட்டளைத் தளபதி மேஜா ஜெனரல் மஹிந்த ஹத்துருசிங்கவின் பணிப்பின் பேரில் இதற்கான நடவடிக்கை களை யாழ்.பாதுகாப்புத் தலைமையகம் மேற்கொண்டு வருகின்றது.

இத்திரைப்பட விழாவில் தென் இந்திய பழைய தமிழ் திரைப்படங்களும் வெற்றிப்படங்களும் காண்பிக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (6)

## வடக்கு- கிழக்கில் வீதிகள் புனரமைப்பிற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது

(கொழும்பு)

வடக்கு -கிழக்கில் பல வீதிகளை புனரமைக்க அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இதற்கான அமைச்சரவைப் பத்திரத்தை சமர்ப்பித்திருந்தார்.

அதன்படி உலக வங்கியால் வழங்கப்பட்ட 100 மில்லியன் அமெரிக்க டொலர் நிதி உதவியின் கீழ் கந்தளாயிலிருந்து திருகோணமலை வரையிலான 43 கிலோ மீற்றர் தூரமும் அம்பேபுஸ்ஸ முதல் தம்புள்ளை வரையிலான 90 கிலோ மீற்றர் தூரமான வீதியும் புனரமைக்கப்படவுள்ளன.

ஆசிய அபிவிருத்தி வங்கியால் வழங்கப்பட்ட 33.9 மில்லியன் டொலர் நிதி உதவி யால் மாங்குளம் முதல் வெல்லன்குளம் வரையிலான 38 கிலோ மீற்றர் தூரமும் பரந்தன் பூநகரி வீதியின் 25.3 கிலோ மீற்றர் தூரமும் புனரமைக்கப்படவுள்ளன.

உலக வங்கியின் வட்டியில்லாக் கடனான 50 மில்லியன் டொலர் மூலம் வடக்கு- கிழக்கின் உள்ளூராட்சி மன்றங்களின் மேம் பாட்டுக்கான திட்டங்கள் மேற்கொள்ளப்படவுள்ளன. (4-6)

## வவுனியாவில் 300 பொலிஸாருக்கு இடமாற்றத்திற்கான அனுமதி

வவுனியா பொலிஸ் பிரிவில் நீண்ட காலம் சேவையாற்றி இடமாற்றத்திற்கு விண்ணப்பித்த பொலிஸாரில் 300 பேருக்கு இடமாற்றத்திற்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் மேற்படி இடமாற்றங்கள் அடுத்த மாதம் 15ஆம் திகதி முதல் இடம்பெறவிருக்கிறது. அதிகமான பொலிஸ் உத்தியோகத்தர்கள் தமது சொந்த இடங்களுக்கே இடமாற்றலாகி செல்லவிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (6)

## கண்டி-மஹியங்கனை வீதியில் விபத்து; 40 பேர் வைத்தியசாலையில் அனுமதி

கண்டிக்கும் மகியங்கனைக்கும் இடையிலான வீதியில் நேற்று அதிகாலை இடம் பெற்ற வாகன விபத்தில் 40 பேர் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

பாடசாலை மாணவர்களை ஏற்றிச் செல்லும் பஸ்ஸும் மற்றுமொரு தனியார் பஸ் ஸும் வேகல வளைவில் ஒன்றுட னொன்று மோதிக்கொண்டதில் இந்த விபத்து ஏற்பட்டிருப்பதாக பொலிஸார் தெரி வித்தனர்.

காய மடைந்தவர்கள் தெல்தெனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதாகவும் பின்னர் மேலதிக சிகிச்சைக்காக பலர் கண்டி வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டி ருப்பதாகவும் பொலிஸார் மேலும் தெரிவித்த னர். காயமடைந்தவர்களில் 20 மாணவர்கள் அடங்குவதாகவும் இவர்கள் கண்டி பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டி ருப்ப தாகவும் அவர் கள் குறிப்பிட்டனர். இந்த விபத்து சம்பவம் தொடர்பில் தெல்தெனியா பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (6)


### கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை ஆசிரியை திருமதி ஜெ.சிவரூபி அவர்களின் தந்தையார்

**அமரர் வீரகத்தி சின்னத்துரை**

(கிழவி தோட்டம், கரவெட்டி கிழக்கு)

அவர்கள் 19.05.2010 புதன்கிழமை அன்று இறைபதம் எய்தினார். அன்னாரின் இழப்பால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.

**ஆசிரியர் நலன்புரி சங்கம்**

**யா/கரவெட்டி கிழக்கு அ.த.க. பாடசாலை ,கரவெட்டி.**

(கு/295)


## பாடசாலை மாணவர்களுக்கு இலவச பாதணிகள் வழங்கப்படவேண்டும்

### சஜித் பிறேமதாஸ தெரிவிப்பு

(கொழும்பு)

பாடசாலை மாணவர்களுக்கு இலவச பாதணிகள் வழங்கப்படவேண்டுமென அம்பாந்தோட்டை மாவட்ட ஐக்கிய தேசியக் கட்சி பாராளுமன்ற உறுப்பினர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

இலவச சீருடைகளை விநியோகம் செய்வதனைப் போன்று பாதணிகளும் வழங்கப்படவேண்டுமென அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

குறைந்தபட்சம் இரண்டு சீருடைகளேனும் மாணவர்களுக்கு வழங்கப்பட வேண்டுமென அவர் குறிப்பிட்டுள்ளார்.

பாடசாலை மாணவர்களின் சுகாதார வசதிகளை மேம்படுத்துவதற்கும் அரசாங்கம் ஆவண செய்ய வேண்டுமெனவும் தேசியக் கல்வி கொள்கை ஒன்றை உருவாக்கும் கல்வி அமைச்சரின் திட்டம் வரவேற்கத்தக்கதெனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (6)

## சீரற்ற காலநிலையால் நுவரெலியாவில் அவசரகால நிலை பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது

(கொழும்பு)

நுவரெலியாவில் ஏற்படக்கூடிய வெள்ளப்பெருக்கு மற்றும் மண்சரிவு அபாய எச்சரிக்கை காரணமாக அங்கு அவசரகால நிலை பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

அடைமழை மற்றும் கடும் காற்று காரணமாக குறித்த பகுதியில் முற்றாக வீடுகள் சேதமடைந்திருப்பதாக நுவரெலியா அரச அதிபர் டி.குமாரசிறி தெரிவித்தார்.

இந்நிலையில் வீடுகளை இழந்த 60 குடும்பங்கள் தற்காலிகமாக முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகவும் நுவரெலியாவில் வீடுகளை இழந்த குடும்பங்களுக்கான உதவிகளை வழங்குவதில் அனைத்து அரசாங்க அதிகாரிகளும் கவனம் செலுத்தி வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

கடந்த சில நாட்களாக பெய்து வரும் அடை மழை காரணமாக மலையக பிரதேசத்திலுள்ள பல வீதிகள் வெள்ளத்தில் மூழ்கியிருப்பதுடன் மண்சரிவால் அங்கு சகதி ஏற்பட்டிருப்பதாகவும் அத்துடன் வீதியில் மரங்கள் முறிந்து வீழ்ந்திருப்பதால் பல வீதிகள் ஸ்தம்பிதம் அடைந்திருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

நுவரெலியாவில் தொடர்ந்து பலத்த காற்றுடன் கூடிய அடைமழை பெய்து வரும் நிலையில் அங்குள்ள மக்களை பாது காப்பாக இருக்குமாறும் டி.குமாரசிறி கேட்டுள்ளார். (6)

## வார இறுதி நாட்களிலும் வழக்கு விசாரணைகளை நடத்தத் திட்டம்

(கொழும்பு)

வார இறுதி நாட்களிலும் வழக்கு விசாரணைகளை நடத்துவதற்கு அரசாங்கம் திட்டமிட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மஜிஸ்திரேட் மற்றும் உயர் நீதிமன்ற வழக்கு விசாரணைகளை சனி மற்றும் ஞாயிறு ஆகிய தினங்களில் நடத்துவது குறித்து ஆராயப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நிலுவையில் இருக்கும் பெரும் எண்ணிக்கையிலான வழக்குகளை விசாரணை செய்யும் நோக்கில் இந்த நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக நீதிமற்றும் சட்ட மறுசீரமைப்பு அமைச்சர் அதாவுத செனவிரட்ன தெரிவித்துள்ளார்.

பிரதம நீதியரசர் அசோக டி சில்வாவுடன் பேச்சுவார்த்தை நடத்தியதன் பின்னர் இறுதித் தீர்மானம் எடுக்கப்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

தற்காலிக அடிப்படையில் வார இறுதி நாட்களில் வழக்கு விசாரணைகள் நடத்தப்படவுள்ளதாகவும் இதற்கென ஓய்வு பெற்ற நீதவான்களின் சேவை பெற்றுக்கொள்ளப்படும் எனவும் தெரிவித்துள்ளார்.

தனது தாயார் தாக்கல் செய்த காணி வழக்கொன்று நாற்பது ஆண்டுகள் விசாரிக்கப்பட்டதாக சுட்டிக்காட்டிய அமைச்சர் இவ்வாறான நிலைமைகளை நாட்டில் பலர் எதிர்நோக்கி வருவதாக குறிப்பிட்டுள்ளார்.

சட்டமா அதிபர் திணைக்களம், அரச இரசாயன பகுப்பாய்வு திணைக்களம் மற்றும் பொலிஸ் திணைக்களம் ஆகியவற்றினால் மேற்கொள்ளப்படும் கால தாமதங்களே வழக்கு விசாரணைகள் நீடிப்பதற்கான பிரதான காரணி என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (6)


### நன்றி நவிலலும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



கலட்டியை பிறப்பிடமாகவும் திருநெல்வேலி கொம்பியூட்டர் சயன்ஸ் அக்கடமியின் நிர்வாகியுமான

அமரர்

**திரு. குணரட்ணம் ஸ்ரீதரன்**

அவர்கள் 22.04.2010 அன்று சாயிபாதம் சென்று அடைந்தமையிட்டு அறிந்து உடன் வந்து உதவியவர்களுக்கும் உரும்பிராய் இந்துக்கல்லூரி, இராமநாதன் கல்லூரி அதிபர்கள், ஆசிரியர்கள், வாழ்வகம் காப்பாளர்கள், மாணவர்கள், வேப்பங்குளம் ஜெயராணி சாம்பியம்மா, இந்து அன்பகக் குழந்தைகள், ஊழியர்கள், உடுவில் சாயிமண்டலி சாயி அன்பர்கள், அயலவர்கள், உறவினர்கள், யாழ் போதனா வைத்தியசாலை வைத்தியர்கள், ஊழியர்கள் அனைவருக்கும் இவ் இறுதிக் கிரியைகளில் நேரில் வந்து அஞ்சலி செலுத்தியோருக்கும் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் தொலைபேசி மூலமும் தந்தி மூலமும் அனுதாபச் செய்தி அனுப்பிய அனைவருக்கும் எனது இதய சுத்தியுடன் நன்றியினை தெரிவித்துக் கொள்கிறேன்.

அத்துடன் 22.05.2010 சனிக்கிழமை முற்பகல் 11 மணியளவில் நடைபெறும் வீட்டுக்கிருத்திய நிகழ்விலும் குடும்ப சமேதராய் வருகை தந்து ஆத்ம சாந்திப் பிரார்த்தனையில் கலந்து கொண்டு மதிய போசனத்திலும் பங்குபற்றி ஏகுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

'சாயிபதி'
கே.கே.எஸ். வீதி,
உடுவில் கிழக்கு , சுன்னாகம்.

இங்ஙனம்
திருமதி சி.ஸ்ரீதரன்,
சகோதரர்கள்.

(கு/294)

# எதிர்வரும் வாரங்களில் காற்றுவீசும் வேகம் அதிகரித்து காணப்படும்

## திருநெல்வேலி வானிலை அவதான நிலையம் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

தென் மேல் பருவப்பெயர்ச்சி காற்று எதிர்வரும் வாரங்களில் ஆரம்பிக்கப்படும் போது வீசும் காற்றின் வேகம் அதிகமாக காணப்படுவதனால் பொது மக்களை அவதானமாக இருக்குமாறு திருநெல்வேலி வானிலை அவதான நிலைய பொறுப்பதி காரி வே.புஸ்பநாதன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தற்போது வங்கக்கடலில் உருவான குறைந்த தாழமுக்கம் இந்தியாவை அண் மித்த பகுதியில் மையம் கொண்டுள்ளதால் அங்கு பாதிப்பு ஏற்பட சாத்தியக் கூறுகள் உண்டு.

ஆனால் நேற்றைய தினம் இங்கு ஏற்படவிருந்த தாக்கங்கள் தவிர்க்கப்பட்டுள் ளது.

எனினும் காற்று வீசும் வேகம் மணித் தியாலயத்திற்கு 35 கிலோ மீற்றராக உள் ளது.

கடல் நீர் மேற்பரப்பில் வெப்ப நிலையும் வளிமண்டலத்தில் நீராவியும் அதிகமாகக் காணப்படும் சந்தர்ப்பத்தில் தாழமுக்கம் சுழற்சிமுறையில் மாற்றத்தை ஏற்படுத்தும் போது நாட்டின் சகல இடங்களிலும் அதன் தாக்கத்தை அதிகமாக உணர்த்து கின்றது

எதிர்வரும் தினங்களில் மாலை நேரங் களில் இடி, மின்னலுடன் மழை பெய்தும் வெப்பமும் குறைவாகக் காணப்படும். அத் துடன் லைலா புயலின் தாக்கமும் தென்மேல் பருவப் பெயர்ச்சியின் ஆரம்ப அறிகுறியாக காற்று வீசும்போது பல்வேறு இடங்களில் சேதங்கள் ஏற்பட வாய்ப்புக்கள் அதிகமுள்ளன என்றார். (6-30)

## இரண்டாந் திருமுறை முற்றோதல்

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கைத்திருமுறை மன்றம் நாட்டு மக்கள் நலம் வேண்டிப் பிரார்த்தித்து நடத்திவரும் பன்னிரு திருமுறை முற்றோத லில் இரண்டாந் திருமுறை முற்றோதல் நிகழ்வு இணுவில் ஸ்ரீ விசாலாட்சி சமேத ஸ்ரீ விஸ்வேஸ்வரர் தேவஸ்தானத்தில் கடந்த 15 ஆம் திகதி சனிக்கிழமை முதல் ஆரம்பித்து எதிர்வரும் 14ஆம் திகதி சனிக்கிழமை வரை நடைபெறவுள்ளது

பங்குபற்ற விரும்பும் அடியார்கள் தின மும் மாலை 5.30 மணிக்கு நடைபெறும் ஆலயப் பூசையைத் தொடர்ந்து பங்குபற்றி பயன்பெறலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள் ளது. (6)

## உள்ளூராட்சி சபைக்குட்பட்ட 13 வீதிகள் புனரமைக்கப்படவுள்ளது

(யாழ்ப்பாணம்)

பி.எஸ்.டி. திட்டத்தின்கீழ் உள்ளூராட்சி சபைக்குட்பட்ட 13 வீதிகள் புனரமைப்பிற்கு 17 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

இத் திட்டத்தின் கீழ் அல்லாரை மீசாலை வீதி, கரவெட்டி மண்டன் ஜெலனியன் எம்.பி.சி. எஸ்.வீதி, வல்வெட்டித்துறை மீனாட்சி அம்மன் கோயில் வீதி, காரைநகர் முத்திப்புலவர் வீதி, வேலணை அம்பலவாணர் வீதி, நெடுந்தீவு மதிலந்தரை கோயில்வீதி, ஊர்காவற்றுறை மெலிஞ்சமுனை வீதி, மானிப்பாய் ரி.சி.வீதி, சங்கானை கண்டமை வீதி, கோப்பாய் கரந் தன் கரலிவத்தை வீதி, தெல்லிப்பளை வெல்லை வாய்க்கால்வீதி, உடுவில் கொத்தி யலடி இந்து மயான வீதி, நல்லூர் காரைக் கால் தோட்டவீதி ஆகியன புனரமைக்கப்படு வதற்கு நிதி ஒதுக்கப்பட்டுள்ளன.

இதேவேளை உள்ளூராட்சி அமைச் சினால் சி.பி.ஜி.திட்டத்தின் கீழ் கட்டடங்கள் புனரமைப்பதற்கு 2.2 மில்லியன் ரூபா நிதி யும் சமூக அபிவிருத்திக்கு 20 மில்லியன் ரூபா நிதியும் வீதி அலுவலக தளபாடங் களுக்காக 2.1 மில்லியன் ரூபா நிதியும் ஒதுக்கப்பட்டுள்ளதாக பிராந்திய உள்ளூ ராட்சி உதவி ஆணையாளர் திருமதி மதுமதி வசந்தகுமார் தெரிவித்துள்ளார். (6-7)

## பூப்பந்தாட்டப் போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட பிரதேச செயலகங்களுக் கிடையே நடைபெறும் பூப்பந்தாட்டப் போட்டி நாளை சனிக்கிழமை முற்பகல் 8.30 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.

ஆண்களுக்கான போட்டி சென்ஜோன்ஸ் கல்லூரியிலும் பெண்களுக்கான போட்டி சுண்டிக்குளி மகளிர் கல்லூரியிலும் இடம் பெறவுள்ளது.

பங்குபற்றும் சகல பிரதேச செயலக அணிகளும் அன்றைய தினம் காலை 8 மணிக்கு சமுகம் தந்து தமது பதிவினை உறுதிப்படுத்திக்கொள்ளுமாறு யாழ்.மாவட்ட விளையாட்டு அதிகாரி திருமதி ஏ.எப்.ஜே. ரூபசிங்கம் அறிவித்துள்ளார். (6-30)

## நில்சிப் நான்காண்டு அபிவிருத்தித் திட்டம்

(யாழ்ப்பாணம்)

நில்சிப் திட்டத்திற்கான சகல உள்ளூ ராட்சி மன்றங்களின் மக்கள் பங்களிப்புட னான நான்காண்டு அபிவிருத்தித் திட்டம் பிரதேச செயலாளர்களின் ஒத்துழைப்புடன் உள்ளூராட்சி மன்றங்களினால் தயாரிக்கப் படுகின்றன.

உலக வங்கியின் அனுசரணையுடன் இத் திட்டங்களுக்கான நிதி ஏற்பாட்டினை பெற்றுக் கொள்ளும் முகமாக நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாக பிராந்திய உள்ளூ ராட்சி உதவி ஆணையாளர் திருமதி மதுமதி வசந்தகுமார் தெரிவித்துள்ளார். (6-7)

## ஒலிம்பிக் தினம் தொடர்பான — கலந்துரையாடல் —

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் நடத்தப்படவுள்ள ஒலிம்பிக் தினம் தொடர்பான முன்னாயத்த கலந்துரையாடல் ஒன்று இன்று வெள்ளிக் கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ்.மாவட்ட செயலகத்தில் இடம்பெறவுள்ளது.

யாழ்.மாவட்ட அரச அதிபர் கே.கணேஷ் தலைமையில் இடம்பெறும் இக் கலந்துரை யாடலின் போது மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர்கள், வலயக் கல்விப் பணிப் பாளர்கள், உடற்கல்விப் பணிப்பாளர்கள், பிரதேச செயலாளர்கள், விளையாட்டு உத்தி யோகத்தர்கள் மற்றும் இலங்கை ஒலிம்பிக் போட்டி பிரதிநிதிகளும் கலந்துகொள்ளவுள் ளனர்.

யாழ்.மாவட்டத்தில் முதன்முறையாக எதிர் வரும் ஜுன் மாதம் 26 ஆம் திகதி நடத் தப்படும் இப்போட்டிக்கான முன்னாயத்த பணிகளுக்கான இக் கலந்துரையாடலில் தவறாது கலந்துகொள்ளும்படி கேட்கப்பட் டுள்ளது. (6-30)




## மாணவர் கௌரவிப்பும் நூல் வெளியீடும்

(யாழ்ப்பாணம்)

சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரியில் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்திபெற்ற மற்றும் அண்மித்த புள்ளிகளைப் பெற்ற மாணவர்களை வாழ்த்தும் நிகழ்வும் "எமது நல்வாழ்வு" நூல் வெளியீடும், "வைகறை-04" சஞ்சிகை வெளியீடும் இன்று வெள்ளிக் கிழமை முற்பகல் 9.30 மணிக்கு கல்லூரி மண்ட பத்தில் கல்லூரியின் உப அதிபர் கு.விமலன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வலி தென்மேற்கு பிரதேச செயலர் திருமதி எழிலரசி அன்ரன் யோகநாயகம் கலந்து சிறப்பிப்ப துடன் கௌரவ விருந்தினராக யாழ்.பல் கலைக்கழக வரலாற்றுத்துறை இணைப் பேராசிரியர் செ.கிருஸ்ணராஜா, சிறப்பு விருந் தினராக சண்டிலிப்பாய் கோட்டக் கல்விப் பணிப்பாளர் சி.கந்தசாமி ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (4)

## கடற்றொழிலாளர் கூ.சங்கம் புனரமைப்பு

(திருநெல்வேலி)

வடமராட்சி கிழக்குப் பகுதியில் கடற்றொழி லாளர் கூட்டுறவுச் சங்கங்கள் புனரமைக்கப் பட்டு வருகின்றன.

இதன் முதற்கட்டமாக மாமுனை கடற் றொழிலாளர் கூட்டுறவுச் சங்கம் அண்மை யில் புனரமைக்கப்பட்டு புதிய நிர்வாகசபை தெரிவு செய்யப்பட்டுள்ளது. (4-43)

## நடமாடும் சேவை

(யாழ்ப்பாணம்)

பிறப்பு,விவாகம்,தேசிய அடையாள அட்டை என்பனவற்றை பெற்றுக்கொள்ளா தவர்களுக்கான நடமாடும் சேவை ஒன்று நடைபெறவுள்ளது.

யாழ்.மாவட்ட செயலக உதவிப் பதிவாளர் நாயகத்துடன் இணைந்து யு.என்.டி.பி. நிறு வனத்தின் ஏற்பாட்டில் இந் நடமாடும் சேவை ஆரம்பமாகவுள்ளது.

யூன் மாதம் 9 ஆம் திகதி நெடுந்தீவு மற்றும் 10,11 ஆம் திகதி ஊர்காவற்றுறை ஆகிய பிரதேச செயலகங்களில் காலை 9 மணி தொடக்கம் மாலை 4.30 மணிவரை நடைபெறவுள்ளது.

இப் பிரதேசங்களில் இறுதியாக நடத் தப்படும் நடமாடும் சேவையினைப் பயன் படுத்திக் கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டுள் ளது.

இந்நடமாடும் சேவையில் முத்திரை, போட்டோகொப்பி என்பன இலவசமாக வழங் கப்படவுள்ளன.

மேலும் வெளிநாடுகளிலிருந்து வந்த இலங்கையர்கள் தேசிய அடையாள அட்டை பெறுவதற்கு ஏற்ற வசதிகளை குடிவரவு, குடியகல்வு திணைக்களம் மூலமாகப் பெற் றுக்கொடுக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள் ளது. (6-30)

## சங்காபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மண்டைதீவு தெற்கு திடுதிருக்கை அருள்மிகுஸ்ரீ ஞானவைரவர் தேவஸ்தான கும்பாபிஷேக தின அஷ்டோத்திர சத 108 சங்காபிஷேகம் எதிர்வரும் 25 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு நடை பெறவுள்ளது. (4)

## பொங்கல் விழா

(மருதங்கேணி)

மந்திகை கண்ணகை அம்மன் ஆலயத் தின் வருடாந்த பொங்கல் விழா 24 ஆம்திகதி திங்கட்கிழமை ஆரம்பமாகி முதலாம் திகதி செவ்வாய்க்கிழமை பொங்கல்விழா இடம் பெறும்.

இதில் அன்றைய தினம் காலை விசேட அபிஷேகங்கள் நடைபெற்று மாலை 3 மணிக்கு விசேடபூசைகள் இடம்பெறவுள் ளது.

மேலும் இப் பொங்கல் விழாவை முன் னிட்டு எதிர்வரும் 24 ஆம் திகதி திங்கட் கிழமை முதல் 31ஆம் திகதி வரை கோவலன் கண்ணகை புராணப் படிப்பும் இடம்பெறவுள் ளது. (4-35)

## சொற்பொழிவு

(யாழ்ப்பாணம்)

வட்டுக்கோட்டை பிராட்டி வளவு வைரவர் ஆலய அலங்கார உற்சவம் கடந்த 18 ஆம் திகதி ஆரம்பமாகி நடைபெற்று வருகின் றது.

இவ் உற்சவ காலத்தின் சிறப்பு நிகழ்வாக தினமும் இரவு 7.30 மணிக்கு பண்டிதர் பொ.சுகந்தன் "கம்பராமாயணம்" என்னும் விடயம் பற்றி தொடர் சொற்பொழிவாற்ற வுள்ளார். (4)

## வாகனத் தரிப்பிடம் புனரமைப்பு

(பருத்தித்துறை)

முறிகண்டிப் பிள்ளையார் ஆலயப் பகுதியில் பல இலட்சம் ரூபா செலவில் வாகனத் தரிப்பு புனரமைக்கப்பட்டு வருகி றது.

முல்லைத்தீவு வீதி அபிவிருத்தித் திணைக்களம் இதற்கான ஏற்பாடுகளைச் செய்து வருகிறது.

கனரக வாகனங்கள் மூலம் இதற்கான பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. (6-10)

## மின் தடை பற்றிய அறிவித்தல்

(யாழ்ப்பாணம்)

வடமராட்சிப் பிரதேசம் முழுவதும் நாளை சனிக்கிழமை காலை 8 மணிமுதல் மாலை 5 மணிவரை மின்சாரம் தடைப்படும் என சுன்னாகம் மின்சார சபையின் மின்பொறி யியலாளர் அறிவித்துள்ளார். (4)

# சர்வதேச புலி ஆதரவு அமைப்புக்கள் குறித்து விழிப்புடன் செயற்பட வேண்டும்

## கோத்தபாய ராஜபக்ஷ தெரிவிப்பு



(கொழும்பு)

சர்வதேச புலி அமைப்புக்கள் தொடர்பில் விழிப்புடன் செயற்பட வேண்டுமென பாது காப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ அறிவித்துள்ளார்.

யுத்தம் வெற்றியீட்டப்பட்டு ஓரண்டு பூர்த்தியாவதனை முன்னிட்டு வெளியிட் டுள்ள செய்தியில் அவர் இதனைக் குறிப்பிட் டுள்ளார்.

புலி ஆதரவு அமைப்புக்களினால் உலக நாடுகளில் பல்வேறு செயற்பாடுகள் முன் னெடுக்கப்பட்டு வருவதாகவும் நாடு கடந்த தமிழீழ இராச்சியம், க்ளோபல் தமிழ் போராம் போன்ற பல்வேறு வழிகளில் பிரிவினை வாதத்தை தூண்டும் நடவடிக்கைகளை புலி ஆதரவாளர்கள் முன்னெடுத்து வருவதாகவும் அவர் தெரி வித்துள்ளார்.

ஜனநாயக வழிமுறை என்ற போர்வையில் நாட்டை பிளவடையச் செய்வதற்கான முனைப் புகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக சுட்டிக்காட்டிய அவர் இந்த விடயங்கள் தொடர்பில் அனை வரும் விழிப்புடன் செயற்பட வேண்டுமென குறிப்பிட்டுள்ளார். (6)

# ஆளும், எதிர்க்கட்சிகளுக்கு சபாநாயகர் கடும் உத்தரவு

(கொழும்பு)

பாராளுமன்ற நிலையியற் கட்டளைக ளின் பிரகாரம் செயற்படுமாறும் அதே நேரம் சபையில் கேட்கப்படுகின்ற கேள்விகளுக்கு மாத்திரமே பதில் அளிக்கப்பட வேண்டும் என்றும் சபாநாயகர் சமல் ராஜபக்ஷ ஆளும், எதிர்க்கட்சிகளுக்கு கடுமையான உத்தரவைப் பிறப்பித்தார்.

பாராளுமன்றத்தில் செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற அமர்வின் போது கேள்வி நேரத் தில் இடையிடையே ஆளும், எதிர்க் கட்சிகளுக் கிடையில் வாய்த்தர்க்கம் ஏற்பட்டது.

ஐக்கிய தேசிய முன்னணியின் அம்பாந் தோட்டை மாவட்ட எம்.பி.சஜித் பிரேமதாஸ சுற் றாடல் துறை அமைச்சரிடம் கேள்வியெழுப் பியதையடுத்து அமைச்சர் அனுர பிரியதர் ஷன யாப்பா அக்கேள்விக்குப் பதிலளிக்க இரண்டு வார கால அவகாசம் கேட்டுக்கொண் டார்.

இதனையடுத்து கேட்கப்பட்ட முதலாவது கேள்விக்கே பதிலளிக்க முடியாது கால அவ காசம் கேட்பதாக எதிர்க்கட்சியினர் கூச்சலிட்ட னர்.

ஐக்கிய தேசிய முன்னணியின் எம்.பி.க் களான ரவி கருணாநாயக்க, தயாசிறி ஜய சேகர ,ஜயலத் ஜயவர்த்தன, ஜோன் அமர துங்க உள்ளிட்டோர் தொடர்ந்தும் இதற்கு எதிர்ப்புத் தெரிவித்தனர்.

இதனிடையே அமைச்சரின் வேண்டு கோளுக்கிணங்க சபாநாயகர் இரண்டு வார கால அவகாசம் வழங்கினார்.

இந்தச் சந்தர்ப்பத்தில் எதிர்க்கட்சித் தலை வர் ரணில் விக்கிரமசிங்க விடயமொன்றை முன் வைக்கப் போவதாகக் கூறி எழுந்து நின்று சபாநாயகரின் அனுமதியைக் கோரினார்.

இருந்த போதிலும் சபாநாயகர் அதற்கு அனுமதி மறுத்ததுடன் கேள்விக்கான விடை யளிப்பதற்கு இரண்டு வார கால அவகாசம் வழங்கப்பட்டு விட்டது. எனவே பாராளுமன்ற நிலையியற் கட்டளைகளின் பிரகாரம் உறுப்பி னர்கள் நடந்து கொள்ள வேண்டும் என பணித் தார்.

இதனையடுத்து எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க அமர்ந்து விட்டார்.

இதேவேளை சஜித் பிரேமதாஸ எம்.பி. யின் பிறிதொரு கேள்விக்கு பதிலளித்துக் கொண்டி ருந்த பிரதியமைச்சர் ஜகத் புஷ்பகுமார இந் நாட்டின் தேசியத் தலைவராக உருவாகப் போகின்ற நீங்கள் அம்பாந்தோட்டையை மாத் திரமே வரையறுத்து ஏன் கேள்வியெழுப்புகி றீர்கள், செயற்படுகிறீர்கள் என்று திருப்பிக் கேட் டார்.

இதன் போது ஆளும் கட்சியினர் கூச்ச லிட்டதுடன் மேசையையும் தட்டி சத்தமிட்ட னர்.

இதனையடுத்து கடுமையான தொன [illegible] கூறிய சபாநாயகர், அமைச்சரே கேட்கப்[illegible] கேள்விக்கு மாத்திரமே பதிலளிக்க வேண்டும் என்று பிரதியமைச்சர் ஜகத் புஷ்பகுமாரவுக்கு எச்சரிக்கை விடுத்தார்.

இதேவேளை குறுக்கிட்ட சஜித் பிரேம தாஸ எம்.பி. ,தன்னால் கேட்கப்பட்ட கேள்விக்கு பிரதியமைச்சரிடம் இருந்து பதில் கிடைக்க வில்லை என்று மீண்டும் மீண்டும் கூறிய போதிலும் சபாநாயகர் அடுத்த கேள்வியை கேட்குமாறு அறிவித்தார். (6-4)

## இலங்கை விடயத்தில் தலையிடுமாறு

# பிரித்தானியாவின் புதிய அரசிடம் கிறிஸ்தவ அமைப்பு வேண்டுகோள்

(கொழும்பு)

இலங்கையில் யுத்தம் இடம்பெற்ற பிர தேசங்களை அணுகி ஆக்க முறையான செயற்பாடுகளில் ஈடுபடுமாறு பிரித்தானிய கிறிஸ்தவ அமைப்பு ஒன்று பிரித்தானிய புதிய அரசாங்கத்தையும் அனைத்துலக அமைப் புக்களையும் கோரியுள்ளது.

யுத்தம் நிறைவடைந்து ஒரு வருடங்கள் நிறைவடைந்துள்ள நிலையிலும் 70 ஆயி ரத்துக்கும் அதிகமான மக்கள் முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளமையை அந்த அமைப்பின் அறிக்கை கண்டித்துள்ளது.

இந்த நிலையில் பிரித்தானிய அரசாங்கம் கண்டிப்பாக இலங்கையின் வடபிராந்திய தமிழர்களுக்கு உதவவேண்டும் என அதன் இலங்கை விவகார முகாமையாளர் பிரயன் மார்டின் தெரிவித்துள்ளார்.

யுத்தம் நிறைவடைந்து தற்போது மீள் குடியேற்றங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. எனினும் முகாம்களில் சுமார் 76 ஆயிரத் துக்கும் அதிகமானவர்கள் எஞ்சியுள்ள னர்.

மீள்குடியேற்றம் செய்யப்படுகின்ற மக்கள் தொடர்பில் பல தொண்டு நிறுவனங்கள் பணியாற்றி வருகின்ற நிலையில் முகாமில் உள்ள மக்கள் தனித்து விடப்பட்டுள்ளனர்.

இந்த நிலையில் அவர்களுக்கு உதவி வழங்கி துரிதமாக மீள்குடியேற்ற பிரித்தா னிய மற்றும் சர்வதேச சமூகங்கள் உதவி புரிய வேண்டும் என அவர் கோரியுள்ளார்.

அத்துடன் அவர்களுக்கு உதவி வழங்கி நிலையான வாழ்வினை வழங்குவதற்கு பாரிய நிதி தேவைப்பட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (6)

# 21.05.2010

# இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

## நிகழ்வுகள்

- 996-புனித ரோமப் பேரரசின் மன்னனாக 16 வயது மூன்றாம் ஓட்டோ முடி சூடினான்.
- 1502-போர்த்துக்கீச மாலுமி ஜொவாவோடா நோவா புனித ஹெலெனா தீவைத் கண்டுபிடித்தார்.
- 1792-ஜப்பானில் ஊன்சென் மலை வெடித்ததில் இடம் பெற்ற சூறா வளி மற்றும் சுனாமியினால் 14300 பேர் கொல்லப்பட்டனர்.
- 1851-கொலம்பியாவில் அடிமைத் தொழில் ஒழிக்கப்பட்டது.
- 1859-பிக் பென் மணிக்கூடு முதன் முறையாக இயக்கப்பட்டது.
- 1864-ரஷ்ய-கோக்கச்ஸ் போர் முடிவடைந்தது.
- 1871-பிரஞ்சு அரசுப் படைகள் பாரிஸ் கம்யூனைத் தாக்கியது. ஒரு வார முற்றுகையில் 20000 கொம்ம்யூன் மக்கள் கொல்லப்பட்டு 38000 பேர் கைது செய்யப்பட்டனர்.
- 1894-22 வயது பிரஞ்சு கொடுங்கோலன் எமிலி ஹென்றி கழுத்து துண்டிக்கப்பட்டு மரண தண்டனைக்கு உள்ளாக்கப்பட்டான்.
- 1904-பாரிசில் உதைபந்தாட்ட கூட்டமைப்பு (FIFA) ஆரம்பிக்கப்பட்டது.
- 1917-அட்லாண்டாவில் இடம் பெற்ற பெருந்தீயில் பெரும் அழிவு ஏற்பட்டது.
- 1941-இரண்டாம் உலகப் போர்: பிரேசிலில் இருந்து 950 மைல் தூரத்தில் றொபின்மூர் என்ற அமெரிக்க போர்க்கப்பல் ஜெர்மனி யின் யூ-படகினால் மூழ்கடிக்கப்பட்டது.
- 1991- எதியோப்பியாவின் கமியூனிச அரசுத் தலைவர் மெங்கிஸ்டு ஹைலி மரியாம் நாட்டில் இருந்து தப்பி வெளியேறினார். எதியோப் பிய உள்நாட்டுப் போர் முடிவுக்கு வந்தது.
- 1994-யேமன் மக்களாட்சிக் குடியரசு யேமன் குடியரசில் இருந்து விலகியது.
- 1996-தான்சானியாவில் பூக்கோவா என்ற பயணிகள் கப்பல் மூழ்கியதில் 1000 பேர் வரையில் கொல்லப்பட்டனர்.
- 1998-32 ஆண்டுகள் இந்தோனேசியாவை ஆண்ட சுகார்டோ பதவி விலகினார்.
- 2003-வடக்கு அல்ஜீரியாவில் நிகழ்ந்த நிலநடுக்கத்தில் 2000 பேருக்கு மேல் கொல்லப்பட்டனர்.
- 2006-புலிகளின் மட்டக்களப்பு மாவட்ட துணைத்தளபதி கேணல் ரமணன் நினைவு நாள்.

## பிறப்புக்கள்

- கி.மு427-பிளேட்டோ,கிரேக்கத் தத்துவவியலாளர் (இ கி.மு347)
- 1919-எம்.என் நம்பியார்,நடிகர் (இ 2008)
- 1921-அந்திரே சாகராவ், ரஷ்ய இயற்பியலாளர்(இ 1989)

## இறப்புக்கள்

- 1991-ராஜீவ் காந்தி,முன்னாள் பிரதமர் (பி 1944)
- 2000-பார்பரா கார்ட்லண்ட், ஆங்கில நாவலாசிரியை (பி 1901)

## சிறப்பு நாள்

- சிலி-கடற்படை நாள்
- இந்தியா-பயங்கரவாதத்திற்கு எதிரான நாள்


### 1991-முன்னாள் இந்தியப்



பிரதமர் ராஜீவ் காந்தி சென் னைக்கு அருகில் ஸ்ரீபெரும்புதூரில் மனிதக் குண்டு வெடிப்பொன் றில் கொல்லப் பட்டார்.

# இணைய ஊடகவழியில் கல்வியும் தகவல்களும்

5



அறிவுசார் நாடுகள், அறிவு குறைந்த நாடுகள் என நாடுகளை மதிப்பிடும் காரணியாக அறிவுக் கட்டமைப்பு மாற்றம் பெற்றுள்ளது.

அறிவை சாத்தியப்படுத்துவதில் தகவல் தொடர்புக் கருவிகளின் பயன்பாடு கணிசமான பங்கு வகிக்கின்றது.

இணைய வழி வசதிவாய்ப்புக்களையும் அதன்மூலமான கற்கை வாய்ப்புக்களை மட்டப்படுத்துவதில் நகர கிராம இடைவெளி, இணையவழி கல்விக்கு தரமான பாடப் பொருள் எழுதும் பயிற்சி பெற்ற நிபுணர் இன்மை, இணையத்தள ஆய்வுகூட வசதிகளின் மட்டுப்பாடுகள், கணனி உபகரணம் கொள்வனவு, பரமாரிப்பு,செலவீனம் அதிகரித்த நிலையில் உள்ளமை மற்றும் ஆசிரியர், மாணவர் இடைவினையுறவு இணையவழி முறையில் சாத்தியமற்றுக் காணப்படுதல், ஒப்பீட்டு ரீதியில் கல்வி வளாகங்களில் ஏற்படுத்தப்படும் கற்கும் வசதி வாய்ப்புக்களை இணையத்தில் உருவாக்க முடியாமை கணனி உபகரணப் பயன்பாடு தொடர்பான நிறுவனமுகாமைத்துவம் சார்ந்த நடைமுறைப்பிரச்சினைகள், ஆங்கிமொழி சார்ந்த மற்றும் கணனி அறவு சார்ந்த பின்னடைவுகள் செல்வாக்குச் செலுத்துவதைக் குறிப்பிட முடியும்.

அறிக்கை வழியிலான தகவல் செயன்முறைக்கான வசதியாக இணையத்தள பயன்பாடு நேர் அணுகுமுறையில் நோக்கப்பட்டு பயன்படுத்தப்படுகின்ற அதேவேளை எதிர்மறை அணுகுமுறையில் இணைய வசதி வாயப்ப்புக்கள் இளைய தலைமுறையினரால் முன்னெடுக்கப்படுவதையும், உணர்ந்து கொள்ளமுடியும். தகவல் சமூகத்தின் கருவியான இணையம் மாணவர்களைத் தீயவழியில் சிந்திக்கவும், வழிநடத்தவும் காரணமாக அமைவதை பெற்றோர் - ஆசிரியர் பிள்ளைகள் முறையான கவனத்துடன் அவதானிப்பதுடன், பொருத்தமான ஊடகத் தகவல் செய்தல் பயனுடையதாக அமையும்.

இன்று கணனியின் விலை வீழ்ச்சியையும், இணையத் தொடர்பின் அதிகரிப்பும் யாவருக்கும் கணனியென்ற நிலைப்பாட்டை ஏற்படுத்தியுள்ளது. அறுபது ஆண்டுகால ஆராய்ச்சியின் படி கற்றல் செயற்பாட்டில் தகவல் தொழில்நுட்பதைப் பயன்படுத்தும் போது ஆசிரியர்களின் தொழிற்திறனும் அதன் விளைவும் இரு மடங்காகும்.

மாணவர்களின் கற்றல் 30 சதவீதத்தாலும் அதிகரிக்கும். 40 சதவீதம் நேரம் மிச்சமாகும். செலவுகள் 30 சதவீதம்குறையும்.(ஐக்கிய அமெ ரிக்க ஆய்வுமுடிவுகள்-1990) எனக் குறிப்பிடப்படுகின்றது. கல்வியும் இணைய ஊடகமும் தொடர்பான சர்வதேச ரீதியான ஆய்வு முடிவுகள் பின்வருமாறு விபரிக்கின்றன.


- கல்வி நிறுவனங்கள் இலத்திரனியல் ஊட கத்தைப் பயன்படுத்துவதன்மூலம் செலவு குறைவடையும்.
- அறிவைப் பரப்புவது இலத்திரனியல் ஊடகத்தில் சிக்கனமானதும், விரைவானதும்
- CD,DVD களை ஏராளம் கல்விக்காகப் பயன்படுத்த முடியும்
- இணையத்தளத்தில் தகவல்கள் புதிது புதிதாக இற்றைப்படுத்தப்படும் (Updating)

இவ்வாறான நிலைப்பாடுகள் கல்வி, இணைய ஊடகம் தொடர்பினை மேலும் ஒரு பட உயர் நிலைக்கு இட்டுச் செல்வதாக அமைகின்றது. ஊடக வழிமூலமான கற்கை வாய்ப்பின் தேவைப்பாடுகளை வலியுறுத்துவதுடன், கற்றல் -கற்பித்தலுக்கு இணைய வழி ஊடக கருவிகளின் துணைப்பாட்டை நிறுவுவதாக அமைகின்றது.

நவீன தொழில் நுட்பம் குறிப்பாக தகவல் சாதனங்கள் கல்வி செயற்பாட்டின் தர நிலைப்பாட்டைப் பேணுவதிலும், பண்பு நிலைகளை குறித்துக் காட்டுவதிலும், சமகால தகவல் வழி மூலமான அறிக் கை விருத்திச் செயன்முறையில் முக்கிய பங்கு தாரராக விளங்குவதையும் அவதா னிக்க முடிகின்றது.



பரராஜசிங்கம் இராஜேஸ்வரன்
ஆசிரிய பயிற்றுவிப்பாளர் -ஊடக தகவல் கற்கை
ஆசிரியர் - தொடர்பாடல் ஊடகக்கல்வி
யா/ கொக்குவில் இந்துக் கல்லூரி



அறிவுசார் சமூக அபிவிருத்திக்கான தரங்காட்டியாகக் கூட தக வல் சாதன பயன் நிலை கவனத்தைப் பெற்றுள்ளது. இவற்றினடிப் படையில் இணைய வழி ஊடகக் கல்வியும் அவற்றின் மூலமான தகவல் தொடர்பு செயன் முறையும் அறிவுசார் சமூக தரங்காட்டிகளாக முனைப்புப் பெற்றுள்ளன எனலாம். (முற்றும்)

# புலிகளை அழித்து தாம் பெற்றுக்கொண்டதாக கூறும் வெற்றிக்கு இலங்கை கொடுத்த விலை அதிகம்

## அல்ஜசீரா தொலைக்காட்சி தெரிவிப்பு

(கொழும்பு)

கடந்த வருடம் இடம்பெற்ற இறுதி யுத்தத்தில் விடுதலைப்புலிகளைத் தோற்கடித்து ஒரு வருடமாவதை நினைவுகூர்ந்து இலங்கை அரசு விழாக்களைக் கொண்டாடுகிறது.

விடுதலைப்புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனைக் கொன்று 25 வருட உள்நாட்டு யுத்தத்தில் வென்றுவிட்டதாக கடந்த வருடம் அரசாங்கம் அறிவித்திருந்தது.

ஆனால் இந்த வெற்றிக்கு அரசாங்கம் கொடுத்த விலையோ அதிகம் என அல்ஜசீரா தொலைக்காட்சி தெரிவித்துள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, போரின் இறுதிக் கட்டத்தில் இடையே அகப்பட்டிருந்த மூன்று இலட்சம் மக்களை அரசாங்கம் தடுப்பு முகாம்களில் வைத்தது. எனினும் இந்த எண்ணிக்கை மிகைப்படுத்தப்பட்டது என அரசாங்கம் தெரிவித்துள்ளது.

அரசாங்கப் படைகள் வைத்தியசாலைகள், உணவு விநியோகிக்கும் இடங்கள் மீது தாக்குதல் நடாத்தியதற்குத் தம்மிடம் போதிய ஆதாரங்கள் இருப்பதாகவும் போர்க்குற்றங்கள் தொடர்பாக விசாரணை நடாத்தப்பட வேண்டும் என்றும் சர்வதேச அளவில் பல அமைப்புக்கள் கோரி வருகின்றன.

சர்வதேச மோதல் தவிர்ப்பிற்கான அமைப்பு போர்க் குற்றங்கள் தொடர்பான விசாரணையை நடத்துவதற்கு போதிய ஆதாரங்கள் இருப்பதாக தெரிவித்துள்ளதாக லூயிஸ் ஆபர் அல்ஜசீராவுக்குத் தெரிவித்தார்.

தாம் எப்போது போரியல் விதிமுறைகள் குறித்தும் பொதுமக்களுடைய இழப்புக்கள் குறித்தும் கவனத்துடன் இருந்தோம் என்று இலங்கை அரசாங்கம் தெரிவிக்கும் கூற் றுக்கு சவால் விடும் வகையில் பொதுமக்கள் மீதும், வைத்தியசாலைகள் மீதும், மனிதாபிமான நிறுவனங்கள் மீதும் நடாத்தப்பட்ட தாக்குதல் குறித்த ஆதாரங்களைத் திரட்டிக் கொண்டிருக்கிறோம் என்றும் அவர் தெரிவித்தார்.

சிவிலியன் இலக்குகள் மீது தாங்கள் கனரக ஆயுதங்களைப் பாவிக்கப் போவதில்லை என்று இலங்கையின் ஜனாதிபதி உறுதியளித்திருந்தார்.

இலங்கையின் வெளியுறவுச் செயலாளர் பாலிதகோகனவும் இந்த உறுதி மொழிக்குப் பின்னர் இலங்கை அரசாங்கம் அவ்வாறான நடவடிக்கைகளில் இடுபடாது என்றுபோரின் போது தெரிவித்திருந்தார்.

இலங்கை அரசாங்கத்தின் நடவடிக்கைகள் குறித்த சர்வதேச சமூகமும் போரின் போது தனது கண்டனத்தைத் தெரிவித்திருந்தது.

ஐ.நாவும் ஏனைய நிறுவணங்களும் பொது மக்கள் பாதிக்கப்பட்டது தொடர்பில் கண் களை மூடிக்கொண்டிருப்பதாக மனித உரிமை நிறுவுணங்கள் குற்றம்சாட்டியுள்ளன. அத்தோடு அரசாங்கம் தமிழர்கள் தடுத்துவைக்கப்பட்டிருந்த இடைநிலை முகாம்களுக்குச் செல்வதற்குத் தமக்குத் தடை விதிக்கப்பட்டது தொடர்பிலும் தமது அதிருப்தியை வெளியிட்டுள்ளன.

தமது இடங்களுக்குத் திரும்பிப் போக முடியாமலோ அல்லது அங்கிருந்து பணம் கொடுத்து வெளியேற முடியாமலோ இன்னமும் எண்பதாயிரம் குடும்பங்கள் முகாம்களில் வாழ்ந்து வருகின்றன என அல்ஜசீரா தெரிவித்துள்ளது. (6)

# முன்னாள் புலி உறுப்பினர்களில் 20 ஜோடிகளுக்கு திருமணம் செய்து வைக்க திட்டம்

தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ள முன்னாள் விடுதலைப்புலி உறுப்பினர்கள் சிலருக்கு திருமணம் செய்துவைக்க திட்டமிடுவதாக அவர்களின் புனர்வாழ்வுக்குப் பொறுப்பாக இருக்கும் இராணுவ அதிகாரி ஒருவர் கூறியுள்ளார்.

எதிர்வரும் ஜூன் நடுப்பகுதியில் சுமார் 20 ஜோடிகளுக்கு திருமணம் செய்துவைக்கப்படுமென எதிர்பார்க்கப்படுவதாக புனர்வாழ்வு ஆணையாளர் நாயகம் பிரிகேடியர் சுதந்த ரணசிங்க பி.பி.சிக்கு தெரிவித்துள்ளார்.

அவர்கள் வாய்மொழி மூல உறுதிமொழி மூலம் திருமணம் செய்திருந்ததாகவும் ஆனால் உத்தியோகபூர்வமாக திருமணம் செய்திருக்கவில்லையெனவும் அவர் கூறியுள்ளார்.

அவர்கள் அநேகமானோர் தமது ஜோடிகளை திருமணம் செய்ய விரும்புவதாகவும் ஆயினும் இரு தரப்பினரதும் பெற்றோர்களினதும் இணக்கத்தை அதிகாரிகள் பெற்றுக் கொள்ள வேண்டியிருப்பதாகவும் அவர் தெரிவித்தார். ஆயினும் சில ஜோடிகளின் நிலைமை மாற்றமடைந்திருக்கலாமெனவும் தெரிவித்தார்.

யுத்தத்தின் முடிவில் சுமார் 10 ஆயிரம் முன்னாள் போராளிகள் முகாம்கள் அல்லது புனர்வாழ்வு நிலையங்களில் ஜோடிகள் பிரித்து வைக்கப்பட்டிருந்தனர் எனினும் கிழமைக்கு ஒரு தடவை ஒருவரையொருவர் சந்திப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டதாக பிரிகேடியர் ரணசிங்க கூறியுள்ளார்.அவர்கள் சட்ட ரீதியாகத் திருமணம் செய்தபின் புனர்வாழ்வு நிலையத்திலிருந்து குடும்பங்கள் தங்கியிருக்கும் இடங்களுக்கு செல்ல முடியும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (6)

# COLOMBO COMMERCE RESOURCE CENTRE
# கொழும்பு வணிகவள நிலையம்

முன்னோடிப் பரீட்சை

G.C.E(Advance Level) 2010

## General English - II

Time : $2\frac{1}{2}$ hours

### Part - II

### Part A - Vocabulary

I. Choose the correct words from the brackets to fill in the blanks.

1. Mr. Romesh's ________________ (vacation, notation, vocation) is photography, but he is a full time teacher.
2. The ________________ (vain, vane, vein) pointed to the North.
3. During his ________________ (tenure, tenor, tender) of office, many strange things happened.
4. The new manager has recently issued several ________________ (ordinance, audience, ordnance)
5. A dose of ________________ (physique, psychic, physic) will do you good.

**(05 Marks)**

II. Read the following passage given below and write down the meanings of the underlined words as they appear in the text.

A little knowledge is a dangerous thing because it often makes us <u>conceited.</u> When we first begin to study a subject, it seems easy. And since we know more about it than some other people who know little or nothing at all, we get <u>puffed</u> up and think we know a lot. We begin to give ourselves airs and use a few learned words we have learn to <u>impress</u> upon others that we are great <u>scholors</u>. There was a friend of mine who was very fond of reading books on medicine. Whenever he fell ill, he used to <u>consult</u> his medical books, and buy medicines and <u>treat</u> himself. Once he had fever and <u>persistent</u> cough. He tried his own medicines, but he got worse day by day. At last his parents called in a doctor who found he had <u>abscess</u> of the liver, and <u>suggested</u> an <u>immediate</u> operation to save his life. When he got better, he was "a sadder and wiser man" and had learnt that a little knowledge is a dangerous thing.

..........................................................................................

..........................................................................................

**(15 Marks)**

III. Make five sentences by choosing five words from the box given below.

wretched, laborious, righteous, orator, interference, determine, ambassador, clenched.

**(10 Marks)**

### Part B - Dialogue

1. Complete the dialogues with the suitable situation.

Ranjith : Hello! May I speak to Mr.Suren?

Malathi : I'm sorry. He's not here at the moment. Can you call later.

Ranjith : I'm sorry ________________________________

Malathi : Oh! If its urgent, I would try to help you.

Ranjith : Thank you ________________________________

Malathi : I'm Mrs. Malathi Suren.

Ranjith : T h

________________________________________

Malathi : Sure, I'll pass the message to Suren.

Ranjith : Please ask him to be punctual

Malathi : He'll be there at the correct time.

Ranjith :

________________________________________

Malathi :

________________________________________

**(05 Marks)**

2. Ramani Perera, the lecturer of Technical College wanted to have an appointment with Mr.A.K.Ariyakumar the Professor of Anthony's Medical College India who's arrived recently to SriLanka for a meeting. Ramani Perera wanted to invite Mr.Ariyakumar to have a speech on "Genetics" at the Technical College.

Make Suitable dialogues between Ramani Perera and Mr.Ariyakumar (Use maximum 5 dialogues for each person)

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

**(15 Marks)**

### Part C - Comprehension

I. Read the passage given below and answer the questions that follow.

It was very hot in the small court room and everybody was feeling sleepy. After a tiring morning, the clerks were anxious to get off to lunch and even the judge must have felt relieved when the last case came up before the court. A short middle aged man with grey hair and small blue eyes was standing before him. The man had a foolish expression on his face and he kept looking around stupidly as if he was trying hard to understand what was going on. The man was accused of breaking into a house and stealing a cheap watch. The witness who was called, did not give a very clear account of what had happened. He claimed to have seen a man outside the house one night but on being questioned further, he confessed that he was not sure whether this was the man. The judge considered the matter for a short time and then declared as that as there was no real proof, the man could not be found guilty of any crime. He said that the case was dismissed and then rose to go. Meanwhile, the accused looked very puzzled. It was clear that he had not understood a thing. Noticing this, the judge paused for a moment and then the man said suddenly "excuse me sir but do I have to give the watch back or not?"

1. The judge must have felt relieved when the last case came up. Why?

(02 Marks)

2. Give a description of the man facing the judge in the last case

(03 Marks)

3. What was the charge against the man?

(02 Marks)

4. What was the reason for the dismissal of the case?

(02 Marks)

5. Was the man facing the trial "innocent of the case"?

(02 Marks)

6. Suggest a suitable title to the passage

(02 Marks)

7. Pick out words from the passage which mean the following "To admit that one has done wrong"

(02 Marks)

8. Use any two of the following words in sentences of your own :
   a) Puzzled
   b) Stupidly
   c) guilty

(03 Marks)

9. Write down what the following refer to :
   a) "It" in the first line
   b) "I" in the last line

(02 Marks)

II. Read the following poem and answer the questions given below :

**The Garden Seat**

Its former green is blue and thin,
And it's once firm legs sink in and in,
Soon it will break down unaware,
Soon it will break down unaware.

At night when reddest flowers are black
Those who once sat there on come back;
Quite a row of them sitting there,
Quite a row of them sitting there.

With them the seat does not break down,
Nor the winter freeze them nor floods down,
For they are as light as upper air,
They are as light as upper air!

- Thomas Hardy -

1. Describe the condition of the garden seat mentioned in the poem

2. Why do you think the garden seat is in the bad condition?

3. How do the flowers look like in the night?

4. Why didn't the bench break even after "they" sat?

5. Which line says that those who already used the garden seat have com back?

(10 Marks

## Part D - Composition

Write an essay on one of the following topics (200 words)
a) Write a story explaining the proverb "Prevention is better than cure".

OR

b) Give hands to our elders.

(20 Marks

---

## Part A - Vocabulary

I. vocation II. 1. conceited - full of pride 6. pe
sistent - continuous
vane 2. puffed - clever expression 7. Con
sult - to go through books
tenure 3. impress - favorable effect 8. a b
scess - swollen part of the body.
physic 4. scholars - student learners 9. sug
gested - idea put forward
5. treat - medical care 10. im
mediate - sudden happening at once

III. Language

Grammar

Meaning

## Part B - Dialogue

I. Language II. Language
Grammar Grammar

## Part C - Comprehension

I.
1. He must have felt relieved because he was tired and sleepy after a whole day's trial.
2. A foolish looking middle aged man with grey hair and small blue eyes
3. He was charged against stealing a cheap watch from a house.
4. There was no real proof and the man could not be found guilty
5. No he wasn't
6. (own choice)
7. Accused
8. puzzled - confused
   stupidly - foolishly
   guilty - suspicion / blame
9. a) 'it' - court room
   b) 'I' - The man who was accused

II.
1. It's green and blue in colour and so one of its legs is broken and sunk in
2. No one had taken care of the garden seat for a long time
3. Its red look like black.
4. It didn't break because they were weightless.
5. Those who once sat there on came back

## Part D - Composition

1. Language
   Grammar
   Facts
   Paraphrasing

# வைகாசி மாதப் பலன்கள்



## தனுசு

(மூலம் ,பூராடம், உத்தராடம் முதலாம் பாதம்)

**விருந்தினர்களை உபசரிப்பதில் வியப்படைச் செய்யும் தனுசு ராசி நேயர்களே!**

வைகாசி மாதக்கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது தொழில் ஸ்தானத்தில் உலா வரும் சனி வக்ர நிவர்த்தியாவதும் அதை குரு பார்ப்பதும் அஷ்டமத்துச் செவ்வாய் பெயர்ச்சியாவதும் இம்மாத கிரக நிலை அமைப்பில் இருப்பதால் இதுவரை இருந்த கவலைகள் இனி மாறும். எதிர்பார்ப்புகள் நிறைவேறும். கடன் சுமை குறைய மற்றவர்கள் கைகொடுத்து உதவுவர். புதிய பொறுப்புகளும் பதவிகளும் வந்து சேரலாம்.

உலா வரும் கிரக நிலைகள் நன்றாக இருக்கும் பொழுது ஒவ்வொரு காரியங்களும் துரிதமாக நடைபெறும். வெற்றி விழாக்களும் கொண்டாட்டங்களும் உங்களைத் தேடி வரும்.அந்த அமைப்பு இம்மாதம் இருப்பதால் புதிய பாதையில் பயணம் செய்ய போகிறீர்கள். தொழில் வளம் பெருகும். தொகை வந்து கொண்டேயிருக்கும். வழிவழியாக வந்த பகை இனி மாறும். உங்கள் வார்த்தைகளுக்கு மதிப்பு கூடும்.

குருவின் பார்வையை பலப்படுத்தும் விதத்தில் வியாழன் தோறும் வழிபாடுகளை மேற்கொள்ளுங்கள். ஜென்ம ராகு சப்தம கேதுவிற்கு பரிகாரமாக சர்ப்ப சாந்திகளை முறையாகச் செய்வது நல்லது. யோகம் தரும் ராகுவை வழிபட்டால் தேக நலனும் சீராகும். செல்வ வளமும் பெருகும்.

மே 16 ஆம் திகதி மிதுன ராசியில் சுக்ரன் சஞ்சரிக்கிறார். ஆறுக்கு அதிபதி ஏழில் சஞ்சரிக்கும் பொழுது எதிரிகளால் சில மாற்றங்களைச் சந்திக்கலாம்.பிறரிடம் ஒப் படைத்த பொறுப்பு மீண்டும் உங்களிடமே வந்து சேரும். பிரச்சினைகளை தீர்த்துக் கொள்ள சமாதானத்தைக் கடைப்பிடிப்பது நல்லது. மறைமுக எதிர்ப்புகள் உருவாகும். இருப்பினும் கேதுவுடன் சுக்கிரன் இணைவதால் பாதிப்பு ஏற்படாது.

மே 27 ஆம் திகதி சிங்க ராசியில் செவ்வாய் சஞ்சரிக்கப்போகிறார்.அஷ்டமத்துச் செவ்வாயின் ஆதிக்கம் முடிந்ததால் இனி ஆரோக்கியம் சீராகும்.வாகனங்களில் செல்லும் பொழுது பயப்படத்தேவையில்லை. இருப்பினும் புதிய வாகனங்கள் வாங்குவதன் மூலமும் பழைய வாகனங்களை பழுது பார்த்து ஒழுங்கு செய்வதன் மூலமும் பலனடையலாம். தந்தை வழியில் ஏற்பட்ட பிரச்சினைகள் அகலும். பூர்வீக சொத்துக்களால் லாபம் கிட்டும்.

பத்தாமிடத்தில் சஞ்சரிக்கும் சனி பகவான் இதுவரை வக்ரமாக இருந்தார். அதன் வக்ர நிவர்த்தி மே 27 ஆம் திகதி என்பதால் அதன் பிறகு தொழில் கூட்டாளிகளின் ஒத்துழைப்பு கூடும். நபர்கள் ஒவ்வொரு நாளும் நல்ல தகவல்களைக் கொண்டு வந்து சேர்ப்பர். எதிர்கால நலன் கருதி சேமிக்க முற்படுவீர்கள்.

மே 31 ஆம் திகதி இடப ராசியில் புதன் சஞ்சரிக்கப்போகிறார்.இதன் விளைவாக வாழ்க்கைத்துணை வழியே பிரச்சினைகள் ஏற்பட்டு அகலும். ஜூன் 10 ஆம் திகதி கடக ராசியில் சுக்ரன் சஞ்சரிக்கப்போகிறார்.எனவே கேட்ட இடத்தில் உதவிகள் கிடைக்கும். விலை உயர்ந்த பொருட்களை வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள்.

இம்மாதம் நன்மைகள் வந்து சேர குரு தெட்சினாமூர்த்தியை வியாழக்கிழமை வழிபட்டு வரலாம்.



## மகரம்

(உத்தராடம் 2, 3,4 ஆம் பாதங்கள், திருவோணம், அவிட்டம் 1, 2 ஆம் பாதம்)

**சாமர்த்தியமாக பேசி சமாளிக்கும் ஆற்றலை பெற்ற மகர ராசி நேயர்களே!**

வைகாசி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது வருமானம் திருப்தி தரும் விதத்திலேயே இருக்கிறது. விரயாதிபதி மற்றும் சகாய ஸ்தானாதிபதியாக விளங்கும் குரு பகவான் மூன்றில் சஞ்சரித்து இம்மாதம் தொடங்குவதால் உடன்பிறப்புகள் வழியில் சகாயமும் விரயங்களும் ஏற்படும். ராசிநாதன் சனியின் வக்ர நிவர்த்திக்கு பிறகு உடல் ஆரோக்கியம் சீராகி உற்சாகப்படுத்தும். உள்ளத்தில், எண்ணியதை உடனுக்குடன் செய்து முடிக்கும் வல்லமை பிறக்கும்.

மாததொடக்கத்திலேயே சப்தம ஸ்தானத்தில் செவ்வாய் நீச்சம் பெற்றுள்ளார். எனவே முன்கோபத்தையும் முரட்டு பிடிவாதத்தையும் மாற்றிக் கொள்வது நல்லது. அருகில் இருப்பவர்களை அனுசரித்துச் செல்வதன் மூலம் ஆதாயங்களை அதிகம் அடைய முடியும். வாங்கிய சொத்துக்களை விற்கும் சூழ்நிலை ஏற்பட்டாலும் அதற்கு இணையான சொத்துக்களை வாங்கும் வாய்ப்பு கிட்டும்.

ஆறாமிடத்தில் கேதுவும் பன்னிரெண்டாமிடத்தில் ராகுவும் இருப்பதால் மறைமுக எதிர்ப்புகள் அதிகரிக்கும். எனவே சர்ப்ப சாந்திகளைச் செய்வது நல்லது. கனவுத் தொல்லையிலிருந்து விடுபட கடவுள் வழிபாட்டை மேற்கொள்ளுங்கள்.

மே 16 ஆம் திகதி மிதுன ராசியில் சுக்ரன் சஞ்சரிக்கிறார். இதன் விளைவாக பிள்ளைகளின் முன்னேற்றம் கருதி பெரும் தொகையொன்றைச் செலவிடுவீர்கள். சுய தொழில் செய்வோர் கிளைத் தொழில்கள் தொடங்கும் முயற்சியில் ஆர்வம் காட்டுவர்.பழைய கடன்கள் தீர்ந்தாலும் புதிய கடன்களை வாங்கும் சூழ்நிலை ஏற்படலாம். கொடுத்த வாக்கை காப்பாற்றி விடுவீர்கள்.

மே 27 ஆம் திகதி சிங்க ராசியில் செவ்வாய் சஞ்சரிக்கிறார். இந்த அஷ்டமத்தில் செவ்வாய் சஞ்சரிக்கும் இந்த ஆதிக்க காலம் அவ்வளவு நல்லதல்ல. செயல்பாடுகளில் கூடுதல் விழிப்புணர்ச்சி காட்ட வேண்டும். உடல் ஆரோக்கியத்திலும் திடீர் திடீரென அச்சுறுத்தல்கள் ஏற்பட்டு அகலும். மருத்துவச் செலவுகள் கூடும்.

அங்காரக வழிபாட்டில் ஆர்வம் காட்டி னால் அல்லல்களில் பாதியாவது குறையும். தாய் மற்றும் உடன்பிறப்புகள் வழியே விட்டுக் கொடுத்துச் செல்வது நல்லது. விவாதங்களைத் தவிர்ப்பது நல்லது.

**சிவல்புரி சிங்காரம்**

மே 27 ஆம் திகதி ஒன்பதாமிடத்தில் சனி வக்ர நிவர்த்தியாகிறார். எனவே பங்காளி பகை மாறும். சொத்துக்கள் சம்பந்தமாக ஏற்பட்ட பஞ்சாயத்துக்கள் நல்ல முடிவுக்கு வரும். அந்நிய தேச பயணங்களை யோசித்து ஏற்றுக் கொள்வது நல்லது.

மே 31 ஆம் திகதி இடப ராசியில் புதன் சஞ்சரிக்கப்போகிறார்.

ஜூன் 10 ஆம் திகதி கடக ராசியில் சுக்ரன் சஞ்சரிக்கப் போகிறார். எனவே சுபகாரிய பேச்சுக்கள் நல்ல முடிவுக்கு வரும். தங்கம், வெள்ளி போன்றவைகள் வாங் கிச் சேர்க்கும் யோகம் உண்டாகும். கூட்டாளி கள் நல்ல தகவலைத் தருவர்.

இம்மாதம் சனிபகவானை வழிபட்டு சந்தோஷம் காணுங்கள். (தொடரும்)

# கல்வித்துறையில் நிலவும் பிரச்சினை தொடர்பில் கல்வியமைச்சு உரிய கவனம் செலுத்த வேண்டும்

## ஐ.தே.க. வலியுறுத்தல்

(கொழும்பு)

மாணவர்களை ஒழுக்க சீலர்களாக உருவாக்கும் இடமாகவே பாடசாலைகள் அமைந்திருக்க வேண்டும். ஆனாலும் ஒரு சில ஆசிரியர்கள், அதிபர்கள் ஒழுக்கம் தவறி நடந்து கொள்கின்றனர். இவ்விடயத்தில் கல்வி அமைச்சு உரிய கவனம் செலுத்தி அதற்கேற்ற நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று ஐக்கிய தேசிய முன்னணியின் கேகாலை மாவட்ட எம்.பி.யான கபீர் ஹாசீம் பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் புதன்கிழமை நடைபெற்ற சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணை மீதான விவாதத்தில் கலந்துகொண்டு பேசுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்தும் கூறுகையில்,

இலங்கையில் கல்வித்துறைக்குள் அரசியல் புகுத்தப்பட்டுள்ள அதேவேளை பாடசாலைகளுக்கு நிதி ஒதுக்கப்படுகின்ற விடயத்தில் கிராமிய மற்றும் பின்தங்கிய பிரதேசங்களில் உள்ள பாடசாலைகளை அரசாங்கம் மாற்றான் தாய் மனப்பான்மையுடனேயே நோக்குகின்றது. தொடர்ந்து வருகின்ற இப் பிரச்சினை தொடர்பில் புதிதாக பதவியேற் றுள்ள கல்வி அமைச்சர் உரிய நடவடிக்கை களை மேற்கொள்ள வேண்டும்.

ஐக்கிய தேசியக்கட்சியைப் பொறுத்த வரையில் யுத்தத்தையும் நடத்திக்கொண்டு நாட்டின் கல்வித்துறையையும் சீரான பாதையில் இட்டுச்சென்றதை இங்கு நினைவுபடுத்துகின்றேன்.

இன்றைய கல்வித்துறையில் பல்வேறு குறைபாடுகள் காணப்படுகின்றன. உதாரணத்திற்கு எடுத்துகொண்டால் 19 மாணவர்களுக்கு ஒரு ஆசிரியர் என்ற நிலைமை காணப்படுகின்றது. இந்தப் பற்றாக்குறையை மாற்றியமைக்கவேண்டிய தேவை எழுந்திருக்கிறது.

மாணவர்களை ஒழுக்க சீலர்களாகவும் சிறந்த பண்பாளர்களாகவும் உருவாக்க வேண்டியது ஆசிரியர்களினதும் பாடசாலைகளினதும் பொறுப்பாகும். எனவே இவ்விடயத்தில் பாதுகாப்புடைத்தன்மையை போணவேண்டியதும் அதற்கான வழி வகைகளை ஏற்படுத்துவதும் கல்வி அமைச்சின் பொறுப்பாக இருக்கிறது.

அரசாங்கம் கூறுவதைப் போல் தேசிய கல்விக் கொள்கை ஒன்று வகுக்கப்படுமானால் அது சி.டபிள்யு.டபிள்யு கன்னங்கரா மற்றும் ஜே.ஆர். ஜயவர்த்தன ஆகியோரது கொள்கைகளுக்கு அமைவானதாக காணப்பட்டால் ஐக்கிய தேசியக்கட்சி அதனை வரவேற்கும் என்றார். (6-4)

# மாணவர் குழுக்களுக்கிடையிலான மோதலையடுத்து களனி பல்கலை மறு அறிவித்தல் வரைமூடல்

(கொழும்பு)

இரு மாணவர் குழுக்களுக்கிடையே இடம்பெற்ற மோதல் சம்பவமொன்றை அடுத்து களனி பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீடம் தவிர்ந்த அனைத்து பீடங்களும் மறு அறிவித்தல் வரையில் மூடப்பட்டுள்ளன.

மேற்படி மோதல் சம்பவத்தை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்துள்ள கிரிபத்கொட பொலிஸார் பல்கலைக்கழக விடுதியில் தங்கியுள்ள மாணவர்கள் இன்று காலை 8 மணிக்குள் அங்கிருந்து வெளியேற வேண்டும் என்று உத்தரவு பிறப்பித்துள்ளனர்.

குறித்த பல்கலைக்கழகத்தின் விஞ்ஞானம் மற்றும் கலைப்பிரிவைச் சேர்ந்த 8 மாணவர்களுக்கிடையில் ஏற்பட்ட கைகலப்பொன்று மோதலாக மாறியதை அடுத்து அப்பகுதியில் பெரும் பரபரப்பு எற்பட்டது.

இதனால் காயமடைந்த சில மாணவர்கள் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். சம்பவத்தை அடுத்து அவ்விடத்துக்கு விரைந்த பொலிஸார் மோதலை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்துள்ளதுடன் மாணவர்களையும் கலைத்துள்ளனர். (6)

# சுகாதார அமைச்சின் சீரற்ற நிர்வாகமே மருந்து தட்டுப்பாட்டுக்குக் காரணம்

## அநுரகுமார திஸாநாயக்க தெரிவிப்பு

சுகாதார அமைச்சின் சீரற்றதும் தவறானதுமான நிர்வாகமே வைத்தியசாலைகளில் மருந்துத் தட்டுப்பாடுகளுக்கு காரணமாகும். இதனால் இலவச மருத்துவ சேவையை நம்பியுள்ள மக்கள் பணத்தைக் கொடுத்தே மருந்துகளைப் பெற வேண்டிய நிலைமை உருவாக்கப்பட்டுள்ளது என்று ஜனநாயக தேசிய கூட்டணி நேற்று முன்தினம் சபையில் குற்றம் சாட்டியது.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற அமர்வுகளின் போது சுகாதார அமைச்சு தொடர்பில் கூற்று ஒன்றை விடுத்து உரையாற்றுகையிலேயே கூட்டணியின் எம்.பி.யான அனுரகுமார திஸாநாயக்க மேற்கண்டவாறு குற்றம்சாட்டினார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

நாடு முழுவதிலும் உள்ள வைத்தியசாலைகளின் மருந்துகளுக்கு பாரிய தட்டுப்பாடுகள் நிலவுகின்றன. கடந்த வருடத்தின் பிற்பகுதியிலும் இவ்வருடத்தின் முற்பகுதியிலும் இது குறித்து நாம் அரசாங்கத்தின் கவனத்திற்கு கொண்டுவந்த போதிலும் அது தொடர்பில் அரசாங்கம் கவனம் செலுத்தியிருக்கவில்லை. இதனால் இந்நிலை மேலும் மோசமடைந்தது.

தற்போதைய சூழ்நிலையில் சாதாரண நோய் மற்றும் மரணத்தை ஏற்படுத்துகின்றதான நோய்க்கும் கூட உரிய மருந்துகள் வைத்தியசாலைகளில் இல்லை. வலிப்பு நோய், அறுவைச் சிகிச்சைக்காக பயன்படுத்துகின்ற மருந்துகள், நீரிழிவு நோய்க்கான மருந்துகள் இல்லை. அதுமட்டுமல்லாது மருத்துவ உபகரணங்களுக்கும் பாரிய தட்டுப்பாடுகள் நிலவி வருகின்றன. வைத்தியசாலையை நம்பி வருகின்ற மக்கள் வெளியில் பணம் கொடுத்து மருந்து வாங்க வேண்டிய நிலை உருவாக்கப்பட்டுள்ளது.

கடந்த வருடத்தினைப்போலவே இவ்வருடத்திலும் மருந்துப்பொருட்களை கொள்வனவு செய்வதில் சீர்குலைவுகள் காணப்படுகின்றன. இதற்குக்காரணம் என்னவென்பதை சுகாதார அமைச்சர் இந்த சபையில் விளக்கமளிக்க வேண்டும். அதேபோல் மருந்துப் பொருட்கள் கொள்வனவுக்கு ஏற்பட்டுள்ள அச்சுறுத்தல் என்னவென்பதை ஆராய்ந்து அது தொடர்பில் கவனம் செலுத்துமாறும் கேட்டுக்கொள்கின்றேன் என்றார். (6)

# திருக்குறள் சீனமொழியில் மொழி பெயர்க்கப்படவுள்ளது



(சென்னை)

தைவான் நாட்டு கவிஞர் யூ ஷி, திருக்குறளை சீனமொழியில் மொழிபெயர்க்கவுள்ளார் என முன்னாள் ஜனாதிபதி அப்துல்கலாம் தெரிவித்தார்.

தைவான் நாட்டு கவிஞர் யூ ஷிக்கு சென்னை அண்ணா பல்கலைக் கழகத்தில் நேற்றுமுன் தினம் பாராட்டு விழா நடந்தது. சென்னை அண்ணா பல்கலைக்கழக துணைவேந்தர் மன்னர் ஜவகர் தலைமையில் நடந்த விழாவில் முன்னாள் ஜனாதிபதி அப்துல்கலாம், உயர்நீதிமன்ற முன்னாள் நீதிபதி மோகன், சென்னை பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் சாதிக், டைம்ஸ் ஆப் இந்தியா "மெட்ரோ" ஆசிரியர் அருண்ராம் உள்ளிட்டோர் யூஷியை வாழ்த்திப் பேசினர்.

விழாவில் முன்னாள் ஜனாதிபதி அப்துல் கலாம் பேசியதாவது,

எனக்கு அண்ணா பல்கலைக்கழகம் முக்கியத்துவம் வாய்ந்தது. இப் பல்கலைக் கழகத்தின் ஒரு வளாகத்தில் தான் படித்தேன். இங்கு தான் ஆசிரியராகப் பணிபுரிந்தேன், வாழ்ந்தேன். அண்ணா பல்கலைக்கழகத்தில் படித்து, ஆசிரியராக பணிபுரிபவர்களுக்கு ஜனாதிபதி ஆகும் வாய்ப்புக் கிடைக்கலாம். நேற்று முன்தினம் மதியம் யூ ஷியிடம் பேசிக் கொண்டிருந்தபோது, திருக்குறளின் பெருமைகள், அதில்133 அதிகாரங்களில் 1,330 குறள்கள் குறித்து தெரிவித்தேன். அப்போது யூ ஷி, நானே திருக்குறளை சீனமொழியில் மொழி பெயர்க்கிறேன் எனத் தெரிவித்தார். யூ ஷி வரும் டிசம்பர் மாதத்திற்குள் திருக்குறளை சீனமொழியில் மொழிபெயர்க்கவுள்ளார் என்றார். (6)

# புயலுக்கு பெயர் வைப்பதில் பின்பற்றப்படும் நடைமுறை

லைலா புயலுக்குப் பெயர் வைத்தது பாகிஸ்தான் என்றும், அடுத்து வரும் புயலுக்கு பாண்டு என பெயர் சூட்டப்படும் என்றும் தெரியவந்துள்ளது.

புயல் என்று வந்துவிட்டால் நிஷா, கத்ரீனா, லைலா என பெண்கள் பெயர் தான் வைக்கப்படுகிறது.

சென்னை வானிலை ஆராய்ச்சி மைய துணை இயக்குநர் ராஜ் கூறுகையில்,

வங்கக் கடல் மற்றும் அரபிக் கடலில் உருவாகும் புயலுக்கு பெயர் வைக்கும் வழக்கம் கடந்த 2004 ஆம் ஆண்டு தொடங்கியது.

சர்வதேச வானிலை ஆராய்ச்சி மையக் குழுமத்தில் உறுப்பினர்களாக இருக்கும் பங்களாதேஷ், இந்தியா, மாலைதீவு, மியான்மார், ஓமன், பாகிஸ்தான், தாய்லாந்து, இலங்கை ஆகிய நாடுகள் புயலுக்கு என்ன பெயர் வைக்கலாம் என்ற பெயர் பட்டியலை வெளியிட்டது.

இந்த நாடுகள் பரிந்துரைத்த 64 பெயர்கள் தான் தற்போது ஒவ்வொரு புயலுக்கும் பெயராக வைக்கப்பட்டு வருகிறது. பெயரை தேர்ந்தெடுக்கும்போது சிறியதாக, எளிதில் உச்சரிக்கக் கூடியதாக, சர்ச்சை இல்லாத பெயராக இருக்க வேண்டும் என்ற ஒரு சில விதிமுறைகள் பின்பற்றப்பட்டன.

அப்படி பரிந்துரைக்கப்பட்ட 64 பெயர்களில் இதுவரை 22 உபயோகப்படுத்தப் பட்டுள்ளது. தற்போது வைக்கப்பட்டுள்ள லைலா என்ற பெயர் பாகிஸ்தான் பரிந்துரைத்ததாகும். அடுத்து வரும் புயலுக்கு பாண்டு என பெயர் வைக்கப்படும். இந்தப் பெயரை பரிந்துரைத்தது இலங்கை என்றார். (6)

# நடிகர் அருண் விஜய் விபத்தில் படுகாயம்



நடிகர்அருண்விஜய் அடுத்து நடிக்கும் காவல்துறை என்ற படத்துக்காக, நடுவானில் பறந்து.கொண்டிருக்கும் விமானத்தில் இருந்து குதிக்கும் ஸ்கை டைவிங் என்ற பயிற்சி பெற்று வந் தார். இங்கிலாந்தின் தலைநகரான லண்டனில் இதற்காக அவர் பயிற்சி பெற்றார். பயிற்சியின் முடிவில், அவர் 13 ஆயிரம் அடி உயரத்தில் பறக்கும் விமானத்தில் இருந்து பாரசூட் மூலம் குதிக்கும் நிகழ்ச்சி நடந்தது.

அப்போது, காற்று பலமாக வீசிய தால், அருண் விஜய்யால் குறிப்பிட்ட இடத் தில் தரை இறங்க முடியவில்லை. அவரை ஒரு கட்டடத்தை நோக்கி காற்று இழுத்துச் சென்றது. கட்டடத்தின் மீது உரசியதால், அவர் படுகாயம் அடைந்தார்.

உடனடியாக பயிற்சியாளர்கள் விரைந்து வந்து அவரை வைத்தியசாலைக்கு அழைத்துச் சென்று சிகிச்சை அளித்தார்கள். (6)

## பாரதச் செய்திகள்



# கொழும்பில் இந்திய திரைப்பட விழா; தமிழ் திரையுலகம் புறக்கணிப்பு




(சென்னை)

இலங்கையில் நடைபெற உள்ள சர்வதேச இந்தியத் திரைப்பட அகடமி (IIFA) விருது கள் விழாவை தமிழ்த்திரையுலகம் புறக்கணித்துள்ளது.

அத்துடன், அந்த விழாவை ஒட்டுமொத்த இந்தியத் திரையுலகமும் புறக்கணிக்க வேண்டும் என்று தமிழத்திரையுலகம் வலியுறுத்தியுள்ளது.

இது தொடர்பாக தென்னிந்தியத் திரைப்பட வர்த்தக சபை, தமிழ்த் திரைப்பட தயாரிப்பாளர்கள் சங்கம், தென்னிந்திய நடிகர் சங்கம், தென்னிந்திய திரைப்படத் தொழிலாளர்கள் சம்மேளனம், தமிழ்நாடு திரைப்பட இயக்குநர்கள் சங்கம், தமிழ்நாடு திரைப்பட விநியோகஸ்தர்கள் கூட்டமைப்பு, தமிழ்நாடு திரையரங்க உரிமையாளர்கள் சங்கம், சின்னத்திரை கலைஞர்கள் சங்கம், தென்னிந்திய திரைப்பட பத்திரிகை தொடர்பாளர்கள் சங்கம் ஆகிய அமைப்புக்கள் கூட்டாக விடுத்துள்ள அறிக்கையில்,

கடந்த வருடம் இலங்கையில் தமிழ் இனத்தைச் சேர்ந்த குழந்தைகள், பெண்கள், ஆண்கள் என குவியல் குவியலாக ஆயிரக் கணக்கானவர்களைக் கொன்று ஈழ மண்ணை சுடுகாடாக்கி மகிழ்ந்தது, சிங்கள அரசு. அங்கு கேட்ட மரணஓலம் உலகெங்கும் உள்ள தமிழர்களின் மனதில் இன்னமும் ஆறாத வடுவாக இருந்து கொண்டிருக்கிறது.

இலங்கையில் நடைபெறும் தமிழ் இன அழிப்புப் போரை நிறுத்தி, தமிழ் இனத்தை காக்க வேண்டும் என்பதை வலியுறுத்தி தமிழ்த்திரையுலகம் சார்பில் நடிகர், நடிகைகள், தயாரிப்பாளர்கள், இயக்குநர்கள், தொழில்நுட்ப கலைஞர்கள், தொழிலாளர்கள், சின்னத்திரை கலைஞர்கள் ஆகிய அனைவரும் ஒன்றுகூடி மனிதச்சங்கிலி, ஊர்வலம், ஆர்ப்பாட்டம், போராட்டம், பொதுக் கூட்டம் என திரையுலகம் சார்பில் கண்டனங்களை தெரிவித்தோம்.

அதை செவி கொடுத்து கேட்டும், சிங்கள அரசு போரை நிறுத்தவில்லை. நடைபெற்ற தமிழ் இன அழிப்பு போரில், தங்கள் உடல் உறுப்புக்களை இழந்து, அந்தப் போரின் நடமாடும் நினைவு சின்னங்களாய் வாழ்ந்து வரும் சொந்தத்தை பார்க்கையில், நெஞ்சமே வெடித்து விடும் போல் இருக்கிறது.

நம் சகோதர - சகோதரிகளுக்கு ஆதரவை தெரிவிக்கும் வகையில் கேட்டுக் கொள்வது என்னவென்றால், எதிர்வரும் ஜுன் 4,5,6 ஆகிய மூன்று நாட்கள் நடைபெற இருக்கும் சர்வதேச இந்தியத் திரைப்பட விழாவை கொழும்பில் நடத்தக்கூடாது. அதனையும் மீறி அங்கு அந்த விழா நடப்பதாக இருந்தால், இந்தியத் திரையுலகத்தைச் சேர்ந்த தயாரிப்பாளர்கள், நடிகர் - நடிகைகள், இயக்குநர்கள், தொழிலாளர்கள் சம்மேளனத்தினர், விநியோகஸ்தர்கள், திரையரங்க உரிமையாளர்கள் என ஒட்டுமொத்த திரையுலகமே அந்தவிழாவை புறக்கணிக்க வேண்டும்.

இலங்கை தமிழர்களின் உணர்வுகளுக்ும், உள்ளக்குமுறல்களுக்கும் ஆதரவாக தமிழ் திரை உலகின் இந்தப் புறக்கணிப்பு முடிவுக்கு இந்தி, தெலுங்கு, கன்னடம், மலையாளம், மராத்தி என இந்தியாவில் உள்ள அனைத்து மொழி திரையுலகினரையும் ஆதரவு தருமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தான் செய்த சதி வேலைகளை மறைத்து, குறுக்குவழியில் புகுந்து புகழ்தேட நினைக்கும் சிங்கள அரசுக்கு, இந்திய திரையுலகம் குறிப்பாக, தமிழ் திரையுலகின் ஒட்டுமொத்த புறக்கணிப்பு, அவர்களுக்கு ஒரு பாடமாக அமையட்டும் என்று அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. (6)

# இராமேஸ்வரத்தில் 180 படகுகள் பலத்த சேதம்

இராமேஸ்வரத்தில் சூறைக்காற்றில் தூக்கிவீசப்பட்ட 180 படகுகள் சேதமடைந்தன. கடல் அலையில்சிக்கி மீனவர் ஒருவர் உயிரிழந்தார். லைலா புயலால், தமிழகம், புதுச்சேரியின் கடலோரப் பகுதிகளில் பலத்த காற்றுடன் கனமழை பெய்கிறது.

இராம்நாதபுரம் மாவட்டத்தில், இராமேஸ்வரம், மண்டபம், பாம்பன், ஆர்.எஸ். மங்கலம், திருவாடானை, தொண்டி ஆகிய பகுதிகளில் கடந்த செவ்வாய்க்கிழமை இரவு இடி, மின்னல், சூறைக்காற்றுடன் பலத்த மழையும் பெய்தது. இதில் நூற்றுக்கணக்கானமரங்கள் வேரோடு சாய்ந்தன. பல பகுதிகளில் மின்சாரம் தடைப்பட்டது. (6)

# நக்சலைட்டுகள் மீது விமான தாக்குதல் நடத்தக் கூடாது

## இந்திய கம்யூனிஸ்ட் எதிர்ப்பு

நக்சலைட்டுகள் மீது விமானத் தாக்குதல் நடத்துவது பற்றி ஆலோசிப்பதாக ப.சிதம்பரம் கூறியுள்ளார். அது தேவையற்றது. மத்திய அரசிடம் பொலிஸும், துணை இராணுவ படையும் இருக்கும்போது விமானப்படை தாக்குதல் சரியான தீர்வாக இருக்காது என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சி பொதுச் செயலர் தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஒரு தடவை விமானப்படையை பயன் படுத்தினாலும் கடைசிவரை அதை பயன் படுத்த வேண்டியது இருக்கும். இது நாட்டுக்கு நல்லதல்ல. உள்நாட்டு போருக்கு வழிவகுத்து விடும் என்றார். (6)

# ஆந்திராவில் கடலுக்கு சென்ற 200 மீனவர்கள் மாயம்

(நகரி)

வங்கக் கடலில் உருவான லைலா புயல் நேற்று முன்தினம் சென்னைக்கு வடகிழக்கே 140 கி.மீ.தூரத்தில் மையம் கொண்டிருந்தது.

இதன் காரணமாக ஆந்திராவின் கடலோர மாவட்டங்களான ஸ்ரீ காகுளம், விஜய நகரம், விசாகபட்டினம், கிழக்கு- மேற்கு கோதாவரி, கிருஷ்ணா, குண்டூர், பிரகாசம், நெல்லூர்ப் பகுதிகளில் பலத்த மழை கொட்டியது.

அப்போது வீசிய சூறைக் காற்றில் நெல்லூர் மாவட்டத்தில் வாழைகள் நாசமாயின.

மாநிலம் முழுவதும் 450ஏக்கர் பரப்பில் விளைந்த மாம்பழங்கள் அனைத்தும் நாசமாயின.

இதனால் விவசாயிகளுக்கு கோடிக் கணக்கில் நஷ்டம் ஏற்பட்டது.

ஆந்திராவில் நெல்லூர், மசூலிப்பட்டினம் பகுதிகளைச் சேர்ந்த 200க்கும் மேற்பட்ட மீனவர்கள் 2 நாட்களுக்கு முன்பு மீன்பிடிக்கச் சென்றனர். அவர்கள் இன்றுவரை கரை திரும்பவில்லை.


அவர்கள் கதி என்ன? என்பது தெரியாததால் அவர்களது குடும்பத்தினர் சோகத்தில் மூழ்கியுள்ளனர். மாயமான மீனவர்களைத் தேடும் பணி முடுக்கி விடப்பட்டுள்ளது. (6)

தலைவர்கள் கைது எதிரொலி

# தாய்லாந்து முழுவதும் கலவரம் பரவியது; கோவிலுக்குள் 9 பேர் சுட்டுக் கொலை

(பாங்கொங்)

தாய்லாந்து நாட்டில் பிரதமர் பதவி விலகி பாராளுமன்ற தேர்தலை நடத்த வேண்டும் என்று வற்புறுத்தி முன்னாள் பிரதமர் தக்ஷின் ஆதரவாளர்கள் கடந்த மார்ச் மாதம் 14 ஆம் திகதியில் இருந்து தொடர் போராட்டம் நடத்தி வருகிறார்கள்.



தென்கிழக்காசியாவிலேயே பெரிய வணிக வளாகமான சென்ரல் வேள்ட் கட்டடத்தில் தீப்பற்றி எரிவதையே படத்தில் காண்கிறீர்கள்.

2 மாதமாக நடந்து வரும் இந்த போராட்டத்தை ஒடுக்க தாய்லாந்து அரசு எடுத்த முயற்சிகள் அனைத்தும் தோல்வி அடைந்து விட்டன. தலைநகரம் பாங்கொங்கில் புகுந்துள்ள போராட்டக்காரர்கள் அங்குள்ள வணிக வளாகம், கோவில்கள் ஆகியவற்றை கைப்பற்றி அங்கிருந்தபடி போராட்டத்தை தொடர்ந்து வருகின்றனர்.

அவர்களை ஒடுக்க இராணுவத்தை ஈடுபடுத்தி உள்ளனர். முதலில் சாதாரண நடவடிக்கைகளை எடுத்த இராணுவம் இப்போது துப்பாக்கி சூடு உள்ளிட்ட பயங்கர நடவடிக்கைகளில் இறங்கி உள்ளது.

இதனால் போராட்டகாரர்களுக்கும் இராணுவத்துக்கும் இடையே பல இடங்களில் நேற்று முன்தினம் மோதல் நடந்தது. இராணுவம் நடத்திய துப்பாக்கிச் சூட்டில்30 க்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டனர்.

பொது மக்கள் உயிரிழப்பை தடுக்க போராட்டக் குழு தலைவர்கள் பலர் இராணுவத்திடம் சரண் அடைந்தனர். அவர்கள் அனைவரும் கைது செய்யப்பட்டனர்.

இதனால் போராட்டக் காரர் கள் மேலும் ஆத்திரம் அடைந்து வன்முறையில் இறங்கினார்கள். தலைநகரம் பாங்கொக்கில் நடந்த கலவரம் இப்போது நாடு முழுவதும் பரவி உள்ளது.

பாங்கொங் முழுவதும் நேற்று முன்தினம் இரவு பல கட்டடங்களுக்கு தீ வைத்தனர். தென்கிழக்கு ஆசியாவிலேயே பெரிய வணிக வளாகமான சென்ட்ரல் வேர்ல்டு கட்டடம் உட்பட 27 புகழ் பெற்ற கட்டடங்களுக்கு தீ வைத்தனர்.

கடந்த 1 வாரத்தில் மட்டும் கலவரத்தில் 40 பேர் கொல்லப்பட்டு உள்ளனர். நேற்று முன்தினம் கலவரத்தில் மட்டும் 14 பேர் கொல்லப்பட்டனர்.

இந்தநிலையில் நேற்று அதிகாலை கோவில் உள்ளே புகுந்து இருந்த போராட் டக்காரர்கள் மீது இராணுவ வீரர்கள் துப்பாக்கி சூடு நடத்தினார்கள். இதில் 9 பேர் கொல்லப்பட்டனர்.

கலவரம் நாடு முழுவதும் பரவி இருப்பதால் 21 பிராந்தியங்களில் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டு உள்ளது.

பிரதமர் அபிசித் வெஜேஜிவா போராட்டக்காரர்கள் உடனே வன்முறையை கைவிட்டு அமைதி திரும்ப உதவ வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்துள்ளார். (6)

மத்திய ஐரோப்பாவில்

## வெள்ளப் பெருக்கில் சிக்கி 9 பேர் பலி

மத்திய ஐரோப்பாவில் அடை மழை காரணமாக ஏற்பட்ட வெள்ளப் பெருக்கில் சிக்கி குறைந்தது 9 பேர் பலியாகியுள்ளனர். போலந்து, ஸ்லோவாக்கியா, சேர்பியா மற்றும் செக் குடியரசி ஆகிய நாடுகளின் பகுதிகள் வெள்ளத்தால் மிக மோசமான பாதிப்பை எதிர்கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்ப டுகிறது.

அந்நாடுகளில் ஆறுகள் பெருக்கெடுத்ததால் தாழ்நிலப் பிரதேசங்கள் பலவும் வெள்ளத்தில் மூழ்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. வெள்ளத்தால் தென் போலந்தில் 5 பேரும் சேர்பியாவில் 2 பேரும் ஸ்லோவாக்கியா மற்றும் செக் குடியரசு என்பனவற்றில் தலா ஒருவரும் பலியாகியுள்ளனர். (6)

## பேஸ்புக் இணைய தளத்தை தடை செய்யுமாறு பாக். நீதிமன்றம் தீர்ப்பு

உலகின் முன்னணி சமூக வலையமைப்பு இணையத் தளங்களில் ஒன்றாகக் கருதப்படும் பேஸ் புக் இணைய தளத்தை தற்காலிகமாக தடை செய்யுமாறு பாகிஸ்தான் நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

பேஸ்புக் இணையத் தளத்தில் நடத்தப்பட்ட முஹமது நபி குறித்த கார்டூன் போட்டி தொடர்பில் பாகிஸ்தான் சட்டத்தரணிகள் தாக்கல் செய்த வழக்கை அடுத்து இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

குறித்த இணையதளத்தில் காணப்படும் அம்சங்கள் இஸ்லாமிய மதத்தை இழிவுபடுத்தும் வகையில் அமையப் பெற்றுள்ளதாக சட்டத்தரணிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

குறித்த கார்டூன் போட்டியில் பிரசுரமான ஆக்கங்கள் மற்றும் கருத்துக்கள் விமர்சனப் பாங்கானவை எனவும் அவற்றில் இஸ்லாமிய மதத்தை காயப்படுத்தக் கூடிய கருத்துக்களும் காணப்படுவதாக தெரிவித்துள்ளனர்.

குறித்த இணையத் தளத்தை தடை செய்யுமாறு ஏற்கனவே பாகிஸ்தானில் பல்வேறு ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

பாகிஸ்தானில் இணைய பாவனைக்கு எவ்வித தடைகளும் தற்போது நடைமுறையில் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இஸ்லாமிய நாடான பாகிஸ்தானில் இஸ்லாமிய மதத்திற்கு அவதூறு ஏற்படுவதனை ஏற்றுக்கொள்ள முடியாது என சட்டத்தரணிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இதேவேளை டென்மார்க் பத்திரிகைகளில் கடந்த 2005 ஆண்டு வெளியான கார்டூன்கள் காரணமாக பாகிஸ்தான் உள்ளிட்ட முஸ்லிம் நாடுகளில் பெரும் சர்ச்சை ஏற்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (6)




## ஈரானுக்கு எதிராக பொருளாதாரத் தடை விதிக்கும் திட்டத்தில் மாற்றமில்லை

### ஒபாமா தெரிவிப்பு

ஈரானுக்கு எதிராக பொருளாதாரத் தடை விதிக்கும் திட்டத்தில் மாற்றமில்லை என அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா தெரிவித்துள்ளார்.

துருக்கி மற்றும் பிரேஸிலுடனான ஈரானின் அணுத் திட்டங்கள் திருப்தி அளிக்கும் வகையில் அமையவில்லை என அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

ஈரானின் அணுத் திட்டங்கள் தொடர்பில் மேற்குலக நாடுகள் தொடர்ச்சியாக சந்தேகம் வெளியிட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

சக்தி வளப் பயன்பாட்டுக்காக ஈரான் அணு ஆலைகளை பயன்படுத்துவதாக தெரிவிக்கப்பட்ட போதிலும் அணுவாயு உற்பத்திகள் நடைபெறுவதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.



சரக்குக் கப்பல் கண்காணிப்பு வங்கி கொடுக்கல் வாங்கல் போன்றவை தொடர்பில் ஈரான் மீது கட்டுப்பாடுகள் விதிக்கப்படக் கூடு மென எதிர்பார்க்கப்படுகிறது.

எனினும் மேற்குலக நாடுகளின், இந்த தீர்மானத்திற்கு பிரேஸில் மற்றும் துருக்கி ஆகிய நாடுகள் அதிருப்தி வெளியிட்டுள்ளன.

ஈரான் மீது பொருளாதார தடை விதிக்கப்பட வேண்டுமென பல உறுப்பு நாடுகள் வலியுறுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (6-4)

## உடல் ஆரோக்கியத்தைக் காப்பதற்கு வாரத்தில் 5 நாட்கள் சைவ உணவு அவசியம்

### கொரிய விஞ்ஞானிகள் தெரிவிப்பு

(சியோல்)

வாரத்தில் 5 நாட்களுக்கு உணவில் காய்கறிகளை அதிகளவில் சேர்த்துக் கொண்டால் உடலில் விஷத்தன்மை ஏற்படுத்தும் இரசாயனங்களை குறைக்கலாம் என்று கொரிய விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

தென்கொரிய விஞ்ஞானிகள் குழுவினர், உடல் நலனில் காய்கறிகளின் பங்கு பற்றி விரிவாக ஆராய்ந்தனர். அதற்காக தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு குழுவை சியோலில் புத்தமதக் கோயிலில் 5 நாட்கள் தங்க வைத்தனர்.

கோயிலில் தங்கிய நாட்களில் காய்கறிகள் அதிகம் சேர்க்கப்பட்ட சைவ உணவே அளிக்கப்பட்டது. இந்த ஆய்வுக்கு முன்பும் 5 நாட்களுக்கு பிறகும் குழுவினரின் சிறுநீர் பரிசோதிக்கப்பட்டது.

கோயிலில் தங்கி சைவ உணவை மட்டுமே சாப்பிட்ட பிறகு எடுக்கப்பட்ட பரிசோதனையில் உடலில் விஷத்தன்மை ஏற்படுத்தும் இரசாயன சுரப்பு குறைந்திருந்தது தெரியவந்தது. வாரத்தின் மீதி 2 நாட்களில் அசைவ உணவுகள், கொறிக்கும் ரகங்கள் சாப்பிட அனுமதிக்கப்பட்டது.

அதன் பிறகு எடுத்த சிறுநீர் பரிசோதனையில் விஷத்தன்மை ஏற்படுத்தும் இரசாயன சுரப்பு அதிகரித்திருந்தது. எனவே வாரத்தில் குறைந்த பட்சம் 5 நாட்கள் காய்கறிகள் சேர்ந்த சைவ உணவு அவசியம் என்று விஞ்ஞானிகள் அறிவித்தனர்.

இது பற்றி ஆராய்ச்சிக் குழு விஞ்ஞானி ஒருவர் கூறுகையில்,

சைவ, அசைவ உணவுகளால் உடலில் ஏற்படும் இரசாயன மாற்றங்கள், சிறுநீர் பரிசோதனையில் உடனுக்குடன் தெரிகின்றன. இரசாயன சுரப்பைக் குறைத்து உடல் ஆரோக்கியத்தைக் காக்க வாரத்தில் 5 நாட்கள் காய்கறிகள் கலந்த சைவ உணவு அவசியம் என்றார். (6-4)



சீனா தலைநகர் பீஜிங்கில் உள்ள பள்ளி குழந்தைகளுக்கு தீவிரவாதிகளிடமிருந்து தப்பிப்பது எப்படி என்பது குறித்து பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

## பாக்.இராணுவத்தின் தாக்குதலில் 62 தலிபான்கள் பலியாகினர்

(பெஷாவர்)

பாகிஸ்தானின் வசிரிஸ்தான் பகுதியில் தலிபான்களுக்கும் இராணுவத்தினருக்கும் இடையே நடந்த சண்டையில் 62 பேர் கொல்லப்பட்டனர்.

ஆப்கானிஸ்தான் எல்லையையொட்டி அமைந்துள்ள ஒரக்சாய் பகுதியில் தபோரி மற்றும் சாம் ஆகிய இடங்களில் பழங்குடி மக்கள் அதிகம் வசிக்கின்றனர். இப்பகுதியில் தங்கியுள்ள தலிபான்களை அப்புறப்படுத்த பாகிஸ்தான் இராணுவம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

பாகிஸ்தான் இராணுவத்தினரின் தாக்குதலில் 60 தலிபான்கள் கொல்லப்பட்டனர்; 40 பேர் காயமடைந்தனர். தலிபான்களின் பதிலடி தாக்குதலில் இரண்டு இராணுவ வீரர்கள் பலியாயினர். கடந்த ஆறு வாரங்களில் பாகிஸ்தான் இராணுவத்தினரின் நடவடிக்கையால் 700 பயங்கரவாதிகள் கொல்லப்பட்டனர். (6-4)

# இலங்கையில் நடந்த போர் குற்றங்களும் சர்வதேச விசாரணைகளின் தேவையும்!

மே 18,2009... இந்நாளில் தான் விடுதலைப்புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் உள்ளிட்டோர் கொல்லப்பட்டு விட்டனர்; போர் முடிவுக்கு வந்தது என இலங்கை அரசு அதிகாரப்பூர்வமாக அறிவித்தது. ஒரு இலட்சத்துக்கும் அதிகமான உயிர்பலிகளுக்கு உள்ளான 37 ஆண்டு காலப் போராட்டம் முடிவுக்கு வந்தது என ஊடகச் செய்திகள் புள்ளிவிபரங்களை வெளியிட்டன.

### கொண்டாட்டத்தை தடுத்த மழை...

இதோ போர் முடிந்து ஓராண்டு நிறைவடைந்த நிலையில் புலிகளை வீழ்த்திவிட்டதாக வெற்றிக்கொண்டாட்டத்தில் ஈடுபட்டுவருகிறது இலங்கை அரசு. இதையொட்டி பல்வேறு நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன.



ஆனால், தற்போது இலங்கையில் பல்வேறு பகுதிகளில் மழை விடாமல் கொட்டிக்கொண்டிருக்கிறது. பெருவெள்ளம் காரணமாக வெற்றிக்கொண்டாட்டத்தை ஒத்திவைக்க முடிவு செய்திருப்பதாக இலங்கை இராணுவம் அறிவித்துள்ளது.

சிறப்பு இராணுவ அணி வகுப்பு மற்றும் போரில் உயிரிழந்த வீரர்களுக்கு அஞ்சலி முதலிய நிகழ்ச்சிகள் ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக இலங்கை பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

இலங்கையில் போர் நடந்து முடிந்து ஓராண்டுகள் நிறைவடைந்துள்ள சூழலில் அந்தப் போர் குறித்து ஆய்வறிக்கை ஒன்றை வெளியிட்டிருக்கிறது, அமெரிக்காவைச் சேர்ந்த சர்வதேச நெருக்கடிகள் குழு (ICG-International Crisis Group).

அந்த ஆய்வறிக்கையில் இலங்கையில் நடந்த போர்க் குற்றங்களையும் மனித உரிமை மீறல்களைப்பற்றியும் அந்நாட்டு அரசு நேர்மையான முறையில் ஒரு விசாரணையை நடத்த தயாராக இல்லாத நிலையில், அங்கு நடந்த போர்க்குற்றங்கள் குறித்து ஒரு சர்வதேச விசாரணையை நடத்த வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டுள்ளது. முன்னாள் ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையாளரும் முன்னாள் கனடா உச்ச நீதிமன்ற நீதிபதியுமான லூயிஸ் ஆர்பர் (Louisc Arbour) தான் ICG அமைப்பின் தலைவர். அவர் தலைமையில் இயங்கும் குழுவே இந்த ஆய்வினை மேற்கொண்டு அறிக்கையை வெளியிட்டுள்ளது என்பதால் உலக அளவில் மிகுந்த கவனத்தைப்பெற்றுள்ளது.

### ICG ஆய்வறிக்கையின் முக்கிய ஆவணங்களாவன

❖ இலங்கையில் கடந்த ஆண்டு நடந்து முடிந்த போரின் கடைசி 5 மாத காலத்தில் மட்டும் குழந்தைகள், பெண்கள், முதியோர் உட்பட பல்லாயிரக்கணக்கான அப்பாவித் தமிழ் மக்கள் கொல்லப்பட்டதற்கான ஆதாரங்கள் இருக்கின்றன.

❖ இலங்கை அரசும் விடுதலைப்புலிகள் இயக்கமும் போர் தொடர்பான சர்வதேச சட்டங்களை மீறியுள்ளன. அப்பாவி பொதுமக்கள் கொல்லப்பட்டது, அவர்கள் அனுபவித்த மிகுதியான துயரங்கள் முதலியவற்றை பார்க்கும் போது இதற்கு உரிய பதில் தரப்பட வேண்டும்.

❖ பல ஆண்டுகளாக சர்வதேச மனித நேய சட்டங்களை மீறியிருந்தாலும் போரின் இறுதி மாதங்களில் தான் இந்த மீறல்கள் அதிகளவில் நடந்துள்ளன. அந்த மீறல்களின் தன்மை மிகவும் ஆபத்தானவையாக இருந்திருக்கிறது.

❖ இலங்கையின் இராணுவம் மீண்டும் மீண்டும் வேண்டும் என்றே சர்வதேச சட்டத்தை மீறி, பொதுமக்களைத் தாக்குவது, மருத்துவமனைகளைத் தாக்குவது, மனித நேய நடவடிக்கைகள் நடக்கும் இடங்களை தாக்குவது போன்ற நடவடிக்கைகளில் ஈடுபட்டனர் என்பதற்கு போதிய ஆதாரங்கள் கிடைத்துள்ளன.

❖ யுத்த நிறுத்த வலயம் (No Fire Zone) எனப்படும் மக்களைப் பாதுகாக்கக் கூடியதும் தாக்குதல்கள் தவிர்க்கப்படும் பகுதி என்று இலங்கை அரசால் அறிவிக்கப்பட்ட பகுதிகளின் மீதே இராணுவம் மீண்டும் மீண்டும் தாக்குதல் நடத்தியிருப்பதற்கான சாட்சியங்கள் சேகரிக்கப்பட்டுள்ளன.

அதை வைத்துப் பார்க்கும் போது இந்த போர்க்குற்றங்கள் இலங்கை பாதுகாப்பு படைகளில் இருக்கும் குறிப்பிட்ட சில தனி நபர்களால் இழைக்கப்பட்டன என்று நம்புவதற்கு கோரிய காரணங்கள் இருக்கின்றன.





❖ யுத்தநிறுத்த வலயப் பகுதிகளில் கனரக குண்டு தாக்குதலை இலங்கை இராணுவம் நடத்துவதற்கு விடுதலைப்புலிகளே தூண்டினர் என்று கருதுவதற்கும் இடம் இல்லை.

விடுதலைப்புலிகள் இந்த இலக்குகளுக்கு மிக நெருக்கமாக இருந்த தாலும் அந்த இலக்குகளுக்குள்ளேயே அவர்களது குடும்ப உறுப்பினர்களும் இருந்ததாலும் அவர்கள் இந்தகனரக குண்டுத் தாக்குதல்களை தூண்டியிருப்பார்கள் என கருத முடியவில்லை.

❖ தாக்குதல்கள் தவிர்க்கப்படும்பகுதிகளுக்கு செல்லுமாறு பொதுமக்களுக்கு உத்தரவிட்டதே இலங்கை அரசு தான். மக்கள் இருந்த இடமும் அரசுக்குத்தான் தெரியும். அப்பகுதியில் இருப்பவர்கள் பொது மக்கள் என்றும் அவர்களுக்குத் தெரியும். அரசுக்கு ஐ.நா. அலுவலர்கள் மற்றும் செஞ்சிலுவைச் சங்கம் போன்ற அமைப்புகளிடம் இருந்து தகவல்களும் வந்து கொண்டிருந்தன. அத்துடன் செயற்கைக் கோள் படங்களும் அரசிடமே இருந்தன.

எனவே அப்பகுதிகள் நேரில் பார்க்கக் கூடியதாகவும் இருந்திருக்கிறது. ஆனால் பல மாதங்களாகவே தொடர்ந்து பொது மக்கள் மீது குண்டுவீசித் தாக்குதல்களை நடத்துகிறீர்கள் என்று பலமுறை குற்றம் சாட்டியும் கூட, இலங்கைப்படையினர் தொடர்ந்து அதே பாணியில் தாக்குதல் களை நடத்திவிட்டு பொதுமக்கள் தாக்கப்பட வில்லை என்று கூறி வந்தனர்.

❖ அப்பாவி மக்கள் கொல்லப்பட்ட இத்தகைய சம்பவங்களுக்கு பொறுப்பான அதிகாரிகளின் நடத்தை விசாரிக்கப்பட வேண்டும்.

❖ இந்த தாக்குதல்களுக்கு ஆளான மக்களுக்கு உணவும் மருந்துகளும் வழங்குவதில் ஏற்பட்ட பிரச்சினைகள், மருத்துவமனைகள் மீது நடத்தப்பட்டதாக கூறப்படும் தாக்குதல்கள், மனிதநேய நடவடிக்கைகள் நடந்த இடங்களில் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்கள் போன்றவை மனித குலத்திற்கு எதிராக குற்றங்கள் இழைக்கப்பட்டிருக்கின்றது. இதற்கு தனி நபர்களே பொறுப்பா என்ற கேள்வியும் இங்கே எழுகிறது.





❖ இந்தப் போர்க்குற்றச்சாட்டுகளை முன் வைத்து *இன்டர்நஷனல் கிரைசிஸ் குரூப்* கருத்து கேட்டதற்கு இலங்கை அரசு பதிலளிக்க மறுத்துவிட்டது.

❖ விடுதலைப்புலிகள் இயக்கத்தினரும் போர்ப்பகுதியில் இருந்து தப்பி வெளியேற முயன்ற பொதுமக்களை தடுத்து அவர்கள் மீது தாக்குதல் நடத்தியிருப்பதால் அவர்களும் சர்வதேச சட்டங்களை மீறியிருக்கிறார்கள் என்று தெரியவந்துள்ளது.

இவ்வாறு இலங்கையில் போர்க்குற்றங்கள் நிகழ்ந்ததையும் ஆயிரக்கணக்கான பொதுமக்கள் கொல்லப்பட்டதையும் ஆய்வறிக்கையாக வெளியிட்டுள்ள இன்ரநஷனல் கிரைஸிஸ் குரூப், மனித இனத்திற்கு எதிரான இந்த நிகழ்வுகளில் சர்வதேச நாடுகள் அக்கறை கொள்ளாதிருந்ததையும் கண்டிப்புடன் சுட்டிக்காட்டியிருக்கிறது.

இலங்கையில் போர்க்குற்றங்களும் மனித உரிமை மீறல்களும் நடந்துகொண்டிருந்த போது சர்வதேச அளவில் பெரும்பாலான நாடுகள் மௌனம் காத்திருந்தன என்றும் மாறாக மனிதத்தைக்கொன்றதைப் பொருட்படுத்தாமல் விடுதலைப்புலிகள் தோற்கடிக்கப்பட்டதற்காக இலங்கை அரசுக்கு பல்வேறு நாடுகள் வாழ்த்துத்தெரிவித்தன என்று குறை கூறியிருக்கிறது அந்த ஆய்வறிக்கை.

### இராணுவத்தின் உரிமை மீறலை விசாரிக்கிறது இலங்கை அரசு?

இலங்கை இராணுவத்திற்கு எதிராக ஐக்கிய நாடுகள் உள்ளிட்ட அமைப்புகள் உரிமை மீறல் புகார்களை அடுக்கி வந்துகொண்டிருந்த நிலையில் இப்போது செவி சாய்த்திருக்கிறது இலங்கை அரசு.

இராணுவத்தினரின் உரிமைமீறல் புகார்கள் குறித்து விசாரிக்க எட்டுப்பேர் கொண்ட கமிசன் ஒன்று அமைக்கப்பட்டுள்ளதாக இலங்கை அரசு கடந்த திங்கட்கிழமை அறிவித்தது. முன்னாள் சட்டமா அதிபர் சித்தரஞ்சன் டி சில்வா தலைமையிலான இந்த கமிசன் அமைக்கப்பட்டுள்ளதாக இலங்கை ஜனாதிபதி செயலகம் தெரிவித்துள்ளது.

இந்த விசாரணை கமிசனில் சந்திரபால் சண்முகம், மனோகரி இராமநாதன் ஆகிய இரு தமிழர்கள் இடம்பெற்றுள்ளனர்.

கடந்த 2002ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் முதல் 2009ஆம் ஆண்டு மே மாதம் அளவிலான 7ஆண்டுகால கட்டத்தில் நடைபெற்ற உரிமை மீறல்கள் குறித்து இந்த கமிசன் விசாரிக்கும். இந்த கால கட்டத்தில் கற்றுக்கொண்ட பாடம், அது போன்ற தவறுகள் மேற்கொண்டு நடைபெறாமல் தடுத்து நல்லிணக்கம் ஏற்படுத்துவதற்கான நடவடிக்கை குறித்து இந்த விசாரணை கமிசன் அரசுக்கு அறிக்கை தாக்கல் செய்யும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

**நன்றி :-விகடன் குழுமம்**

நியாயம் இன்னதென்று அறிந்தும் அதை நீ செய்யாதிருப்பது கோழைத்தனமாகும்.
- கோன்பு தலசன்

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

# மேலும் 10 கிராம அலுவலர்கள் புதிதாக நியமனம் பெறவுள்ளனர்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் புதிய நியமனங்களைப் பெறவுள்ள கிராம அலுவலர்களுக்கான பயிற்சிநெறி, யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தில் எதிர்வரும் யூன் மாதம் முதலாம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ளது. இப் பயிற்சி நெறிக்கான கடிதங்கள் தெரிவு செய் யப்பட்டவர்களின் தனிப்பட்ட விலாசங் களுக்கு பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சு செயலரினால் தபாலில் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இவர்கள் அனைவரும் தங்கள் வரவினை எதிர்வரும் 25 ஆம் திகதிக்கு முன்னர் மாவட்டச் செயலகத்திற்கு சமுகமளித்து உறுதிப்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

புதிய நியமனங்கள் பெறவுள்ளவர்களின் விபரம் வருமாறு,

**பிரதேச செயலகம், சண்டிலிப்பாய்**

எம்.அருணன் (தொட்டிலடி, சங்கானை), கே.சுதர்ஷன் (நவாலி வீதி, ஆனைக்கோட்டை)

**உதவி அரசாங்க அதிபர் பணிமனை, ஊர்காவற்றுறை**

ஏ.ஆரூரன் (வேட்-03,எழுவைதீவு), என்.தர்ஷன் (குலின்குடால், ஊர்காவற் றுறை)

**பிரதேச செயலகம், யாழ்ப்பாணம்**

எவ்.சேந்தன் (சிவப்பிரகாசம் வீதி, வண்ணார்பண்ணை), டி.மர்லின்மரீற்றா (கோவில் வீதி, சுண்டிக்குளி)

**பிரதேச செயலகம், கோப்பாய்**

ரி.குணசீலி (சிறுப்பிட்டி வடக்கு, நீர்வேலி), பி.கனிதா (ஆவரங்கால் கிழக்கு,புத்தூர்), ஆர்.கோகுலன் ( வாதரவத்தை, புத்தூர்), ரி.சியாமளா (நீர்வேலி மேற்கு, நீர்வேலி). (6)

## சனல்-4 சிவனின் நெற்றிக்கண் இதோ! உருத்திரதாண்டவம்

சிவனுக்கு முக்கண்ணன் என்று பெயர். நெற்றியில் கண் இருப்பதனால் அந்தப் பெயர் ஏற்படலாயிற்று.

நெற்றிக் கண் திறந்தால் தீப்பிழம்பு பாயும்.

நக்கீரனைச் சுட்டெரித்தது நெற்றிக் கண்ணே. தமிழ்க் கடவுள் முருகனைத் தந்ததும் நெற்றிக் கண்ணே.

இந்தப் புராணங்களெல்லாம் இப்போது எதற்கு என்றா கேட்கிறீர்கள்? எல்லாவற்றிற்கும் காரணம் உண்டு.

ஆம், சனல்-4 இவ்வளவு படங்களை-ஆதாரங்களை காட்சிப்படுத்துகின்றதே. இவை எல்லாம் அந்தச் சனலுக்கு எப்படிக் கிடைத்தது?

இந்தக் கேள்விகள் தேவையற்றவை. ஏனெனில் ஊடகங்களையும் மூன்றாவது கண் என்று கூறுவதுண்டு.

அதாவது சிவனின் கண்ணென்று பொருள் கொள்ளலாம்.

வன்னியில் நடந்த யுத்தத்தை இறைபரம் பொருள் வெளிப்படுத்த முற்பட்டுவிட்டது.

என்ன செய்வது நேரில் வந்து அதனை செய்ய முடியாத துரதிர்ஷ்டம்.

சிவன் உடுத்திருக்கும் புலித்தோல், தொண்டையில் வைத்திருக்கும் சயனட் நஞ்சு, சடாமுடியின் மறைப்பில் கங்கைப் பெண் இவற்றுக்கெல்லாம் இலங்கை மண்ணில் இருக்கக் கூடிய அவசர காலச் சட்டம், பயங்கரவாதத் தடைச்சட்டம் இடம்தரா மாட்டா.

இதற்கு மேலாக அவரும் பொலநறுவையில் உள்ள அவரின் வீட்டில் இருந்து துரத்தப்பட்டவர்தான்.

சுருங்கச் சொன்னால் இடம்பெயர்ந்து அலையும் தமிழர்களின் நிலைதான் சிவனுக்கும்.

அதனால் அவர் நேரில் வந்து வன்னி யுத்தத்தில் நடந்தது என்ன என்பதை படம்பிடித்து காட்டுவது கடினம்.

இதற்காக அவர் ஒரு திட்டம் தீட்டினார். திட்டத்தை இலண்டனில் இருந்து அமுல்படுத்த எண்ணினார்.

இந்தியாவில் அமுல்படுத்தினால் நல்லது தான். ஆனால் பிரதமர் மன்மோகன் சிங் தன்னை விட ஒருபடி மேலே சென்று முடியும் அந்த முடியை மறைக்க தலைப்பாகையும் அணிந்திருப்பதால் அவரை துண்டற நம்ப முடியாது என்று முடிவெடுத்தார்.

உருத்திராட்சம் அணிந்த இந்திரா காந்தி மீது நம்பிக்கை தான். அதற்கென்ன செய்வது அவரை சிங்கின் உறவுகள் சுட்டுத்தள்ளி விட்டனவே.

இப்போது சோனியா. அவரை எப்படி நம்புவது. இத்தாலி மக்கள் அவரை நம்பாமல் தானே இந்தியாவுக்கு அனுப்பி வைத்தார்கள். ஆகவே, இலண்டனை தெரிந்தெடுத்தார்.

சிவன் என்ற பெயரை 'சனல்' என்று மாற்றிக் கொண்டார். தனது ஒருருவத்தில் இருக்கக் கூடிய சிவன், உமை, கங்கை, முயலகன் என்ற நால்வரையும் நான்கு என்று ஆக்கிக் கொண்டு எடுத்த காட்சிகளைக் காண்பிக்கின்றார்.

அட! இதை நாங்கள் செய்யவில்லை. இது பொய். முற்றிலும் பொய் என்று இலங்கைச் சனநாயகம் சொல்கிறது.

சிவன் சிரிக்கிறார். அட சிவனோடு இருந்த நால்வரும் (சனல்-4) சிரிக்கின்றனர்.

இதற்கு ஆதாரம் உண்டு. இன்னும் படங்களும் உண்டு. நெற்றிக்கண்ணைத் திறக்கட்டுமா? என்று கேட்க, ஐ.நா.செயலர் விசாரணை தொடங்கும் என்று கூறிக்கொண்டே நடுங்குகின்றார்.

இறைவா! எல்லாவற்றையும் ஒருவன் பார்த்துக் கொண்டிருப்பான் என்பார்களே! அது தவறு. எல்லாவற்றையும் நான்கு பேர் பார்த்துக் கொண்டிருப்பர்கள்.

நாங்கள் சனல்-4ஐப் பார்ப்போம்.

உலகம் எங்கள் பரிதாபத்தைப் பார்க்கட்டும்.

விரும்பினால் ஜெனரல் சரத் பொன்சேகா மந்திர உச்சாடனம் செய்யட்டும். எங்கே உருத்திரதாண்டவம்! இதோ இன்னும் சில நேரங்களில் ஆரம்பமாகும்.

முதலாம் தர மாணவர் அனுமதி தொடர்பான

## தேசியகொள்கை வகுக்க அமைச்சரவை அங்கீகாரம்

(கொழும்பு)

முதலாம் தரத்துக்கு மாணவர்களை சேர்ப்பது தொடர்பான தேசியக் கொள்கை ஒன்றை வகுக்க அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

கல்வி அமைச்சர் பந்துல குணவர்தன இதற்கான அமைச்சரவைப் பத்திரத்தை சமர்ப்பித்திருந்தார்.

இதற்காக அமைச்சரவை உப குழு ஒன்றும் நியமிக்கப்படவுள்ளது. அமைச்சர்களான பந்துல குணவர்தன, எஸ்.பி.திஸாநாயக்க ,சுசில் பிரேமஜயந்த, தினேஷ் குணவர்தன, அநுர பிரியதர்ஷன் யாப்பா, பாட்டலி சம்பிக்க ரணவக்க, விமல் வீரவன்ச, பி.தயாரத்ன ஆகியோர் இக்குழுவில் அங்கம் விகிக்கிறனர். ஒரு வாரத்தில் இக்குழு அறிக்கை சமர்ப்பிக்க உள்ளது.(6)

## இலங்கையுடன் உறவுகளை வலுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்-நோர்வே தூதுவர்

(கொழும்பு)

இலங்கைக்கும் நோர்வேக்கும் இடை யில் நிலவி வரும் உறவுகளை மேலும் வலுப்படுத்தக் கூடிய வகையில் நடவடிக்கை எடுக்கப்படும் என இலங்கைக்கான நோர்வே தூதுவர் டோரா ஹெடும் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் சமாதான நடவடிக்கைகளுக்கு பூரண ஆதரவளிக்கப்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

நோர்வே தேசிய தினத்தை முன்னிட்டு கொழும்பில் நடைபெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய போது அவர் இதனை சுட்டிக்காட்டியுள்ளார்.

அரசியல் ரீதியான தீர்வுத் திட்டமொன்றை முன்வைப்பது குறித்து இலங்கை கூடுதல் கவனம் செலுத்த வேண்டும் என வலியுறுத்திமயுள்ள அவர் இந்த முனைப்புகளுக்கு தேவையான சகல உதவிகளையும் தமது நாடு வழங்கும் என உறுதியளித்துள்ளார். (6)



## அறிந்து கொள்ள வேண்டிய ஆன்மீகத் தகவல்கள்

### தேங்காயை கவிழ்த்துப் போடுங்கள்

கோயிலுக்குச் சென்று தேங்காய் உடைத்து வீட்டுக்கு எடுத்து வந்தால் அதை கவிழ்த்துப்போட வேண்டும். நேராக வைப்பதை அமங்கலமாக முன்னோர்கள் கருதினர். ஒருவர் இறந்து விட்டால் தேங்காய் உடைத்து அதில் எண்ணெய் ஊற்றி நிமிர்த்திய நிலையில் தீபம் ஏற்றுவது வழக்கம். அதைப்போல பிரசாதக்காயை நிமிர்த்தி வைக்கக்கூடாது.

இதில் ஓர் அறிவியல் தத்துவமும் உண்டு. உடைத்த தேங்காயை பூச்சிகள்,பல்லிகள் முகர்ந்து பார்க்கும் இதனால் நோய்க்கிருமிகள் பரவும். நம் முன்னோர் உணவுப்பொருட்களுக்கு மிகுந்த மரியாதை அளிக்கச் சொன்னதன் காரணம் நம்மை நோயில் இருந்து காத்துக்கொள்ளத்தான்.

## வெள்ளி நற்சிந்தனை 123

# பக்தியின் மொழி தமிழ்

**கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்**

ஈழ நாட்டில் உள்ள சிறப்பான திருத்தலங்களில் திருக்கேதீஸ்வரமும் மிகச் சிறப்பானது. இத்தலச் சிறப்பை திருஞானசம்பந்தரும் சுந்தரமூர்த்தியும் பாடியுள்ளனர். இப் பாடல்கள் திருக்கேதீஸ்வரத் தலத்தின் அக்காலத்துச் சிறப்பான நிலையை விளக்கியுள்ளன. அவற்றை இன்று படிக்கும் போது பக்தி உணர்வு மேலோங்கி இருப்பதைக் காணலாம். அவ் உணர்வு தமிழ் மொழியாற்றலால் நன்கு வெளிப்படுத்தப்பட்டுள்ளது.


கோயிலில் வீற்றிருக்கும் அருட்செயல்கள் பாடல்களிலே குறிப்பிடப்படுவதன் மூலம் திருத்தலச் சிறப்பு விளக்கப்பட்டுள்ளது. தலத்திலே அருள் நிறைந்திருப்பது அங்குள்ள இறைவனின் கருணையாலாகும். இறைவன் முப்புரங்களையும் எரித்தமை பற்றிய செய்தி பாடலில் இணைந்துள்ளது. சம்பந்தருடைய செந்தமிழ் புலமையால் இச் செய்தி சிறப்பாக பதிவு செய்யப்பட்டுள்ளது. மாமேரு மலையை வில்லாகவும் அரவை நாணாகவும் கொண்டு தீயை அம்பாக்கி திரிபுரங்களை எரித்த செயல் பற்றியே சம்பந்தர் வியந்து பாடியுள்ளார். "அனல் எரி அம்பாக" என்ற தொடர் அவருடைய செந்தமிழ் புலமைக்கு எடுத்துக்காட்டாக உள்ளது. "அனல்" என்ற சொல் நெருப்பின் ஆகக்கூடிய வெம்மை யைச் சுட்டி நிற்பது. "எரி" என்ற சொல் நெருப்பின் தொடக்க நிலையை சுட்டி நிற்பது. காரைக்கால் அம்மையார் சிவன் கை களிலே "அழல்" ஏந்தி ஆடுவதாகக் குறிப்பிட்டுள்ளார். "அழல்" என்பது நெருப்பின் வண்ணத்தைக் குறிப்பதாகும். இங்கு சம்பந்தருடைய பாடல் அடியில் சிவனின் சீற்றம் புலப்படு கிறது. அனல் போல வெம்மையான நிலையில் உக்கிரமாக நடைபெற்ற போரிலே சிவனுடைய அம்புகளும் வெம்மை யாகச் சென்று விரைவாகச் திரிபுரத்தை எரித்து விடுகின்றன. முப்புரங்களையும் அழிக்கும் ஆற்றல் கொண்ட அம்புகளாக நெருப்புப் பயன்பட்டதை சம்பந்தர் காட்சிப்படுத்தியுள்ளார்.

புராணக் கதைகளிலே கூறப்பட்ட விடயங்களை அடியார்கள் மனக்கண்களால் காண்பதற்கு ஏற்ற சொற்களையும் சொற்றொடர்களையும் பயன்படுத்துவதில் சம்மந்தர் தனித்துவமான திறமை பெற்றவராய் உள்ளார். இத்தகைய ஆற்றல் படைத்த இறைவன் "பற்றி நின்றுறை பதி'என திருக்கேதீஸ்வர திருத்தலத்தை குறிப்பிட்டுள்ளார். மிக விருப்பத்தோடு இத்தலத்திலே என்னாலும் இறைவன் இங்கு எழுந்தருளியிருக்கின்றான்.

"பதி" என்ற சொல் சிறந்த இருப்பிடம் எனப் பொருள் தரும். அத்தகைய திருக்கேதீஸ்வரத்தின் புறச் சூழலைப் பற்றி பாடும் போது ஒரு சிறப்பான தொடர் சம்பந்தருடைய உள்ளக்கிடக்கையை வெளிப்படுத்திக் காட்டி நிற்கிறது. "எந்நாளும் கருதுகின்ற ஊர்" என்ற தொடர் சம்பந்தர் ஒவ் வொரு நாளும் இத்தலத்தைப் பற்றி நினைத்திருப்பதைக் காட்டுகிறது. ஒலிக்கின்ற கடற் கரையிலே நிறைந்த மண முள்ள பூஞ்சோலைகள் சூழ்ந்த மாதோட்டம் என்னும் நக ரிலே இத்தலம் அமைந்துள்ளது.இத் தலத்திற்கு சென்று வழிபடுவதால் ஏற்படும் பயனையும் சம்பந்தர் பாடலிலே கூறியுள்ளார். இத்தலத் திலே வீற்றிருக்கும் இறைவனிடம் சென்று அடைக்கலம் எனத் தொழுதால் எம்மைப் பற்றித் தொடருகின்ற கொடிய வினைகள் எல்லாம் எம்மை விட்டு உடனடி யாக அகன்று விடும். அது மட்டுமன்றி மேலும் கொடிய வினை கள் எம்மை வந்து பற்றிக் கொள்ளவும் மாட்டா. "கைதொழக் கடு வினையடையாவே" என்ற தொடர் இக்கருத்தை நன்கு வலியுறுத்தி நிற்கின்றது.

"விருதுகுன்றமா மேருவில் நாணறவா அனல் எரியம்பாகப்
பொருதுமூவெயில் செற்றவன் பற்றி நின்று உறைபதி
எந்நாளும்
கருதுகின்ற ஊர் கனைகடற் கடிகமழ் பொழிலணி மாதோட்டம்
கருதநின்ற கேதீச்சரங் கைதொழக் கடுவினை அடையாவே"







யாழ்ப்பாணம் வலயக் கல்வி அலுவலக முன்பள்ளி அபிவிருத்திப் பிரிவின் நாற்று செய்திமடல் -2 வெளியீடு நேற்று யா/சன்மார்க்க மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது. யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் மங்கல விளக்கேற்றுவதையும், யாழ்.கல்வி வலய முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் க.விமலநாதன் உரையாற்றுவதையும், முதன்மை விருந்தினரான லயன் டாக்டர் வை.தியாகராசா நூலை வெளியிட்டு வைக்க முதல் பிரதியை வடமாகாண கல்வியமைச்சின் முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் செல்வி ஜெயா தம்பையா பெற்றுக்கொள்வதையும், முன்பள்ளி ஆசிரியர்களின் கலைநிகழ்வையும், நிகழ்வில் கலந்துகொண்டவர்களையும் படங்களில் காணலாம்.

(படங்கள்:-என்.குமார்)

# வெள்ள அனர்த்தத்தில் கம்பஹா மாவட்டமே பெரிதும் பாதிப்பு

(கொழும்பு)

சீரற்ற காலநிலையால் ஏற்பட்ட அனர்த் தங்களில் சிக்கி இதுவரை 18 பேர் உயிரிழந் ததுடன் 5 இலட்சத்துக்கும் அதிகமானோர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

220 வீடுகள் முற்றாகவும் 1039 வீடுகள் பகுதியளவிலும் சேதமடைந்துள்ளன. தற் போதைய நிலைமையின்படி கம்பஹா மாவட்டமே பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது.

இங்கு ஒரு இலட்சத்து 79ஆயிரத்து 974 பேர் பாதிக்கப்பட்டுள் ளதுடன் இவர்களுள் 14 ஆயிரத்து 413 பேர் இடைத் தங்கல் முகாம் களில் தங்கியுள்ளதாகவும் அறிவிக்கப்படு கிறது.

கொழும்பு மாவட்டத்தில் 34ஆயிரத்து 535 குடும்பங்களைச் சேர்ந்த 1இலட்சத்து54ஆயிரத்து121 பேர் சீரற்ற கால நிலையால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

களுத்துறை மாவட்டத்தில் 1 4ஆயிரத்து 434 குடும்பங்களைச் சேர்ந்த 61ஆயிரத்து 755 பேரும் காலி மாவட்டத்தில் 97ஆயிரம் பேரும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

காலநிலைச் சீர்கேட்டால் நுவரெலியா, இரத்தினபுரி, காலி, மாத்தறை, புத்தளம், திருகோணமலை, மன்னார், அநுராதபுரம், குருநாகல் ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த மக்களும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

ஏற்கனவே பாதிக்கப்பட்டுள்ள மக்களுக் காக 50 இற்கும் மேற்பட்ட இடைத்தங்கல் முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளன.

கொழும்பு மாவட்டத்தில் 10 முகாம்களும் கம்பஹா மாவட்டத்தில் 40 இற்கும் மேற்பட்ட முகாம்களும் அமைக்கப்பட்டுள்ளதாக இடர் முகாமைத்துவ நிலையம் குறிப்பிட்டது.(4-6)

## ஜப்பான் குடிவரவு தடுப்புமுகாமில்

# இலங்கையர்கள் உட்பட 70பேர் உணவு தவிர்ப்பு போராட்டம்

ஜப்பானில் அமைந்துள்ள குடிவரவு தடுப்பு முகாமொன்றில் இலங்கையர்கள் உட்பட வெளிநாட்டு அகதிகள் 70 பேர் வரை உணவுத் தவிர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டுள் ளனர்.

தம்முடன் தடுத்து வைக்கப்பட்டிருந்த ஆபிரிக்க நாட்டைச் சேர்ந்த ஒருவர் மர்மமான முறையில் மரணமானதை கண்டித்தும் தம்மை விடுதலைசெய்யுமாறும் கோரியும் போராட்டம் நடத்தப்படுகின்றது.

இவர்கள் கடந்த 10 ஆம் திகதி முதல் உணவு தவிர்ப்பு போராட்டத்தில் ஈடுபடுவதாக தெரிவிக்கப்படுகிறது.

டோக்கியோவின் வடகிழக்கிலுள்ள ஒஸ்ரிக் கோ என்ற இடத்தில் இந்த குடிவரவு தடுப்பு முகாம் அமைந்துள்ளது. இந்த முகாமில் சுமார் 380 பேர் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர் எனவும் இவர்களுக்குரிய அடிப்படை வசதிகள் எதுவும் செய்து கொடுக்கப்படவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன் 20 சதுர மீற்றர் பரப்பளவான அறையொன்றில் 8 அல்லது 9 பேர் வரை தடுத்துவைக்கப்பட்டுள்ளதாக அகதிகளின் உறவினர்கள் தெரிவித்துள்ளனர். (6-4)

# ஆசிரியர்களுக்கான செயலமர்வு பிற்போடப்பட்டுள்ளது

தென்மராட்சி வலய ஆசிரியாகளுக்கு நாளை, நாளை மறுதினம் மற்றும் 24 ஆம் திகதி வரணி ஆசிரிய வள நிலையம், சாவகச் சேரி இந்துக்கல்லூரி, ஆகிய இடங்களில் நடைபெறவிருந்த கற்றல், கற்பித்தல் வளங் களின் விருத்தியும் பயன்பாடும் தொடர்பான செயலமர்வு தவிர்க்க முடியாத காரணத்தி னால் பிற்போடப்பட்டுள்ளதாகவும் இச்செயல மர்வு தொடர்பான திகதி பின்னர் அறிவிக் கப்படும் எனவும் தென்மராட்சி வலயக்கல்விப் பணிப்பாளர் கு.பிறேமகாந்தன் அறிவித்துள் ளார். (4)

# அனுபவப் பகிர்வும் திட்ட இலக்குகள் தொடர்பான கலந்துரையாடலும்

(யாழ்ப்பாணம்)

கெயர் சர்வதேச நிறுவனத்தின் அனுசர ணையுடனும் சீடா நிறுவனத்தின் நிதியுதவியு டனும் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் லிவ்ற் திட்டம்'2 இன் 2ஆவது சுழற்சிக் காலப் பகுதிக்கும் வலி -கிழக்கு, கோப்பாய் பிரதேச செயலர் பிரிவும் உள்வாங்கப்பட்டுள்ளது.

அத்துடன் மேற்படி வலி- வலி கிழக்கு, கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் நடை முறைப்படுத்தப்பட்டு வந்த லிவ்ற் திட்டம் 2இன் 1ஆவது சுழற்சிக் காலத்தின் போது அடையப்பட்ட இலக்குகளின் அனுபவப் பகிர் வும் 2ஆவது சுழற்சிக்காலப் பகுதிக்குரிய திட்டஇலக்குகள் தொடர்பான கலந்துரை யாடலும் நாளை சனிக்கிழமை முற்பகல் 9.30 மணி முதல் பிற்பகல் ஒரு மணிவரை கோப்பாய் பிரதேச செயலக மகாநாட்டு மண் டபத்தில் நடைபெறவுள்ளது என நிறுவனத் தின் பிரதித் திட்டப் பணிப்பாளர் அறிவித்துள் ளார். (6-4)

# கடந்த வருடம் சாதாரண தர பரீட்சைக்கு தோற்றிய இடம்பெயர்ந்த மாணவர்களுக்கு

(யாழ்ப்பாணம்)

வன்னியில் இருந்து இடம்பெயர்ந்து தென்மராட்சிப் பிரதேச இடம்பெயர்ந்தோர் முகாமில் இருந்து க.பொ.த (சா/த) பரீட்சை 2009 இற்கு தோற்றிய மாணவர்களில் இதுவரை பரீட்சைப் பெறுபேறு கிடைக்கப் பெறாத மாணவர்கள் பெறுபேற்றை பெற்றுக்கொள்வதற்காக இன்று வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கு தங்களது முழுப்பெயர் ,தே.அ.அட்டைஇல, சுட்டெண், நிரந்தரப் பாடசாலை (வன்னி) ,தற்காலிகப் பாடசாலை (யாழ்ப்பாணம்) ஆகிய விபரங்களுடன் வலயக்கல்வி அலுவலகத்திற்கு வருகைதருமாறு வலயக்கல்விப் பணிப்பாளர் கு.பிறேமகாந்தன் கேட்டுள்ளார்.

✠✠✠

வன்னியிலிருந்து இடம்பெயர்ந்து யாழ்ப்பாணப் பாடசாலைகளில் க.பொ.த (சா/த) பரீட்சை எடுத்து இதுவரை பெறுபேறு கிடைக்காத மாணவர்கள் தமக்குரிய பரீட்சை எடுத்த பாடசாலைக் குரிய வலயங்களின் பெயர், சுட்டெண், நிரந்தரப் பாடசாலை, பரீட்சை நிலையம் போன்ற விபரங்களை இன்று வெள்ளிக்கிழமை பதிந்து பெறுபேறுகளை பெற உதவுமாறு யாழ் வலயக் கல்விப்பணிப்பாளர் கேட்டுள்ளார். (6-4)

# சூரிய ஒளியில் இயங்கும் மின்பிறப்பாக்கிகள் மூலம் மின்சாரம்

(கொழும்பு)

சூரிய ஒளியில் இயங்கும் மின் பிறப்பாக் கிகள் இலங்கைக்கு எடுத்துவரப்படவுள்ளன.

ஜப்பான் மற்றும்கொரிய அரசாங்கங்க ளின் நிதியுதவியுடன் இந்த மின்பிறப்பாக் கிகள் கிடைக்கவுள்ளதாக அரசாங்க தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இந்த மின்பிறப்பாக்கிகள் அம்பாந்தோட் டையிலுள்ள பரககந்தவில் நிறுவப்படவுள் ளன.

சுமார் 50 ஏக்கர் நிலப்பரப்பில் நிறுவப் படும் இந்த சூரிய ஒளி மின்பிறப்பாக்கி மூலம் வருடாந்தம் ஒரு இலட்சத்து 23 ஆயிரத்து 750 கிலோ வாற் மின்சாரத்தை உற்பத்தி செய்யமுடியும் என தெரிவிக்கப்படு கிறது.

2016 ஆம் ஆண்டளவில் ஏற்படும் மின் சாரத்துக்கான கேள்வியில் 10 வீதத்தை இது பூர்த்தி செய்யும் என்றும் தகவல் திணைக் களம் அறிவித்துள்ளது. (6-4)

# பார்சிலோனா கழகத்துடன் டேவிட் வில்லா ஒப்பந்தம்

வெலன்சியா கால்பந்தாட்டக்கழகத்தின் முன்னணி வீரர் டேவிட்வில்லா பார்சிலோனா கழகத்தில் இணைந்து கொண்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

ஸ்பெயின் நாட்டைச்சேர்ந்த டேவிட் வில்லாவை பார்சிலோனா கழகம் 34.2 மில்லியன் ஸ்ரேலிங் பவுண்களைக் கொடுத்து பரிமாற்றம் செய்துள்ளது.

28 வயதான வில்லா 2008ஆம் ஆண்டு யூரோக்கிண்ண போட்டிகளின் போது அதிகூடிய கோல்களைப் போட்டவர் என்பது குறிப்பிடத்தக்கது. டேவிட்வில்லாவை அணியில் இணைத் துக்கொள்வதற்காக மான்செஸ்டர் யுனைட்ட் மற்றும் செல்சியா ஆகிய கழகங்களும் முயற்சிகளை மேற்கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

டேவிட் வில்லா எதிர்வரும் யூன் மாதம் நடைபெறவுள்ள உலகக்கிண்ணப் போட்டியில் ஸ்பெயின் அணியை பிரதிநிதித்துவப் படுத்தவுள்ளார்.

# வடக்கு மாகாண அணி கிழக்கு அணியை வீழ்த்தியது

(யாழ்ப்பாணம்)

மாகாணங்களுக்கிடையிலான போட்டியில் கிழக்கு மாகாண அணியை 15 ஓட்டங்களால் வடமாகாண அணி வெற்றி கொண்டது.

மாகாணங்களுக்கிடையிலான 50 ஓவர்கள் மட்டுப்படுத்தப்பட்ட கிரிக்கெட் சுற்றுப்போட்டி தற்போது நடைபெற்று வருகின்றது. இதில் கிழக்கு, ஊவா, வடமத்திய, மேல்மாகாண வடக்கு அணி ஆகிய அணிகளின் பிரிவில் வடமாகாண அணி இடம்பெற்றிருந்தது.

வடமாகாண அணி தனது முதல் போட்டியில் கிழக்கு மாகாண அணியினை எதிர்த்து விளையாடியது.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற வடமாகாண அணி முதலில் துடுப்பெடுத்தாட களமிறங்கியது. துடுப்பாட்ட வீரர்களின் சராசரியான பங்களிப்பினால் 46 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையுமிழந்து 230 ஓட்டங்களை எடுத்தது.


துடுப்பாட்டத்தில் ஜெரிக்துஷாந்த், ரியூட்ர், ஹரிவதனன், சஞ்சீவன் ஆகியோர் முறையே 43,37,36,31 ஓட்டங்களை பெற்றுக்கொடுத்தனர்.

பதிலுக்கு 50 ஓவர்களில் 231 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய கிழக்கு மாகாண அணி இறுதிவரை போராடிய போதும் கோகுலனின் பந்துவீச்சிக்கு அடுத்தடுத்து விக்கெட்டுக்களையிழந்தது. 42 ஓவர்களில் 215 ஓட்டங்களை மாத்திரமெடுத்து சகல விக்கெட்டுக்களையும் இழந்து 15 ஓட்டங்களால் தோல்வியடைந்தது.

துடுப்பாட்டத்தில் அலாருதீன், லக்ஸித, பிரசாத் முறையே 57,45,30 ஓட்டங்களைப் பெற்றுக்கொடுத்தனர்.

பந்துவீச்சில் வடக்குமாகாண அணி சார்பாக கோகுலன் 5 விக்கெட்டுக்களையும் எரிக் பிரதாப் 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

# முதலாவது இருபது-20 போட்டியில் தென்னாபிரிக்கா 13 ஓட்டங்களால் வெற்றி




(அன்டிகுவா)

மைக்கலரனின் துல்லியமான பந்துவீச்சின் மூலம் தென்னாபிரிக்க அணி 13 ஓட்டங்கள் வித்தியாசத்தில் மேற்கிந்தியத்தீவுகள் அணியை வீழ்த்தியது.

மேற்கிந்தியத்தீவுகளுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள தென்னாபிரிக்க அணி 2 இருபது-20, 5 ஒருநாள் மற்றும் 3 டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடுகிறது.

இதில் முதலாவது இருபது-20 போட்டி நேற்று முன்தினம் அன்டிகுவாவில் நடைபெற்றது.

இப் போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற மேற்கிந்தியத்தீவுகள் அணித்தலைவர் கிறிஸ்ஹயில் முதலில்களத்தடுப்பைத் தீர்மானித்தார்.

இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணி ஜக் கலிஸின் சிறப்பான அரைச்சதத்தின் மூலம் நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்களில 7 விக்கெட்டுக்களையிழந்து 136 ஓட்டங்களை எடுத்தது.

இதில் ஜக்கலிஸ் 45 பந்துகளில் (ஒரு பவுண்டரி, 3 சிக்ஸர்கள் உட்பட) 53 ஓட்டங்களையும் அணித்தலைவர் கிரேம் சிமித் 31 பந்துகளில் (3 பவுண்டரிகள், ஒரு சிக்ஸர்கள் உட்பட) 37 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் ரோச், பொல்லார்ட் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும் ரெய்லர், மில்லர் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு 20 ஓவர்களில் 137 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் துடுப்பெடுத்தாடிய மேற்கிந்தியத்தீவுகள் அணி முன்னணி வீரர்கள் சோபிக்காத நிலையில் 19.5 ஓவர்களில் 123 ஓட்டங்களை மாத்திரமெடுத்து சகல விக்கெட்டுக்களையும் இழந்து 13 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வியடைந்தது.

இதில் பொல்லாட் 17 பந்துகளில் (2 பவுண்டரிகள், ஒரு சிக்ஸர்கள் உட்பட) 27 ஓட்டங்களையும் பிரவோ 22 பந்துகளில் (2 பவுண்டரிகள் உட்பட) 20 ஓட்டங்களையும், சமி 17, அணித்தலைவர் ஹயில் 14, சர்வான் 13 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் மைக்லரன் 3.5 ஓவர்கள் பந்துவீசி 19 ஓட்டங்கள் மாத்திரம் கொடுத்து 5 விக்கெட்டுக்களையும் ஜெகான் போத்தா 2 விக்கெட்டுக்களையும் வான்டேர் மேர்வ், லாங்வேல்ட் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

இப் போட்டியில் தென்னாபிரிக்க அணியின் வெற்றிக்கு திருப்புமுனையமைத்த மைக்லரன் ஆட்டநாயகனாகத் தெரிவானார்.

இவ் வெற்றியின் மூலம் 2 போட்டிகள் கொண்ட இருபது-20 தொடரில் தென்னாபிரிக்க அணி 1:0 என்ற கணக்கில் முன்னிலை பெற்றது.

இரு அணிகளுக்குமிடையிலான தீர்க்கமான இரண்டாவது போட்டி நேற்று அன்டிகுவாவில் நடைபெற்றது.

# தென்னாபிரிக்க அணியிலிருந்து மார்க் பவுச்சர் அதிரடி நீக்கம்




(அண்டிகுவா)

தென்னாபிரிக்க அணியின் விக்கெட் காப்பாளர் மார்க் பவுச்சர் நீக்கப்பட்டுள்ளார். இவருக்குப் பதில டி வில்லியர்ஸ் இப் பணியை மேற்கொள்கிறார்.

கடந்த 12 ஆண்டுகளாக ஒவ்வொரு முக்கிய தொடரிலும் இறுதிப்போட்டிக்கு தகுதி பெறாமல் தென்னாபிரிக்க அணி வெளியேறி வருகிறது.

இதையடுத்து வரும் 2011இல் இந்திய துணைக்கண்டத்தில் நடக்கும் உலகக் கோப்பை (50 ஓவர்கள்) தொடருக்கு தயாராகும் வகையில் அணியில் சில அதிரடி மாற்றங்களை செய்ய நிர்வாகம் முன்வந்துள்ளது.

இது குறித்து அணித்தலைவர் சிமித் கூறிய தாவது,

புதிதாக அமைக்கப்பட்ட தேர்வுக்குழு சில யுக்திகளை செயல்படுத்த உள்ளது. இந்திய துணைக்கண்டத்தில் நடக்கும் உலக கோப்பைத் தொடருக்கு முன்பாக எங்கள் அணி 15 ஒருநாள் போட்டிகளில் மட்டும் தான் பங்கேற்கிறது.

இதனால் உடனடியாக மாற்றம் செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டது. இதையடுத்து தேர்வுக்குழு தலைவர் ஆன்ட்ரூ ஹட்சன் நேரடியாக இங்கு வந்து எங்களுடன் விவாதித்தார்.

பின் அனுபவ பவுச்சருக்குப் பதிலாக ஒரு நாள் மற்றும் இருபது-20 போட்டிகளில் டி வில்லியர்ஸ் விக்கெட் காப்பாளர் பணியை மேற்கொள்வது என முடிபு செய்யப்பட்டது. இவ்வாறு சிமித் கூறினார்.

# பாகிஸ்தான் டெஸ்ட் அணிக்கு தலைவராக பட் நியமிக்கப்படலாம்!




(காரர்ச்சி)

பாகிஸ்தான் டெஸ்ட் அணிக்கு புதிய தலைவராக சல்மான் பட் நியமிக்கப்பட வாய்ப்பு உள்ளதாக பாகிஸ்தான் கிரிக்கெட் சபை தகவல்கள் தெரிவிக்கின்றது.

பயங்கரவாத அச்சுறுத்தல் காரணமாக சர்வதேச அணிகள் பாகிஸ்தான் சென்று விளையாட மறுக்கின்றன. இதையடுத்து பாகிஸ்தான் அணி இங்கிலாந்துக்கு சுற்றுப்பயணம் செல்கிறது.

அங்கு அவுஸ்திரேலியா மற்றும் இங்கிலாந்து அணிகளுக்கு எதிராக 6 டெஸ்ட் போட்டிகளில் பங்கேற்கிறது. அவுஸ்திரேலியாவுடனான முதல் டெஸ்ட் வரும் ஜூலை 13ஆம் திகதி ஆரம்பமாகிறது.

இத் தொடருக்கான பாகிஸ்தான் அணி நாளை அறிவிக்கப்படவுள்ளது. இதில்முன்னாள் பயிற்சியாளர்கள் இன்திகாப் அலாம், அகிப் ஜாவித் ஆகியோர் ஆலோசனைப்படி தடை செய்யப்பட்ட வீரர்களான முகமெட் யூசுப், யூனிஸ்கான் மற்றும் சோகைப் மலிக் தேர்வு செய்யப்படமாட்டார்கள்.

மாறாக வேகப்புயல் அக்தர், பைசல் இக்பால், அசிம் கமல், ஹசன் ரேசா போன்ற புறக்கணிக்கப்பட்ட வீரர்களுக்கு வாய்ப்பு அளிக்கப்படும் என தெரிகிறது.

டெஸ்ட் போட்டிகளில் அணித்தலைவராக செயல்பட அப்ரிடிக்கு விரும்பமில்லை. இதையடுத்து சல்மான் பட் நியமிக்கப்படலாம். இதற்கு பயிற்சியாளர் வக்கார் யூனிஸ் மற்றும் முன்னாள் அணித்தலைவர் வசிம் அக்ரம் ஆதரவு தெரிவித்துள்ளனர்.

ஒரு நாள் போட்டிகளுக்கு அப்ரிடி அணித்தலைவராக நீடிப்பார். இவரது தலைமையில் இலங்கையில்நடக்கவுள்ள ஆசியகோப்பை தொடரில் (ஜூன் 15-25) பாகிஸ்தான் அணி பங்கேற்கும்.

# டெஸ்ட் போட்டிகளும் விரைவில் பகலிரவு ஆட்டமாக நடைபெறும்

## ஐ.சி.சி. தலைவர் தெரிவிப்பு

டெஸ்ட் போட்டிகளும் விரைவில் பகலிரவு போட்டியாக நடத்தப்படும் என்று சர்வதேச கிரிக்கெட் சபைத் (ஐ.சி.சி.) தலைவர் டேவிட் மோர்கன் தெரிவித்துள்ளார்.

மேற்கிந்தியத்தீவுகளின் பார்ப்படோஸில் நேற்றுமுன்தினம் செய்தியாளர்களைச் சந்தித்த அவர் இது குறித்து மேலும் கூறியதாவது,

இருபது-20 போட்டிகள் அதிகவரவேற்பைப் பெற்றிருந்தாலும் டெஸ்ட் மற்றும் ஒரு நாள் போட்டிகளும் தொடர்ந்து நடைபெறும்.

இங்கிலாந்தில் இன்றும் டெஸ்ட் போட்டிகளுக்குதான் அதிக வரவேற்புள்ளது. இங்கிலாந்து மற்றும் தென்னாபிரிக்க அணி கள் அவுஸ்திரேலியாவுக்குச் சென்று விளையாடும் டெஸ்ட் மற்றும் ஒரு நாள் போட்டி களுக்கான டிக்கெட்டுக்கள் விரைவில் விற்றுத் தீர்த்து விடுகின்றன.



டெஸ்ட் போட்டிகளை பகலிரவு ஆட்டமாக நடத்தும் திட்டம் விரைவில் நடைமுறைக்கு வரும். பகலிரவு டெஸ்ட் ஆட்டங்கள் முதல் முறையாக அவுஸ்திரேலியா அல்லது இந்தியாவில் நடத்தப்படும்.

அண்மையில் நடந்துமுடிந்த இருபது-20 உலகக் கோப்பை குறித்து கருத்துத் தெரிவித்த அவர் போட்டி எதிர்பார்க்கப்பட்டதை விட சிறப்பாகவும் விறுவிறுப்பாகவும் நடந்து முடிந்தது. கிரிக்கெட் ஆட்டம் நடைபெறும் போது உள்ளூர் ரசிகர்களின் ஆதரவே மிக முக்கியம் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரன்...

அதில் கலந்து கொண்டிருந்த நாடாளுமன்ற உறுப்பினரும் முன்னாள் இராணுவத் தளபதியுமான ஜெனரல் சரத் பொன்சேகா அதிரடித் தகவல்களை வெளி யிட்டார்.

அதில் அவர் கூறியதாவது,

சர்வதேச நெருக்கடி குழு மற்றும் சனல்-4 தொலைக்காட்சி நிறுவனம் முன்வைப்பது போல போர்க் குற்றங்கள் எதுவும் இடம்பெற வில்லை. அவ்வாறு இடம்பெற்றிருப்பதாக இடம், நேரம் உள்ளிட்ட ஆதாரங்கள் முன் வைக்கப்படுமாயின அவை தொடர்பில் விசாரணை செய்ய வேண்டிய கடப்பாடு அரசாங்கத்திற்கு இருக்கின்றது.

போர்க் குற்றங்கள் தொடர்பில் எனக்கு தனிப்பட்ட ரீதியில் தகவல்கள் கிடைக்குமாயின் எனக்குத் தெரிந்ததை மறைக்க மாட்டேன்.

ஒழுக்கம் நிறைந்த எமது இராணுவத்தினர் சாதாரண மக்களுக்கு குறைந்தளவிற்குப் பாதிப்பை ஏற்படுத்தும் வகையில் யுத்தத்தை முன்னெடுத்தனர். இதனால் மூன்று இலட்சம் மக்கள் காப்பாற்றப்பட்டதுடன் 10 ஆயிரம் புலிகள் கைது செய்யப்பட்டனர்.

### இராணுவக் குற்றத்தை மறைக்கவில்லை

நான் இராணுவக் குற்றத்தை மறைக்கவில்லை என்பதுடன் அவ்வாறான குற்றங்களைச் செய்தவர்கள் கடந்த காலங்களில் தண்டிக்கப்பட்டனர். சர்வதேச சட்டங்களுக்கு அமைவாகவே யுத்தம் முன்னெடுக்கப்பட்டது.

இராணுவத்திற்கு வெளியே இருப்பவர்களின் கரங்களில் போர்க் குற்றம் கறை படிந்திருந்தால் அவற்றுக்கு எதிராக விசாரணை நடத்தி நடவடிக்கை எடுக்கவேண்டும். படையினர் எனது உத்தரவின் கீழ் செயற்பட்டனர். சட்ட ரீதியற்ற அறிவுறுத்தல்களுக்கு அமைய படையினர் நடந்து கொள்வதற்கு நான் இடமளிக்கவில்லை.

எனினும் தனது அறிவுரைகளை படையினர் பின்பற்றினர் என பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஊடகங்களுக்கு தெரிவித்திருக்கின்றார்.

ஓராண்டு கழிந்த போதும் இராணுவ வெற்றி மக்களின் வெற்றியாக மாற்றப்படவில்லை.

ஒரு வருடத்திற்கு முன்னர் மக்கள் அனைவரும் எதிரியின் பக்கமாக திருப்பப்பட்டமையினால் மக்கள் தங்களுடைய வாழ்க்கையில் மாற்றங்களை எதிர்பார்க்காமலும் கல்வி, சுகாதாரம் மற்றும் உணவு விடயங்களில் கூட கவனத்தை செலுத்தாது இருந்தனர்.

யுத்தத்தில் உயிர்களைத் தியாகம் செய்த வீரர்கள் உடலுறுப்புகளை இழந்த வீரர்களுக்கு இத் தருணத்தில் எனது கௌரவத்தையும் மரியாதையையும் செலுத்துகின்றேன். எனினும் இராணுவ வெற்றி அர்த்தப்படுத்தப் படாமையினால் வெற்றியை கொண்டாடுவதற்கு இயற்கை கூட ஒத்துழைப்பதற்கு மறுத்து விட்டது.

நாட்டு மக்கள் கடந்த 30 வருடங்களாக அனுபவித்த யுத்தத்தை நிறைவுக்குக் கொண்டு வந்ததன் பின்னர் நிலையான சமாதானத்தை அனுபவித்து கொண்டிருக்கின்றனர். இவ்வாறான நிலையில் நாடு தேசியம் என்ற ரீதியில் கடந்த ஒரு வாரமாக கொண்டாடப்படுகின்றது.

நாங்கள் இராணுவ வீரர்களை மறக்கவில்லை. எனினும் இராணுவ கொண்டாட்டங்களை அனுஷ்டிப்பதற்கு கூட இயற்கை ஒத்துழைக்கவில்லை.

கொண்டாட்டம் என்று கதைக்கின்றனரே தவிர அங்கு எவ்விதமான திட்டங்களும் இல்லை என்பதுடன் இராணுவ வெற்றி மக்களின் வெற்றியாக மாற்றப்படவில்லை.

யுத்தத்திற்கு பின்னர் மக்கள் எதிர்பார்த்திருந்த மாற்றங்கள் ஏற்படவில்லை. மக்கள் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம்கொடுக்கின்றனர். நிர்வாக பிரச்சினையும் இருக்கின்றது. இயற்கை ஒத்துழைக்க மறுத்தமைக்காக வருந்துகின்றேன். எனினும் அதனை எம்மால் மாற்றியமைக்க முடியாது.

கடந்த ஒரு வருடத்தில் மக்களின் வாழ்க்கையில் மாற்றத்தை காணவில்லை. மக்களின் நலன்புரி விடயங்கள், கல்வி, சுகாதாரம் உள்ளிட்ட விடயங்களில் எவ்விதமான அபிவிருத்தியையும் காணமுடியவில்லை.

நாட்டில் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும். நலன்புரி, பொருளாதாரம், அபிவிருத்தி மற்றும் ஏனைய துறைகளிலும் மாற்றங்களை ஏற்படுத்த வேண்டும். அவற்றை நிர்வாகம் செய்வதற்கு தவறிவிட்டது.

ஒரு வருடத்திற்குள் படையினருக்கு என்ன நடந்திருக்கின்றது? படையணிகளுக்கு என்ன நடந்திருக்கின்றன? ஜெனரல் தரத்தைச் சேர்ந்தவர்களில் மூவர் வீட்டு அனுப்பப்பட்டுள்ளனர்.

பலர் பதவியிலிருந்து நீக்கப்பட்டுவிட்டனர். படையணிகளை சேர்ந்த பலர் சிறைச்சாலைகளில் அடைக்கப்பட்டுள்ள போதிலும் சிலரே விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

படையினரின் பிள்ளைகள் பாடசாலைக்கு செல்ல முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது. அவர்களின் குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் சாப்பிட முடியாத நிலையில் இருக்கின்றனர்.

இவை எல்லாம் இராணுவத்தினரை அவமானப்படுத்தும் நடவடிக்கையாகும். படையினர் மனதளவில் பாதிக்கப்பட்டுள்ளனர். இவ்வாறானதொரு நிலைமையினை மக்கள் எதிர்பார்க்கவில்லை.

### ஜனாதிபதி நாடு திரும்பிய போது யுத்தம் நிறைவடையவில்லை

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கட்டுநாயக்க விமான நிலையத்தில் முழந்தாளிட்டு வணக்கம் செலுத்தும் போது இறுதிக்கட்ட யுத்தம் நிறைவடைந்திருக்கவில்லை.

சீனாவினால் விடுக்கப்பட்டிருந்த அழைப்பினை காலம் தாழ்த்தி 2009ஆம் ஆண்டு மே மாதம் 11 ஆம் திகதியே பயணமானேன். எனது பயணத்தை முடித்துக் கொண்டு 17ஆம் திகதி இரவு 9 மணிக்கு கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தேன். நான் அங்கு தங்கிருந்த காலத்தில் கொழும்புடன் தொடர்பினை ஏற்படுத்தி கொண்டே இருந்தேன் அதிகாரிகளும் என்னுடனேயே இருந்தனர்.

நான் நாட்டிற்கு திரும்பிய மறுநாள் 18 ஆம் திகதி அதிகாலை 2.30 மணியளவில் இறுதிக்கட்ட யுத்தம் ஆரம்பிக்கப்பட்டது. 19 ஆம் திகதி காலை 9.30 மணிக்கு புலிகள் 500க்கு 500 மீற்றருக்குள் சுற்றிவளைத்து இறுதி தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. அந்த தாக்குதலில் பிரபாகரன் உட்பட 600 புலிகள் பலியானார்கள்.

ஜனாதிபதி நாடாளுமன்றத்தில் உரையாற்றியதன் பின்னர் நான் நர்டாளுமன்ற வளாகத்திற்கு வெளியே சென்று கொண்டிருந்த போதே பிரபாகரனின் சடலம் கண்டெடுக்கப்பட்டதாக எனக்கு தகவல் கிடைத்தது.

யுத்தம் 19ஆம் திகதியே நிறைவடைந்தது. ஜனாதிபதி கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் 16ஆம் திகதி முழந்தாளிடும் போதும் யுத்தம் நிறைவடைந் திருக்கவில்லை என்றார்.

### பிரபாகரனுக்கு உடை மாற்றியிருக்கவில்லை

இறுதிக்கட்ட யுத்தத்தில் பலியான பிரபாகரனின் மகன் சார்ல்ஸ் அன்ரனி உள்ளிட்டோரின் சடலங்களை சீருடையுடனேயே மீட்டெடுத்தோம்.

மரபுவழி யுத்தத்தில் ஈடுபடு வோரின் சடலங்களை மீட்கின்ற போது அவர்களை சீருடையுடன் காண்பிப்பதில்லை என்பதுடன் விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரனுக்கு உடை மாற்றவில்லை.

பிரபாகரனின் சடலம் மீட்கப்பட்டதன் பின்னர் அங்கிருந்த படையினர் மட்டுமல்ல; ஊடகவியலாளர்களும் புகைப்படம் எடுத்தனர். எனினும் அவருக்கு ஆடையை மாற்றவில்லை என்றார். (ச-5)

# இராணுவ முகாம்களை அமைக்க தனியாரின் காணிகள் அபகரிப்பு

(கொழும்பு)

முல்லைத்தீவு மாவட்டத்தில் இராணுவ முகாம்கள் அமைக்கப்படவுள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன. இதற்காக தனியார் காணிகள் கையகப்படுத்தப்படுவதாகவும் கூறப்படுகிறது.

அந்தப் பகுதியில் மீள்குடியேற்றத்துக்காக அனுப்பப்பட்ட மக்கள் அங்கு குடியேற்றப்படவில்லை என்றும் அந்தப் பகுதி இராணுவத்தினரால் எடுக்கப்பட்டுள்ளது என்றும் தனக்கு முறைப்பாடு வந்துள்ளதாக துணை அமைச்சர் விநாயமூர்த்தி முரளிதரன் தெரிவித்தார்.

இதன் காரணமாக மக்கள் சலிப்படைந்துள்ளதாகவும் அவர் கூறுகிறார். முறிகண்டிப் பகுதியில் சாந்தபுரம் என்கிற பிரதேசத்திலேயே இப்படியான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாகவும் அவர் கூறினார்.

அந்தப் பகுதியில் அரச காணிகள் இருக்கும் நிலையில் இராணுவத்தின் தேவைகளுக்கு தனியார் காணிகளை எடுக்க வேண்டிய அவசியம் இல்லை. இந்த விடயம் தொடர்பில் பாதுகாப்புச் செயலர் மற்றும் ஜனாதிபதி ஆகியோருடன் தான் பேசவிருப்பதாகவும் அவர் பி.பி.சி.தமிழோசையிடம் தெரிவித்தார்.

எனினும் இதுவரை சர்ச்சைக்குரிய இந்த விடயம் தொடர்பில், இராணுவத்துக்கு காணிகள் ஏதும் வழங்கப்படவில்லை என்றும் அவர் சுட்டிக்காட்டுகிறார்.

முறிகண்டிப் பகுதியில் இராணுவ முகாம்கள் அமைப்பதற்காகவே இந்தக் காணிகள் எடுக்கப்படுகின்றது என்று தனக்கு வந்த தகவல்களின் ஊடாக அறிந்து கொண்டதாகவும் அவர் கூறுகிறார். (ச-5,9)

# சனல்-4 தொலைக்காட்சி...

கடந்த வருடமும் அரசாங்கத்திற்கு அபகீர்த்தி ஏற்படுத்தும் வகையில் சனல்-4 தொலைக்காட்சி வீடியோக் கட்சி ஒன்றை ஒளிபரப்பியது. அந்தக் காட்சி முற்றிலும் பொய்யானது என விஞ்ஞான ரீதியில், பரிசோதனை மூலம் நிரூபிக்கப்பட்டதுடன் அந்தத் தொலைக்காட்சிச் சேவைக்கு எதிராக அரசாங்கம் சவால் விடுத்தது.

எனினும் இதுவரை அந்தத் தொலைக்காட்சிச் சேவை எமது சவாலுக்கு எவ்வித பதிலையும் அளிக்கவில்லை. எனவே இவ்வாறான செயற்பாட்டை அந்தத் தொலைக்காட்சி நிலையம் ஒரு வாடிக்கையாகக் கொண்டிருப்பதாகவே அரசாங்கம் கருதுகின்றது என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

### சரத் பொன்சேகா மறுப்பு

இலங்கை அரசாங்கம் ஒருபோதும் போர்க் குற்றங்களில் ஈடுபடவில்லை எனவும் அவ்வாறு ஈடுபட்டிருந்தால் அது குறித்து அறியத் தருவதாகவும் நாடாளுமன்ற உறுப்பினர் ஜெனரல் சரத் பொன்சேகா தெரிவித்தார்.

நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். சனல்-4 தொலைக்காட்சியில் ஒளிபரப்பான காட்சிகள் தொடர்பில் ஊடகவியலாளர் எழுப்பிய கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையிலேயே நாடாளுமன்ற உறுப்பினர் சரத் பொன்சேகா இவ்வாறு தெரிவித்தார். (ச-5)

# யுத்தக் குற்றச்சாட்டை...

த பினான்சியல் டைம்ஸ் என்ற இணையத்தளத்திற்கு அமெரிக்க ராஜாங்கச் செயலாளர் ஹிலாரி கிளின்டன் வழங்கிய செவ்வி ஒன்றில் இதனைத் தெரிவித்துள்ளார்.

கடந்த 30 வருடங்களாக விடுதலைப்புலிகளுக்கும் அரசாங்கத்திற்குமிடையில் நடைபெற்ற யுத்தத்தில் இரு தரப்பும் மேற்கொண்ட போர் முறை குற்றங்கள் தொடர்பில் விசாரணை மேற்கொள்ளப்பட வேண்டியது அவசியம்.

யுத்தம் நிறைவடைந்த பின்னர் அதன் காயங்கள் தொடர்ந்தும் காணப்படுவதாகவும் இனப்பிரச்சினைக்கு உரிய தீர்வினை முன்வைப்பதன் மூலம் அதனை முடிவுக்குக் கொண்டு வர முடியும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

யுத்த காலத்தில் எத்தனை ஆயிரம் பொது மக்கள் கொல்லப்பட்டனர் என்பதை மறைத்து அரசாங்கத்தினால் தீர்வுத் திட்டம் ஒன்றை முன்வைக்க முடியுமாக இருக்கலாம்.

ஆனால் அதன் மூலம் இலங்கை அரசாங்கத்தினால் சமாதானத்தை வெற்றி கொள்ள முடியுமா? எனஅவர்கேள்வி எழுப்பியுள்ளார். (ச-5)

புதிய மெருகுடன்
இசைக்கொலுவேறிட..
புகழ்பெற்ற கலைஞர்களின் கைவண்ணத்தில்
யாழ்
சப்தஸ்வரா
இசைக்குழு
SAPTHASWERA MUSIC GROUP
உங்கள் விழாக்களை மெருகேற்ற அழைத்து மகிழுங்கள்..
தொடர்புகளுக்கு:
ஸ்ரீகுகன்
விநாயகர் வீதி,
நல்லூர் வடக்கு, கல்வியங்காடு.
0776980573 / 0213216621
இரா.சிவராமன்
அரசவீதி, நல்லூர்,
யாழ்ப்பாணம்.
077 4707629, 021 4909203
(சி-298)

# யாழ்ப்பாண மாநகர சபை...

பிறப்பிக்கப்பட்டுள்ளது.

அதேநேரம் இந்த விளம்பரப் பிரசுரிப்பில் முக்கிய பங்கை வகித்ததாகக் கூறப்படும் மேயரின் செயலாளரான அவரின் கணவர் பற்குணராசாவை இன்று பகல் 12 மணிக்குள் கைது செய்து நீதிமன்றில் ஆஜர் செய்யுமாறு நீதவான் பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.

இந்த விளம்பரம் நீதிமன்றத்தை அவமதிப்பதாக அமைந்துள்ளதாகக் கூறி நீதிமன்றம் மறுப்பு விளம்பரத்தைப் பிரசுரிக்குமாறு உத்தரவிட்டது.

எனினும் பிரசுரிக்கப்பட்ட விளம்பரம் திருப்தி தரவில்லை எனக் கூறிய நீதிமன்றம் மீண்டும் மறுப்பு விளம்பரத்தைப் பிரசுரிக்குமாறு மேயருக்கு உத்தரவிட்டது.

இதற்கிடையில் நீதிமன்ற உத்தரவின் பேரில் இந்த விளம்பரம் தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார் விளம்பரத்திற்கும் தமக்கும் தொடர்பில்லை என்ற மாநகர ஆணையாளரின் வாக்குமூலத்தை நீதிமன்றத்தில் சமர்ப்பித்துள்ளனர்.

அத்துடன் இந்த விளம்பரப் பிரசுரிப்புத் தொடர்பில் மேயர் அறிந்திருந்ததாகவும் அதேநேரம் அவரின் கணவரும் மேயரின் செயலாளருமான பற்குணராசாவே விளம்பர பிரசுரிப்பில் முக்கிய பங்கை வகித்ததாகப் பொலிஸார் நீதிமன்றத்திற்கு அறிவித்திருந்தனர். (எ-1,30)

பொருளியற் கல்லூரி இணுவில்
BARATHY சித்தன்கேணி (இரு இடத்திலும்)
மாணவர்களின் பொருளியல் குறைபாட்டை தீர்க்க மீண்டும் உங்கள் மண்ணில்
பொருளியல்... திரு. S. மகேந்திரன்
A/L 2010, DAY, 2011,2012
அனைத்துப் பிரிவினருக்கும்.
உங்கள் அனுமதிகளைப் பெற்றுக் கொள்ளவும்
குறிப்பு:- சகல வகுப்பினர்க்கும் பொருளியல் ஆசான் S.வரதராஜன் ஆசிரியர் அவர்களின் அனுபவத்திலான பயிற்சிப் புத்தகங்கள் (Work Book) வழங்கப்படுவதுடன் அலகு ரீதியான மாதிரிப் பரீட்சைகளும் எமது நிறுவனத்தில் நடைபெறும்.
(சி-297)

# யாழ்.இணைப்...

வட மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி ஆகியோர் ஜனா திபதி மகிந்த ராஜபக்ஷவினால் நியமிக்கப்பட்டுள்ளனர்.

உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் வழங்கப்பட்டுள்ள இந் நியமனத்தின் மூலம், மக்கள் சக்தி அமைப்பினால் முன்னெடுக்கப்படும் பிராந்திய அபிவிருத்தித் திட்டங்கள் மற்றும் கிராமிய அபிவிருத்தித் திட்டங்கள் என்பவற்றுடன் கிராம எழுச்சித் திட்டத்தின் கீழ் பிரதேச செயலக ரீதியாக மேற்கொள்ளப்படும் அனைத்து நடவடிக்கைகளின் அமுலாக்கம், வழிநடத்துதல் மற்றும் கண்காணிப்பு ஆகிய நடவடிக்கைகளை மேற்கொள்ளும் இணைப்புக் குழுவின் இணைத் தலைவர்களாக இவர்கள் விளங்குவார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (ச-5)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 21.05.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.